# உதயன்



www.onlineuthayan.com

34 பக்கங்கள் சுடர் 27 கதிர் 354 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 29 புதன்கிழமை (14/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## வன்னியின் இரத்தக் களரியான இறுதிப்போரின் போது

# தமிழரைக் காக்க தவறியது ஐ.நா.

### உள்ளக விசாரணை அறிக்கை கசிவு

கொழும்பு, நவம்பர் 14

வன்னியில் நடை பெற்ற இறுதிப் போரின் போது தமிழ் மக்களைக் காக்க ஐக்கிய நாடுகள் சபை தவறி விட்டது என்று அதன் உள்ளக விசாரணை அறிக்கை குற்றஞ்சாட் டியுள்ளது.

இறுதிப் போரில் ஐ.நா. நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை நடத் துவதற்காக நியமிக்கப் பட்ட உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியே கசிந்துள்ளது.

கசிந்த ஆவணத்தில் உள்ளடங்கியுள்ள வி யங்களை பி.பி.சி. உலக சேவை நேற்றிரவு வெளி யிட்டது.

**மிகப் பெரிய தோல்வி**

இலங்கையில் இரத் தக் களரியை ஏற்படுத்திய போரின் இறுதி மாதங் களில், பொதுமக்களைக் காக்கும் தனது பிரகட னத்தில் – பொறுப்பில் – இருந்து ஐ.நா. தவறி விட் டதாக அந்த அறிக்கை கடுமையான விமர்சனம் செய்துள்ளது என்று பி.பி.சி. குறிப்பிடுகின்றது.

''இலங்கையில் இடம் பெற்ற சம்பவங்கள் ஐ.நா

பார்க்க பக்கம் 4

### அரசின் தாக்குதல்களால்தான் மக்களுக்கு அதிக இழப்பு என்பதை மறைத்தது ஐ.நா.

கொழும்பு, நவ.14

இலங்கை அரசின் எறிகணைத் தாக்குதல்க ளால்தான் பொதுமக்க ளுக்கு அதிகமான இழப் புக்கள் ஏற்பட்டன என்ற விவரம் தெரிந்திருந்த போதும் ஐ.நா. அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை என்று அதன் உள்ளக விசா ரணை அறிக்கை விமர் சித்துள்ளது.

கொழும்பு அரசின் அழுத்தங்களால் அந்த விவரங்களை ஐ.நா. ஒரு போதும் வெளியிடவில்லை என்று அறிக்கை குற்றஞ் சாட்டுகிறது. அந்தச் சமயத் தில் பொதுமக்கள் மீது தாம் எறிகணைத் தாக்குதல்களை நடத்தவில்லை என்று இலங்கை அரசு கூறிக்கொண்டிருந் தது.

பொதுமக்களின் இழப்பு எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது என் பதை வலுவான உத்திகள் மூலம் தெளிவாகக் கணக் கிட்டு வருவதாக ஐ.நா. கூறிக்கொண்டாலும், அந்த விவரங்களை அது வெளியிடத் தவறியுள் ளது என்கிறது அறிக்கை.

தகவல்களை உறுதி செய்ய முடியவில்லை என்பதால்தான் அவற்றை வெளியிடவில்லை என்று ஐ.நா. வாதாடுகிறது. ஆனால், ஐ.நா. கட்டமைப்புக்குள் ஒரு விடயத்துக்காக இன் னொரு விடயத்தை விட்

பார்க்க பக்கம் 4

## இலங்கையும் இந்தியாவும் '13' ஐ ஒழிக்க ஒப்பந்தம்

### ஐ.தே.கட்சி வெளியிட்டது அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, நவ.14

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஒழிக்கும் பின் னணியில், இந்திய-இலங்கை அரசுகளுக்கு இடையில் இர கசிய உடன்பாடொன்று செய் யப்பட்டுள்ளது என்றும் ஐக் கிய தேசியக் கட்சி நேற்று அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டது.

ஐ.தே.கவின் வெளிவிவ காரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல இந் தத் தகவலைப் பத்திரிகை யாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

**இந்தியாவின் மௌனம்**

13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது குறித்து ஆளுந்த ரப்பினரால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை நாட்டில் பெரும் சர்ச் சைகளைக் கிளப்பியுள்ளன.

பார்க்க பக்கம் 4

### இந்தியக் கைதிகளை பார்வையிட்டார் தூதர்

**வெலிக்கடைச் சிறையில்**

கொழும்பு, நவ 14

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள இந்தி யக் கைதிகளை இந்தியத் தூதர் அசோக். கே. காந்தா தலை மையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

''சிறைச்சாலையில் ஏற் பட்ட கலவரத்தினால் இந்தியக் கைதியொருவரின் கண் பாதிக் கப்பட்டுள்ளது. இவரைத் தவிர சிறையிலுள்ள இந்தியக் கைதிகள் 38பேருக்கும் கலவ ரத்தினால் எவ்வித பாதிப்பும் இல்லை'' என்று அவர்களைப் பார்வையிட்ட பின்னர், இலங் கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலவரத்தை அடுத்தே வெலிக்கடை சிறை யில் உள்ள கைதிகளை அதி காரிகள் பார்வையிட்டுள்ளனர்.

மோதலின் அனுபவத்தை இந்திய அதிகாரிகளுக்கு கைதி கள் விவரித்தனர். சிறையில் கல வரம் மூண்ட போது, சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இந்தியக் கைதிகளும் தமிழ் நாட்டுக் கடற்றொழிலாளர் கள் ஐந்து பேரும் வெவ்வேறு இடங்களில் இருந்தனர் என்று தெரிவித்துள்ளனர். (த-5)

## அரச தாதியர்கள் நாளை முழுநேர பணி நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 14.

யாழ். போதனா வைத் தியசாலை உட்பட நாடெங் கிலும் உள்ள வைத்திய சாலைகளில் அரச தாதிய உத்தியோகத்தர்கள் நாளை சுகவீனவிடுப்புப் போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர். யாழ். போதனா வைத்திய சாலை அரச தாதியர் சங்கத் தலைவர் என்.நற்குணராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐந்து அம்சக்கோரிக்கை களை முன்வைத்து தாதியர் கள் போராட்டம் மேற்கொள் ளவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

✸ வாரத்தில் 5 நாள்களை மட்டும் வேலைநாள்களாக

பார்க்க பக்கம் 4

### நீதியரசர் விவகாரம்; நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, நவ.14

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா வுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை ஆரா யும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின்றன.

11 பேர் அடங்கிய இந்த தெரிவுக் குழுவின் தலை

பார்க்க பக்கம் 4

## வடக்கில் அமைதியான தீபாவளி



யாழ்ப்பாணம், நவ. 14.

வடக்கில் தீபாவளிப் பண்டிகை நேற்று அமைதியான முறையில் கழிந்தது. யாழ்ப்பாணத்தில் தீபாவளிக் கொண் டாட்டங்கள் சற்றுக் களைகட்டியிருந்தபோதும் வன்னியில் கொண்டாட்டங்கள் இடம்பெறவில்லை.

நேற்றுக்காலை சகல இந்துக் கோயில்களிலும் விசேட பூசை வழிபாடுகள் நடந்தன. பொதுமக்கள் தமது குடும் பங்கள் சகிதம் புத்தாடையணிந்து ஆலய வழிபாடுகளில் அமைதியாக ஈடுபட்டனர்.

பார்க்க பக்கம் 4

## 1,000 குடும்பங்களுக்கு காணி புதுக்குடியிருப்பு பகுதியில் இல்லை

### ஆனால் 1,000 ஏக்கர் கேட்கிறது இராணுவம்

கிளிநொச்சி, நவ.14

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள 1,111 குடும்பங்கள், தமக்கு சொந் தக் காணி இல்லையென புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் காணி கோரி விண்ணப்பித்திருக் கின்றன. இதேவேளை இந் தப் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள ஆயிரம் ஏக்கர் நிலத்தை அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணு வத்தினர் மாவட்டச் செயல கத்திடமும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடமும்

பார்க்க பக்கம் 4

## வன்னியில் படையினரின் தீபாவளி

கிளிநொச்சி, நவ.14

கிளிநொச்சிப் பிரதேசத் தில் நேற்று பரவலாக இராணு வத்தினர் வீடுவீடாகச் சென்று [illegible] கொடுத்து வாழ்த்துக்களைப் பரிமாறினர். வன்னியில் மக் கள் தீபாவளிக் கொண்டாட் டங்களில் பெரியளவில் ஆர் வம் காட்டாதபோதும் படை யினர் எல்லா இடங்களிலும் அதனை விமரிசையாகக் கொண் [illegible] எமது செய்தி யாளர்கள் தெரிவித்தனர். வீதி களில் சென்றவர்களை வழி மறித்தும் தீபாவளி அட்டை களைப் படையினர் பரி மாறினர்.

'இனிய தீபாவளி வாழ்த் துக்கள்' என தலைப்பிடப் பட்ட அந்த அட்டையில் உங் களுக்கும் உங்கள் குடும் பத்தினருக்கும் உங்கள் உறவு களான எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்' என எழுதப்பட்டிருந்தது.

''இருள்நீக்கி அனைவர் வாழ்விலும் ஒளியேற்றும் இந் தத் தீபாவளி நன்னாளில் எம் சிந்தனைகள் அனைத்தையும் ஒருதாய் மக்களாக முன்வைப்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டெங்கு' அபாயம் தொடர்கிறது நேற்றும் அறுவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ. 14.

நடப்பு மாதத்தின் இதுவரையான நாள்களில் மட்டும் 32 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொற்றுக்கு இலக்காகிய 6 பேர் நேற்று மட்டும் சேர்க்கப்பட்டனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாரிகாலம் என்பதனால் டெங்குத் தொற்றுத் தீவிரமாகியுள்ளது. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பரவல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆரம்பத்தில் சில இடங்களில் மாத்திரமே டெங்குக் காய்ச்சலின் தாக்கம் உணரப்பட்டது. தற்போது குடா நாட்டின் சகல பகுதிகளிலும் டெங்குத் தாக்கம் உணரப்பட்டுள்ளது.

கொடிகாமம், கொழும்புத்துறை, பாஷையூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து ஒவ்வொருவரும், ஆனைக்கோட்டையில் இருந்து 2 பேருமாக 6 பேர் நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த வருடம் ஜனவரியிலிருந்து நேற்றுவரை 423 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்கின்றன புள்ளிவிவரங்கள்.

டெங்குத் தாக்கம் பல இடங்களுக்கும் தற்போது பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த முழுமையான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவருமே இந்த விடயம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

வீட்டின் உட்புறங்களிலும், வீட்டுக்கு வெளியேயும் நுளம்புகள் பெருகுவதற்கும், வளர்வதற்குமான சூழல் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருங்கள். வீட்டில் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்துங்கள். நுளம்புக் கடியிலிருந்து முற்றுமுழுதாக விலகி பாதுகாப்பாக இருங்கள்'' என்று அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.(ஐ-4)

## டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த விமானம் மூலம் மருந்து விசிறல்

கொழும்பு, நவ. 14

டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக, விமானங்களிலிருந்து பீ.டீ.ஐ. பக்ரீரியாவை விசிறுவதற்குக் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

டெங்கு நுளம்பு பரவுவதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் இந்தத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரத் தீர்மானித்ததாகவும் மழை காரணமாக செயற்படுத்த முடியாமல் போனதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம் பீ.டீ.ஐ. பக்ரீரியா விமானங்களிலிருந்து விசிறப்படவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் டெங்கு நுளம்பு பெருகுவதன் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகச் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-5)

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட ஆசிரியர்கள் தீர்மானம்

### அடுத்த மாதம் 4 ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ. 14.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கை ஆசிரியர்கள் தமது சங்கங்களிடையேயான சந்திப்பொன்றை நேற்றுக் கொழும்பில் நடத்தினர்.

இதன்போதே தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதென்ற தீர்மானம் எடுத்துள்ளதாக அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ராலின் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கடந்த 24 ஆம் திகதி இராஜகிரியவிலிருந்து கல்வி அமைச்சின் அலுவலகம் வரையான கவனயீர்ப்பு நடைபவனியில் ஈடுபட்டனர்.

இதன் நிறைவில் தமது கோரிக்கைகள் இன்னும் இருவாரங்களில் நிறைவேற்றப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

### கல்வி அமைச்சின் எமது கோரிக்கைகள் தொடர்பான அசமந்தமே காரணம்

எனினும் கல்வி அமைச்சு இதுவரை எந்தவித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

எனவே நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தன்படி நாடளாவிய ரீதியாக ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் என்று கூறினார் ஸ்ராலின்.

இதேவேளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சுடன் ஆசிரியர் சங்கத்தினர் இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்.

எனினும் இந்தக் கலந்துரையாடலில் தமக்கு எந்த வித நம்பிக்கையும் ஏற்படப் போவதில்லை. காரணம் கல்வி அமைச்சின் எமது கோரிக்கைகள் தொடர்பான அசமந்தமே என்றார் அவர். (ஐ-16-288)

## சிறுவன் குத்திக் கொலை

கொழும்பு, நவ. 14

மாத்தறை மாவட்டத்தில் கூரான ஆயுதத்தால் குத்தி சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்டுள்ளான்.

சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.10 மணியளவில் இடம்பெற்றிருப்பதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மாத்தறை, மாவட்டத்தின் கின்னலிய பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவனே கொலை செய்யப்பட்டுள்ளான்.

சிறுவனின் கொலைச் சம்பவம் தொடர்பில் மாத்தறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-5)

## வயோதிபப் பெண்ணின் தோடுகள் அபகரிப்பு

வலி,தென்மேற்கு, நவ.14

இரவு நேரம் சமையலறை வழியாக வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு தனிமையில் இருந்த வயோதிபத் தம்பதிகளை பயமுறுத்தி ஓர் இடத்தில் இருந்தியுள்ளனர். பின்னர் சல்லடை போட்டு வீட்டை தேடியும் ஒன்றும் கிடைக்காததினால் வயோதிபப் பெண் அணிந்திருந்த தங்கத் தோடுகளைக் கழற்றிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் சுதுமலை தெற்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்த வயோதிபத் தம்பதிகளின் நான்கு பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள். இவர்கள் அண்மையில் வீட்டுக்கு வந்து பெற்றோரைப் பார்த்து விட்டு திரும்பிச் சென்றுள்ளனர்.

பிள்ளைகள் வந்து போனதை அறிந்து கொண்ட திருடர்,அங்கு திருடும் நோக்கத்தில் சம்பவதினம் இரவு 8 மணியளவில் சமையலறைக் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

வயோதிபத் தம்பதிகளை சத்தம் போடக் கூடாது என்று பயமுறுத்தியுள்ளனர். வயோதிபக் கணவனைப் பொல்லால் தாக்கி ஓரிடத்தில் இருத்தி விட்டு தாலிக் கொடி, சங்கிலி போன்ற தங்க நகைகளை எங்கு மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டு வீட்டை சல்லடை போட்டு தேடினார்கள்.

ஆனால் அங்கு எவையும் திருடர்களின் கையுக்கு அகப்படாத நிலையில் தோடுகளை அபகரித்துள்ளனர் என்று கூறப்பட்டது. (ம-115)



யாழ். ஆஸ்பத்திரி வீதியை நேற்று 51ஆவது படைப் பிரிவினர் மின் விளக்குகளால் அலங்கரித்திருந்தனர். இந்த நிகழ்வை யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆரம்பித்து வைத்தார்.(4)

## பட்ஜெட்டில் எமக்கு எதுவுமே இல்லை

### சீறுகிறது விரிவுரையாளர் சம்மேளனம்

கொழும்பு, நவ. 14

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த அரசு வரவு-செலவுத் திட்டத்தில் யோசனைகள் எவையும் முன் வைக்கப்படவில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள யோசனைகளை குறித்து முழுமையாக ஆராய்ந்த பின்னரே தாம் இந்த முடிவுக்கு வந்ததாக அந்த சம்மேளனத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிரி தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு கொண்டு வரப்பட்ட சமயத்தில் வரவு-செலவுத் திட்ட யோசனைகளில் தமது இரண்டு கோரிக்கைகள் தொடர்பில் இணக்கம் காணப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

## எத்தடை வரினும் தகர்ப்போம்!

### '13'ஒழிப்பு குறித்து அமைச்சர் விமலின் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்குத் தாம் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு இந்திய தடைபோட்டால் அதைத் தகர்த்து எறிந்து சட்ட ரீதியாகப் பதிலடி கொடுக்கப்படும் என்று சூளுரைத்துள்ளது தேசிய சுதந்திர முன்னணி. எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் 13 ஒழிப்புச் சமரிலிருந்து பின்வாங்கப்போவதில்லை என்றும் அது இடித்துரைத்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக் குத்தீர்வாக 1987ஆம் ஆண்டு இந்திய அரசின் தலைமைப்பீடத்துடன் இந்தப் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அன்று ஆட்சியிலிருந்த தலைவர்கள் இதனை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், தமிழர் தரப்பு அதைத் தீர்வாக ஏற்க மறுத்தது. அன்றிலிருந்து இன்று வரை அந்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருந்து வருகின்றது.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் அனைவரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தினர். இராஜதந்திரிகளுக்குப் பதிலளித்த அரசு, தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கு (13 பிளஸ்) தயார் என அறிவித்து சர்வதேசத்தை சமாளித்து வந்தது.

தற்போது 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையைப் பேரினவாத அமைப்பினரும், கடும்போக்குடைய அமைச்சர்களும் முன்னெடுத்து வருகின்றனர். இதற்குப் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்தவர் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

13ஆவது திருத்தத்தை நீக்க தேசிய சுதந்திர முன்னணியின் அமைச்சர் விமல் வீரவன்ஸ உயர் நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. உங்கள் கட்சி முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு இந்தியாவின் அழுத்தம் தடையாக இருப்பின் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்கவிடம் 'உதயன்' வினவியது.

பதிலளித்த அவர், ''இந்தியாவின் தலைமைப்பீடத்துடன் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டாலும் எமது அரசமைப்பில் தான் அந்தத் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது எமது நாட்டு விவகாரமாகும். இதில் இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. சிலவேளை 13 விவகாரத்தில் இந்தியா தலையிடுமாயின் அந்த விவகாரத்தை நாம் சட்ட ரீதியாகக் கையாள்வோம். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் பின்வாங்க மாட்டோம். அத்துடன், 13 ஒழிப்புச் சமருக்கு எத்தகைய தடைகள் வந்தாலும் நாம் பின்வாங்கப் போவதில்லை'' - என்றார்.

தற்போது 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையைப் பேரினவாத அமைப்பினரும், கடும்போக்குடைய அமைச்சர்களும் முன்னெடுத்து வருகின்றனர்.

13ஐ நீக்குவது குறித்தான மனு விரைவில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (உ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடித்த பாம்பை பிடித்த பெண்

படுக்கையில் வைத்து இளம் பெண்ணைக் கடித்தது விரிப்புடையன். உடனடியாக அவர் செயற்பட்டு மறு கையால் அந்தப் பாம்பைப் பிடித்து போத்தலில் அடைத்து விட்டார். இந்தத் துணிகரமான சம்பவம் நேற்று அதிகாலை மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது. படுக்கையில் வைத்து ஏதோவொன்று கடித்ததை உணர்ந்த குறித்த பெண் விளக்கை ஏற்றிப் பார்த்தார். பாம்பு ஊர்ந்து செல்வதை அவதானித்தார். உடனே செயற்பட்டு மறுகையால் அதனைத் துணிச்சலாகப் பிடித்தார். போத்தலில் அடைத்து பாம்புடன் விரைந்து வந்தார் வைத்தியசாலைக்கு.

அவர் தற்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரி விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மிருசுவில் வடக்கைச் சேர்ந்த பாலராஜா பாக்கியதேவி (வயது-27) என்னும் பெண்ணே பாம்பினால் கடியுண்டவர் ஆவார். (ஒ-9)

## நிகழ்வுகள் இன்று

**முதியோருக்கு அடையாள அட்டை வழங்கல்**

சுன்னாகம் மத்தி முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோருக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் தலைவர் யோகானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் குழுவில் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு வட மாகாண சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்பட்ட முதியயோர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. (ம-86)

**கௌரவிப்பு**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர், அருட் தந்தை டேவிற் சதனந்தன் சலேமனின் 25 வருட ஆசிரிய சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் விசேட ஆராதனையும் காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ம-23)

**சான்றிதழ் வழங்கல்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட விவசாய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (-9)

**பரிசளிப்பு**

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் மா.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் கலந்து கொள்வார். (ம-14)



சுன்னாதிட்டி காளி அம்பாள் கோயிலில் நேற்று கௌரிப் பூசைகள் இடம்பெற்றுக் காப்பு கட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.(ம)

# இந்திய மீனவர்கள் இங்கு வரவும் கடற்படையா வழங்குகிறது 'பாஸ்'?

## கேள்வி எழுப்புகிறார் தவரட்ணம்

யாழ்ப்பாணம்,நவ.14

*எங்களது கடற்றொழிலாளர்கள் 'பாஸ்' பெற்று மீன்பிடிக்குச் செல்ல வேண்டும் என்று கட்டுப்பாட்டை விதிக்கிறது கடற்படை. இந்திய மீனவர்களுக்கு எந்தப் பாஸை வழங்கி எமது கடல் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கின்றனர். இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் கேள்வி எழுப்பினார்.*

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் அண்மையில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் கடற்கரையோரப் பிரதேசங்களில் போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் கடற்படையினர் பாஸ் நடைமுறையை பின்பற்றி வருகின்றனர்.

எமது மீனவர்கள் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்தே இலங்கைக் கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் மீது பாஸ் கட்டுப்பாட்டை விதிக்கும் கடற்படையினர் இந்திய மீனவர்களை எமது கடல் பகுதியின் கரையோரம் வரையில் வருவதற்கு என்ன பாஸ் வழங்குகின்றனர்? இதேபோன்று தென்னிலங்கை மீனவர்களும் எமது கடற்பகுதிகளுக்கும் எந்தப் பாஸைப் பெற்று வருகின்றனர்?

போர் முடிந்துவிட்டது. பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டதாக அரசு சொல்வதை ஏற்றுக் கொள்கின்றோம். அப்படியானால் எதற்கு இந்தப் பாஸ் நடைமுறை இதனை நீக்க வேண்டும்- என்றார் நவரட்ணம். (ம-5)

## யாழ்.இளைஞர்களுக்கு 'துப்பாக்கி'யில் மோகம் திரண்டது பெரும் கூட்டம் நகரில்



தீபாவளி தினமான நேற்று 'துப்பாக்கி' திரைப்படம் வெளியாகியதையடுத்து திரையரங்கில் இளைஞர் கூட்டம் முண்டியடித்தது. நேற்றுக்காலை தொடக்கம் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள திரையரங்கு முன்பாக இளைஞர் கும்பல் கூடியது. வீதியில் வாத்தியக் கருவிகளை வைத்து அடித்துத் தமது ஆரவாரத்தை வெளிக்காட்டினர். போதாக்குறைக்கு வீதியில் சிதறு தேங்காய்கள் அடித்தும் அந்தக் கோமாளிக் கூட்டம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது. பின்னர் திரையரங்கினுள் சென்று நண்பகலுக்குப் பின்னரும் வாத்தியக் கருவிகளை அடித்துக் கொண்டாடியது அந்தக் கூட்டம் வாத்தியக் கருவிகளில் ஒன்று அவர்களது ஆவேசத்தால் உடைந்து போனது. சுமார் 12 பேர் தொடர்ந்து வாத்தியங்களை அடிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அனைவரும் மதுபோதையில் மிதந்து கொண்டிருந்தனர். திரைப்படம் பார்க்கச் சென்ற சில இளைஞர்களை அந்தக் குழுவினர் கேவலமான வார்த்தைகளால் திட்டவும் தவறவில்லை. எனினும் கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது இந்த முறை திரையரங்குகளில் குழுமியவர்களின் தொகை குறைவாகவே இருந்தது. சில திரையரங்குகளில் திரைப்பட ஆர்வலர்களைக் காணவே முடியவில்லை. (ம-4)

## எழுவைதீவு றோ.க. பாடசாலையில் நடைபாதை அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

எழுவைதீவு றோ.க.பாடசாலைக்கு நடைபாதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் சகிதம் எழுவைதீவுக்கு கடந்த சில தினங்களுக்கு முன் சென்ற உதவி அரச அதிபர் பாடசாலை தேவை குறித்து கேட்டறிந்தார்.

எழுவைதீவு றோ.க. பாடசாலை அதிபர் எஸ்.விஜயகுமார், பாடசாலை வளவில் மழை நீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறினார்.

பாடசாலையின் முன் பகுதி பள்ளமாக இருப்பதால் மண்போட்டு நிரவ வேண்டியுள்ளதாகவும் சுற்றுமதில் அமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

குறித்த வேலைத் திட்டங்களைச் செய்து தரும்படி கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து இந்த விடயங்கள் தொடர்பாக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் வலியுறுத்துவதாகவும், தற்போது பாடசாலை வளவில் நடைபாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உதவி அரச அதிபர் கூறினார். (ம-7)

## பொதி செய்யப்பட்ட நிவாரணம் பரீட்சார்த்தமாக விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.14

தெல்லிப்பழை, வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்களைப் பொதி செய்து வழங்கி வருகின்றன. பரீட்சார்த்த முறையில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்று கூறப்பட்டது.

இந்தக் கிளைகளில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறை வெற்றியளித்துள்ளது என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் சகல அத்தியாவசியப் பொருள்களும் பொதி செய்யப்பட்டே பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

உரிய தரம், நிறையின் அடிப்படையில் பொதி செய்யப்பட்டே இவை விநியோகிக்கப்படுகின்றன.

இந்த நிவாரண விநியோகம் தொடர்பாக நேரில் சென்று பார்வையிடப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணம் பெறுவோர் பெரும் பயன் அடைந்துள்ளனர்.

அத்துடன் நிவாரண விநியோகமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## அபிவிருத்திக்கு நிதி

வலி.வடக்கு, நவ.14

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வள்ளியாவத்தை திருமகள் சன சமூக நிலையத்தின் அபிவிருத்திக்கு என பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது பன்முகப்படுத்தப்பட்டு வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார். (ம-86)

* * *

வலி.வடக்கு, நவ.14

கரவெட்டி மேற்கு நொத்தரிஸ் தோட்டத்திலுள்ள வேலவன் சனசமூக நிலைய அபிவிருத்தித் திட்டத்துக்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் சனசமூக நிலைய நிர்வாகம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)

## வீதி பெரும் சேதம் கவனிப்பார்களா அதிகாரிகள்?

கோண்டாவில் பகுதியில் உள்ள நவரத்தினராசா வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

யாழ்.நகரை நோக்கிச் செல்லும் வலி.தெற்கு, வலி.வடக்கு மற்றும் உரும்பிராய் பகுதி மக்களது முக்கியமான போக்குவரத்துப் பாதையாக இந்த வீதியும் காணப்படுகின்றது.

பிரதான வீதி வழியாகப் பயணம் செய்வதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களில் பயணம் செய்பவர்களில் ஒரு பகுதியினர் இந்த வீதியை நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் குன்றும் குழியுமாக இந்த வீதி காணப்படுகின்றது. மழை காலத்தில் வீதியில் தேங்கும் வெள்ளத்தாலும் மக்கள் பெரும் பாதிப்படைகின்றனர். இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-86)

## தீபாவளியைக் கொண்டாடவிடாத தெரு நாய்

தென்மராட்சி, நவ.14

தீபாவளி உடுபுடைவைகள் வாங்கிக் கொண்டு வீடு சென்றவரின் மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதியதில் குடும்பஸ்தருக்கு கை எலும்பு உடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மிருசுவிலில் இடம்பெற்றது.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் விஜயகுமார் (வயது-32) என்பவரே எலும்பு முறிந்த நிலையில் நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸியிலிருந்து 30 பேர் நேற்று இலங்கைக்கு திரும்பினர்

கொழும்பு, நவ 14

கிறிஸ்மஸ்தீவிலிருந்து சுயவிருப்பின்றி மேலும் 30 பேரை இலங்கைக்கு, ஆஸ்திரேலிய அரசு திருப்பியனுப்பியுள்ளது. நேற்று திருப்பியனுப்பப்பட்ட இவர்களுடன்சேர்த்து 200 பேர் வரையில் சுயவிருப்பின்றி இலங்கை திரும்பியுள்ளனர்.

ஆஸ்திரேலியக் கடலில் ஒரு புதிய படகு சென்று கொண்டிருந்த தருணத்தில் அந்த நாட்டு அரசினால் 30 பேர் கொண்ட குழுவினர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த 30 பேரும் கிறிஸ்மஸ் தீவிலிருந்தே நேரடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்தார்

புகலிடக் கோரிக்கைகளை, ஆஸ்திரேலியாவுக்கு வெளியே வைத்து விசாரிக்கும் கொள்கையை ஓகஸ்ட் 13 இல் ஆஸ்திரேலியா அரசு அறிவித்திருந்தது.

## அரச தாதியர்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அறிவித்து 2 நாள்களை விடுமுறையாக வழங்க வேண்டும்.

* மேலதிகக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும்.
* இடர்காலக் கொடுப்பனவு மற்றும் உடைமைகள் காப்புப்படி அதிகரிக்கப்பட வேண்டும்.
* தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மாகாண ரீதியிலான தாதியர் ஆட்சேர்ப்பினை நிறுத்த வேண்டும்.
* முன்னர் வலியுறுத்தியதன்படி, தாதியர்களுக்கான யாப்பினைத் திருத்தி அமைத்தல் வேண்டும்.

போராட்டம் நாளை ஒருநாள் முழுவதும் நடைபெறவுள்ளது.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி இதற்கு முன்னரும் பல தடவைகள் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அவை பயனளிக்கவில்லை. இதனாலேயே மீண்டும் சுகவீன விடுப்புப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

நாளை போராட்டம் நடக்கவுள்ளதால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தாம் தவிர்க்கமுடியாதுள்ளது என்றும் தாதியர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மாட்டும் ஆயிரத்து 500 தாதியர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது தற்போது 396 தாதியர்களே இங்கு பணியாற்றுகின்றனர்.

இந்த நிலையில் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வைத்தியசாலைகளில் தாதியர்களின் சேவை மேலும் அதிகபட்சம்அது பலவீனப்படும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. எனவே தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

## 1,000 குடும்ப...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கோரியுள்ளனர். இந்த விவரங்கள் மாவட்டச் செயலக, பிரதேச செயலக காணி பிரிவு மற்றும் புள்ளி விவரக் கிளைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் 1,111 பேர் தமக்கு சொந்தக் காணி இல்லை என விண்ணப்பித்துள்ளனர். சொந்தக் காணி இல்லாததால் வீட்டுத் திட்டம், வாழ்வாதார உதவித் திட்டம் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான எந்த உதவிகளையும் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நீண்டகாலமாக இரவல் காணிகளில் குடியிருப்பதாகவும் அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இதே 19 கிராம சேவகர் பிரிவுகளில் ஆங்காங்கே நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அந்தப் பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்ட ஆயிரம் ஏக்கர் காணியைத் தமக்குத் தரக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இதனைவிட புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள கடைத் தொகுதிகளும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இதுவரை உள்ளன. இதனால் கடை உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வாழ்வாதார ரீதியாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிப்பதுடன் குறித்த கடைத் தொகுதிகளை தம்மிடம் மீளத் தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

# ஈழத்தைக் காட்டி '13' ஐ ஒழிக்க போலிப் பிரசாரம்

## இனவாத அமைச்சர்களைப் பட்டியலிடுகிறது முன்னிலை சோஷலிஸக் கட்சி

கொழும்பு, நவ.14

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் தனிஈழம் அமைந்துவிடும் என சிங்கள மக்கள் மத்தியில் போலிப் பிரசாரங்களைச் செய்து சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடுவதற்கு அமைச்சர்களான விமல், சம்பிக்க, தினேஷ் குணவர்தன ஆகியோர் முயற்சிக்கின்றனர் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை தீர்வாகாது என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று நாட்டில் எழுந் துள்ள கோஷங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போது முன்னிலை சோஷலிஸக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''13 பிளஸ் எனக் கூறிய அரசு தற்போது '13' மைனஸைக் கொண்டுவர முயற்சிக்கின்றது. இந்த சர்ச்சைக்குரிய விவகாரத்தால் அரச கூட்டுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. 13ஐ ஒழிக்க வேண்டுமென சிங்களப் பேரினவாதிகளான அமைச்சர்கள் விமல், சம்பிக்க, தினேஷ் குணவர்தன ஆகியோர் கோஷமெழுப்புகின்றனர். அதற்கு எதிராக அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் குரலெழுப்புகின்றனர். '13'ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிநிற்கின்றனர்.

போர் முடிவடைந்து விட்டதால் மக்கள் மத்தியில் போர் மாயையைக்காட்டி அரசியல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் தற்போது '13'ஐ கையிலெடுத்து அரசு இனவாதத்தைக் கக்குகிறது.

எது எப்படியிருந்தபோதிலும் '13' ஒழிப்புக்கு நாம் உடன்படமாட்டோம் - என்றார் அவர். (உ-சி)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆனால் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வின் ஊடாகத் தீர்வை வழங்கவேண்டும் என்பதற்காக 1987ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தைக் கொண்டுவந்த இந்தியா மௌனம் சாதிக்கிறது.

இலங்கையில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ள 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பான முயற்சிகள் குறித்தும் இந்தியா கருத்து எதனையும் வெளியிடவில்லை.தொடர்ந்தும் மௌனம் சாதிக்கிறது.

இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கருத்து ஆளுந்தரப்பிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில், இது விடயம் தொடர்பில் அரசுக்குத் தக்கப்பாடம் புகட்ட வேண்டிய தருணத்தில் தமது நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக்கொண்டது.

13ஆவது திருத்த ஒழிப்பு விவகாரத்தின் பின்னணியில் இந்திய அரசு செயற்பட்டு வருகின்றது. இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையில் 13ஆவது திருத்த ஒழிப்பு விவகாரத்தில் ஓர் இரகசிய உடன்பாடு உள்ளது.

**கூட்டமைப்பிடம் எடுத்துரைப்பு**

13 ஆவது திருத்தச்சட்ட ஒழிப்பு விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் காப்பதும், ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத்தொடரில் அது தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டமை குறித்தும் நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடமும் எடுத்துரைத்துள்ளோம்.

அத்துடன் இது விவகாரம் தொடர்பில் இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையில் இரகசிய உடன்பாடொன்று உள்ளது என்பதையும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம் - என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல. (உ-சி)

## தமிழரைக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வின் மிகப் பெரிய தோல்வியைக் காட்டுகின்றன'' என்று அந்த அறிக்கை தனது தீர்மானத்தில் கூறியுள்ளது.

வெளியே கசிந்துள்ள இந்த ஆவணம் குறித்து ஐ.நா. உடனடியாகக் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. அறிக்கையின் முழு வடிவமும் வெளியிடப்படும் என்று மட்டும் கூறியுள்ளது.

பொதுச் செயலாளர் பான் கீ-மூன் அறிக்கையைப் பெற்றுப் படித்த பின்னர் அது முழுமையாக வெளியிடப்படும் என்று ஐ.நாவின் பேச்சாளர் மார்ட்டின் நேர்சகி தெரிவித்துள்ளார். வெளியே கசிந்துள்ள ஐ.நா. அறிக்கையில் உள்ள விடயங்கள் அதன் மூலப் பிரதியில் உள்ளவற்றை அதிகம் ஒத்திருப்பதாக, விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய, ஐ.நாவின் மூத்த அதிகாரி சார்ளஸ் பெற்றீ தெரிவித்திருக்கிறார்.

**தீர்மானங்கள் நீக்கம்**

விசாரணையின் இறுதி அறிக்கை 30 பக்கங்களைக் கொண்டிருக்கும். விரிவான மேலதிக இணைப்புக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அறிக்கையின் வரைவின் இறுதிப் பகுதியில், குழுவின் முடிவுகளும் தீர்மானங்களும் தரப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் பகுதி இறுதி அறிக்கையிலிருந்து ஐ.நாவால் நீக்கப்பட்டிருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் கூறுகின்றன என்று பி.பி.சி. தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பொறுப்புக்களை மிக உயர் நிலையில் பூர்த்தி செய்வதற்கு இயலுமானதாக எதிர்காலத்தில் ஐ.நா. விளங்க வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

வன்னியில் இருந்த தனது பணியாளர்களை ஐ.நா. 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் அங்கிருந்து விலக்கிக் கொண்டதை அறிக்கை கடுமையாக விமர்சித்துள்ளது. அவர்களின் பாதுகாப்பை தன்னால் உறுதிப்படுத்த முடியாது என்று இலங்கை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து ஐ.நா. அதனைச் செய்தது. இந்த முடிவு குறித்து விசாரணைக் குழு கடுமையாகக் கேள்வி எழுப்பியுள்ளது.

**பொதுமக்கள் இழப்பை தடுக்கத் தவறியது ஐ.நா.**

பொதுமக்களின் இழப்பைத் தடுப்பது ஐ.நா. அதிகாரிகளின் பொறுப்பாக இருந்தபோதும் கொழும்பில் இருந்த மூத்த அதிகாரிகள் அதனைச் செய்யவில்லை என்றும் -

ஐ.நா. தலைமையகம் அது தொடர்பிலான அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கவில்லை என்றும் - அறிக்கை தீர்க்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

தாங்கள் பிரகடனப்படுத்திக் கொண்டதின்படி மக்களின் உரிமைகளுக்காகத் துணிந்து நிற்பதில் கொழும்பிலிருந்த ஐ.நா. அதிகாரிகள் மத்தியில் கட்டமைப்பு ரீதியான மந்த நிலை காணப்பட்டதாகவும் அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

**அனுபவமற்ற அதிகாரிகள்**

இலங்கை முன்வைத்த ஆயுத முரண்பாடு மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான சவால்களைக் கையாள்வதற்கு கொழும்பிலிருந்த ஐ.நா. அதிகாரிகளுக்கு அனுபவமும் அறிவும் இல்லாதிருந்ததாக அறிக்கை கூறுகின்றது. ஐ.நா அதிகாரிகள் எவ்வளவு தூரம் அரசியல் நிபுணத்துவமும் அனுபவமும் இல்லாதவர்களாக இருந்தார்கள் என்பதை அறிக்கை விளக்குகிறது.

அத்துடன் அவர்களுக்குத் தேவையான கொள்கை ரீதியிலான உதவிகளும் அரசியல் உதவிகளும் வோஷிங்ரனில் உள்ள தலைமையகத்தில் இருந்து வழங்கப்படவில்லை என்றும் அறிக்கை விமர்சிக்கிறது.

தன்னை விமர்சிக்கும் ஐ.நா. அதிகாரிகளுக்கு விஸா வழங்குவதில்லை என்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசு திட்டமிட்ட ரீதியில் எப்படிச் செயற்பட்டது என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இலங்கையில் ஐ.நா. அமைதிப் படையினர் இல்லாத போதும், அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அது உலகுக்குச் சொல்லி இருக்க வேண்டும் என்று அறிக்கை குறிப்பிடுகின்றது.

அத்துடன் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மேலும் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு எது தெரிந்திருக்க வேண்டுமோ அதனைக் கூறாமல், அவை எதனைக் கேட்க விரும்பினவோ அவற்றையே ஐ.நா. வெளியே கூறியது என்று அறிக்கை தெரிவிக்கிறது. (உ)

## வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிறுவர்கள், இளைஞர்கள் ஆங்காங்கே வெடிகள் கொளுத்தி மகிழ்ந்தனர்.

கடந்த காலங்களைப் போலன்றி இம்முறை பட்டாசு வெடியொலிகளை பெருமளவில் கேட்கமுடியவில்லை.

கடந்த இரு வருடங்களாக சந்துபொந்தெங்கும் களைகட்டியிருந்த பட்டாசு வியாபாரம் இந்தமுறை மந்தமாகி இருந்தது.

முக்கிய இடங்களைத் தவிர வேறெங்கும் பட்டாசு விற்பனையை அவதானிக்க முடியவில்லை.

பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட விபத்துச் சம்பவங்கள் எதுவும் நேற்று வடக்கில் பதிவாகவில்லை.

தீபாவளித் தினமான நேற்று வெளியான புதிய தமிழ்த் திரைப்படத்தைப் பார்ப்பதற்குத் திரையரங்குகளில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. (த-16-4-17)

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுக் கொடுக்கும் கலாசாரம் அதிகம் காணப்பட்டது என்ற அறிக்கை வாதிடுகிறது.

தொடர்ச்சியாக அதிகரித்து வந்த இழப்புக்களை வெளியிடாமல் எப்படி ஐ.நா. மறைத்தது என்றும் அறிக்கை விளக்கியுள்ளது. ஆதாரமாக பொதுமக்கள் இழப்புக்கள் குறித்த அறிக்கைகள் புள்ளிவிவரங்களையும் இணைத்துள்ளது.

போர்ப் பிரதேசங்களுக்குச் சென்று உதவுவதற்கு இலங்கை அரசின் அனுமதி மேலும் கிடைக்கக் கூடும் என்பதால் இந்த மாதிரியான விடயங்களைப் பற்றி வெளியே பேசாமல் இருந்துவிட ஐ.நா. பணியாளர்கள் தீர்மானித்திருந்தார்கள்"என்கிறது அறிக்கை.

இலங்கையின் இறுதிப் போர் நடந்து கொண்டிருந்தபோது ஐ.நா. பாதுகாப்புச் சபையோ வேறு முக்கிய ஐ.நா. அமைப்புக்களோ ஒருமுறைகூட உத்தியோகபூர்வமாகக் கூடியிருக்கவில்லை என்பதையும் அறிக்கை ஒரு குறையாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

## வன்னியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போம். எம் தாய் நிலத்தை முன்னேற்றுவதற்காக நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்துச் செயற்படுவோம் என சபதம் எடுத்துக் கொள்வோம்.'' எனவும் அதில் சொல்லப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மக்கள் நலன் பேணும் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படைகளின் கிளிநொச்சி தளபதியும் படையினருமே வாழ்த்து அட்டைகளை விநியோகிக்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் மீளமுடியாத துன்பங்களில் துவண்டுபோயுள்ள தமக்கு இராணுவத்தினரின் இந்த வாழ்த்து மகிழ்ச்சி தருவதாக இருக்கவில்லை என்று மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை, இறந்துபோன தமது உறவுகளுக்காக பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு விட்டு எந்த ஆரவாரமுமற்ற தீபாவளியையே மக்கள் கொண்டாடியிருந்தனர்.

முல்லைத்தீவில் நேற்று முழுவதும் மழை கொட்டித் தீர்த்ததால் அந்தப் பகுதி மக்கள் தமது தீபாவளியை சமயச் சடங்குகளுடன் முடித்துக் கொண்டனர். (ஐ-6)

## நீதியரசர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வரை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இன்று நியமிப்பார்.

இக்குழுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

மேற்படி தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஆளுங்கட்சியின் சார்பில் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, ராஜித சேனாரட்ன, டிலான் பெரேரா, அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜெயந்த மற்றும் பிரதி அமைச்சரான நியோமல் பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஆர்.சம்பந்தனும் மற்றும் ஜே.வி.பியின் சார்பில் விஜித ஹேரத் ஆகிய எம்.பிக்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழர் நிலங்களைக் கையகப்படுத்துவதில் அரசின் புதிய புதிய போக்குகள்

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசமைப்பு விதிகளின் மூலம் நாட்டின் பொது மக்களது பேச்சுச் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகிய அடிப்படை மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அமைதியான முறையில் மக்கள் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்ற வகைக்குள்ளும், ஒருவர் தனது சொந்தப் பண்பாட்டை, தாம் கடைக்கொள்ள விரும்பும் மதத்தைக் கடைக்கொள்ளவும் உள்ள சுதந்திரம் மத சுதந்திரம் என்ற வகைக்குள்ளும், இலங்கையில் தாம் விரும்பும் எந்த ஒரு பகுதியிலும் வசிப்பதற்கான சுதந்திரம் நடமாடும் சுதந்திரம் என்ற வகைக்குள்ளும் அடங்குவன.

அரசமைப்பின் மூலம் இலங்கை மக்களுக்கு இந்தச் சுதந்திரங்கள் அனைத்தும் உறுதிப்படுத்தப்பட்டாலும், யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான பெரும் விஸ்தீரணம் கொண்ட நிலங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து மட்டும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 60 சதவீத விவசாய நிலங்களும், 30 சதவீத கடல் வளங்களும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் முழுங்கப்பட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். அப்பகுதி மக்களது பாரம்பரிய நிலங்களை கையகப்படுத்துவதும் அதன் மூலம் அவர்களது வாழ்வாதாரங்களைச் சிதைப்பதும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் எனக் கொள்ளத்தக்கவை.

தமது சொந்த இடங்களில் இருந்து மக்களைப் பலவந்தமாக வெளியேற்றியமை, மக்களின் நடமாடும் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவித்தமை, சிறுபான்மை மக்களின் உரிமைகளை மதியாமை போன்றவற்றின் மூலம் இலங்கை அரசு, அடிப்படை மனித உரிமைகளை வலியுறுத்தும் உள்நாட்டு மற்றும் அனைத்துலகச் சட்டங்களை மீறிச் செயற்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அனைத்து உயர் பாதுகாப்பு வலயங்களும் அகற்றப்படும் என்று 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார். எனினும், இரண்டாவது முறையும் அவர் ஜனாதிபதியாகத் தெரிவாகிய போதிலும் அவரது அந்த வாக்கு காற்றில் பறக்கவிடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஓகஸ்டில் அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு இருந்த உத்தியோகபூர்வ அங்கீகாரம் இல்லாமல் போய்விட்ட போதிலும், இந்த மாற்றம், எந்த ஒரு மக்களும் இயல்பு வாழ்வை வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் 2011 ஆம் ஆண்டு முடிவுக்குள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படுவர் என்று இலங்கை அரசு அறிவித்தது. ஆனால் குறிப்பிட்ட அக்காலக்கெடுவும் கடந்துவிட்டது.

இத்தகைய பின்னணியிலேயே பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிராகப் பத்து வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கி உள்ளது.

இது பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் ஒரு முக்கிய திருப்பம் எனலாம். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் சில விவசாயிகள் 2003 இல் தாக்கல் செய்த மனு, சுமார் ஒரு தசாப்த காலம் கிடப்பில் போடப்பட்ட நிலையில், தற்போது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பது இடம்பெயர்ந்த நிலையில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப இயலுமா என்ற ஏக்கத்துடனும் நம்பிக்கையீனத்துடனும் குடாநாட்டின் வேறு பகுதிகளில் கந்தறுந்த வாழ்க்கையை மேற்கொண்டுவரும் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த மக்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சைக் கொடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கும், இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் கருதியும் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டாலும் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையிலும், தொடர்ந்தும் பாதுகாப்பு வலயங்கள் இராணுவத்தால் பேணப்பட்டே வருகின்றன.

அனைத்துலக மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு மனிதாபிமான உடன்பாடுகளை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டாலும், நாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படுவதை இந்த அனைத்துலக உடன்பாடுகளால் தடுக்கமுடியாது. அதற்கான போதிய சட்ட வரைவுகள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. உண்மையில் இவ்வாறான உயர்பாதுகாப்பு வலயங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன. ஆகவே, வடபகுதி மக்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமானால், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி அப்பகுதி மக்கள் காலாதி காலமாக வாழ்ந்து வந்த வளம் மிக்க விவசாய நிலங்களை அவற்றுக்கு உரித்தான மக்களிடம் ஒப்படைக்கவேண்டும். சிங்களக் குடியேற்றம் என்ற பெயரிலும், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரிலும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பது சுதந்திரத்துக்குப் பின்பு பதவிக்கு வந்த தென்னிலங்கை அரசுகளுக்குக் கைவந்த கலை. நீண்ட காலத்துக்குப் பின்னர் இந்த விவகாரம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருப்பது வலி. வடக்கு மக்களின் நீதிநெறி தழுவிய மண் மீட்புப் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி ஆகும்.

பாதுகாப்புத் தேவைகளைக் கருதி, மக்கள் சபைகளுக்குச் சொந்தமான காணிகளை, அரசாங்கம் கையேற்கலாம் என்ற புதிய விதிகளை அறிமுகப்படுத்தி, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கமும், பாதுகாப்புப் படைகளும் தமிழர் பிரதேசங்களில் வெகு வேகமாகவும் தீவிரமாகவும் செயற்பட்டு வருகின்றன.

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்த விடாது தடுத்துள்ளமை, வடக்கு கிழக்கில் மக்கள் நலன்களை விட பாதுகாப்புத் துறைக்கே முதன்மைத்துவம் வழங்கும் புதியபோக்கை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

# வெலிக்கடையில் தப்பிய கைதிகள் மீளச் சிறைக்கு

## 5 பேரைக் காணோம்

கொழும்பு, நவ. 14

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் தப்பிச் சென்ற கைதிகளில் ஐந்து கைதிகளைத் தவிர ஏனையோர் மீண்டும் சரணடைந்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் விசேட அதிரடிப்படையினருக்கும், கைதிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. இதில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். கைதிகள் சிலர் தப்பித்துச் சென்றிருந்தனர். இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன. தப்பியோடிய 5 கைதிகளின் நிலைமை தெரியவில்லை.

தப்பியோடிய ஐந்து கைதிகளின் சகல விவரங்களும் நேற்றுப் பொலிஸாருக்கு சிறைச்சாலைத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

இது தவிர, சிறைச்சாலை மோதலின் போது காணாமல் போன மூன்று ஆயுதங்களையும் கண்ணீர்ப்புகைப் பிரயோக உபகரணமொன்றையும் தேடி தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக கொடிப்பிலி குறிப்பிட்டார். (த -5)

## நாடு முழுவதும் நாளை மரம் நடுகை

யாழ்ப்பாணம், நவ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையும் இரண்டாவது முறை ஜனாதிபதியாகப் பதவியேற்பதையும் கொண்டாடும் முகமாக நாடு முழுவதும் நாளை மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

'தேசத்தின் நிழல்' என்னும் தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ளூராட்சி சபைகளிலும் நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (ம-9-50)

### ஆறு.திருமுருகன் திருச்செந்தூருக்கு

அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும், மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் திருச்செந்தூர் முருகன் ஆலய அழைப்பை அடுத்து கந்தசஷ்டி விரத நாள்களில் திருச்செந்தூர் திருத்தலத்தில் ஆன்மிக சிறப்புச் சொற்பொழிவாற்ற இந்தியா சென்றுள்ளார். (ம)

# சிறந்த கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட, மாகாண ரீதியாக தெரிவு

யாழ்ப்பாணம், நவ.14

வடக்கில் மாவட்ட, மாகாண ரீதியாக சிறந்த சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட இந்த சங்கங்களுக்கான பரிசில்கள் நாளையும் நாளைமறுதினமும் மாநகரசபை மைதானத்தில் இடம்பெறும் வர்த்தகக் கண்காட்சியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே, இந்த நிகழ்வில் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மாகாணமட்டம்

முதலாமிடம் - வவுனியா ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம், யாழ்.குடாவிதை உற்பத்தியாளர் கூ.சங்கம், யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம், சுழிபுரம் அலைமகள் க.தொ.கூ.சங்கம், நீர்வேலி ஸ்ரீமுருகன் மகளிர் சி.சே.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு பாண்டியன்குளம் துணுக்காய் ப.தெ.வ.அ.கூ.சங்கம், வவுனியா சமாங்குளம் விவசாய உற்பத்தி கூட்டுறவு சங்கம், வவுனியா கா.ந.வ.கூ.சங்கம், வவுனியா சிக்கன கடனுதவு கூ.ச.சமாசம், மன்னார் தாழ்வுபாடு க.தொ.கூ.சங்கம், கிளிநொச்சி தருமபுரம் சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-மன்னார் நானாட்டான் ப.நோ.கூ.சங்கம், வவுனியா நெடுங்கேணி ப.தெ.வ.அ.கூ.சங்கம், திருவையாறு படித்த வாலிபர் வி.கூ.சங்கம், கிளிநொச்சி கா.ந.வ.கூ.சங்கம், யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம், கிளிநொச்சி இரணைமாதாநகர் க.தொ.கூ.சங்கம், முல்லைத்தீவு காட்டா விநாயகர் சி.க.வ.கூ.சங்கம்.

மாவட்ட மட்டம்-யாழ்ப்பாணம்

முதலாம் இடம்-பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம், யாழ்.குடாவிதை உற்பத்தியாளர் கூ.சங்கம், யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், சுழிபுரம் [illegible] கூ.சங்கம், நீர்வேலி ஸ்ரீமுருகன் மகளிர் சி.சே.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-வலி.கிழக்கு தெ.ப.நோ.கூ.சங்கம், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், வலி.கிழக்கு வாழைக்குழை உற்.கூ.சங்கம், வட்டுக்கோட்டை கால்நடை வ.கூ.சங்கம், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூ.ச.சமாசம், மயிலிட்டித்துறை க.தொ.கூ.சங்கம், யாழ்.சௌக்கிய சேவை சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-வலி.கிழக்கு வ.பகுதி ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கம், சாவகச்சேரி பழ உற்பத்தியாளர் கூ.சங்கம், பருத்தித்துறை கால்நடை வ.கூ.சங்கம், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை, காரைநகர் அம்பாள் க.தொ.கூ.சங்கம், சதாவதானி கதிரவேற்பிள்ளை சி.க.வ.கூ.சங்கம்.

கிளிநொச்சி

முதலாம் இடம்-கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி ப.தெ.வ.அ.கூ.சங்கம், திருவையாறு படித்த வாலிபர் வி.கூ.சங்கம், கிளிநொச்சி கா.ந.வ.கூ.சங்கம், வடமாகாண நுகர்ச்சி சமாசம், இரணைமாதாநகர் க.தொ.கூ.சங்கம், தருமபுரம் சி.க.வ.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-பச்சிளைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பூநகரி ப.தெ.வ.அ.கூ.சங்கம், முழங்காவில் சித்தி விநாயகர் வி.கூ.சங்கம், கண்டாவளை கா.ந.வ.கூ.சங்கம், பூநகரி க.தொ.கூ.ச.சமாசம், பள்ளிக்குடா க.தொ.கூ.சங்கம், கிராஞ்சி தெற்கு ஸ்ரீமுருகன் சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம், பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம், பூநகரி கா.ந.வ.கூ.சங்கம், கிளி. மாவட்டக் கூட்டுறவுச் சபை, நல்லூர் க.தொ.கூ.சங்கம், பள்ளிக்குடா வளர்மதி க.தொ.கூ.சங்கம், கிளி.ப.தெ.வ.அ.கூ.ச.பணியாளர் சி.க.வ.கூ.சங்கம்.

முல்லைத்தீவு

முதலாம் இடம்-கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், விசுவமடு ப.நோ.கூ.சங்கம், பாண்டியன்குளம் துணுக்காய் ப.தெ.வ.அ.கூ.சங்கம், துணுக்காய் பகுதி கா.ந.வ.கூ.சங்கம், முல்லை மாவட்ட க.தொ.கூ.சங்.சமாசம், அளம்பில் க.தொ.கூ.சங்கம், காட்டாவிநாயகர் சி.க.வ.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-முத்தையன்கட்டு ப.நோ.கூ.சங்கம், ஒட்டுசுட்டான் ப.தெ.வ.அ.கூ.சங்கம், கரைதுறைப்பற்று கா.ந.வ.கூ.சங்கம், முல்லை மாவட்ட சி.க.வ.கூ.ச.சமாசம், வட்டுவான் க.தொ.கூ.சங்கம், உதயதாரகை செம்மலை சி.க.வ.கூ.சங்கம், கருவேலங்கண்டல் ஒட்டுசுட்டான் சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், விசுவமடு ப.தெ.வ.அ.கூ.சங்கம், மாந்தை கிழக்கு கா.ந.வ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு கா.ந.வ.கூ.சங்கம், முல்லை ப.தெ.வ.அ.கூ.சங்க இணையம், செல்வபுரம் க.தொ.கூ.சங்கம், செல்வா சி.க.வ.கூ.சங்கம்.

வவுனியா

முதலாம் இடம்-வவுனியா ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி ப.தெ.வ.அ.கூ.சங்கம், சமாங்குளம் விவசாய உற்பத்தி கூட்டுறவு சங்கம், வவுனியா கா.ந.வ.கூ.சங்கம், வவுனியா சிக்கன கடன் உதவி கூ.ச.சமாசம், சூசைப்பிள்ளை மகளிர் சி.க.வ.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-நெடுங்கேணி ப.நோ.கூ.சங்கம், வவுனியா ப.தெ.வ.அ.கூ.சங்கம், கூமாங்குளம் விவசாய உற்பத்தி கூட்டுறவு சங்கம், அமுதசுரபி கா.ந.வ.கூ.சங்கம், வவுனியா மா.கா.வ.கூ.சமாசம், கூமாங்குளம் சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-செட்டிகுளம் ப.நோ.கூ.சங்கம், வவுனியா தெற்கு ப.நோ.கூ.சங்கம், புளியங்குளம் ப.தெ.வ.அ.கூ.சங்கம், கோமாதா கா.ந.வ.கூ.சங்கம், வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபை, நவ ஜீவனம் மகளிர் சி.க.வ.கூ.சங்கம்.

மன்னார்

முதலாம் இடம்-நானாட்டன் பகுதி ப.நோ.கூ.சங்கம், அடம்பன் ப.தெ.வ.அ.கூ.சங்கம், மன்னார் மாந்தை கா.ந.வ.கூ.சங்கம், சிக்கன க.வ.கூ.சமாசம், தாழ்வுபாடு க.தொ.கூ.சங்கம், சுகசேவை பணியாளர் சி.க.வ.கூ.சங்கம்.

2 ஆம் இடம்-மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம், மன்னார் கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம், மன்னார் மாவட்ட பாற்பண்ணை அபிவிருத்தி கூ.சங்கம், மீனவர் கூட்டுறவு சங்க சமாசம், பனங்கட்டி கொட்டு க.தொ.கூ.சங்கம், றோஜாக்கூட்டம் சி.க.வ.கூ.சங்கம்.

3 ஆம் இடம்-மாந்தை வடக்கு ப.நோ.கூ.சங்கம், மன்னார் மேற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம், மன்னார் முசலி கா.ந.வ.கூ.சங்கம், நன்னீர் மீ.கூ.ச.சமாசம், பள்ளிமுனை க.தொ.கூ.சங்கம், தம்பனைக்குளம் புதிய நட்சத்திரம் சி.க.வ.கூ.சங்கம். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை பெய்தவுடன் 'நரகமாகி' விடுகிறது மாங்குளம் நகரம்

அக்கராயன், நவ.14

மழை காலத்தில் மாங்குளம் நகரப்பகுதி அசுத்தமான நீர் நிரம்பிய பகுதியாகக் காணப்படுகின்றது.

மாங்குளம் தற்போது அபிவிருத்தியடைந்து வருகின்றது. ரயில் நிலையம் உட்பட பல கட்டுமான வேலைகள் இங்கு இடம்பெற்று வருகின்றன. ஏ-9 சாலையும் இந்தப் பகுதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் பார்க்குமிடமெல்லாம் மழை வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால், இங்குவரும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பஸ் தரிப்பிடத்துக்கும் செல்லமுடியாத வகையில் வெள்ளம் பெரும் அவலத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இங்குவரும் பிரயாணிகள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் உணவு நிலையங்களும் மழை வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் பெரும் சுகாதார சீர்கேடு நிலவி வருகின்றது.

டெங்கு போன்ற கொடிய நோய் பரவி வரும் இந்த வேளையில் மாங்குளம் நகரம் இத்தகையதொரு சுகாதாரச் சீர்கேட்டுடன் இருப்பது பலருக்கும் கவலையையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

(க-18)



வவுனியா மாவட்ட முதியோர் சங்கமும், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் அரிமாக் கழகங்கள் மற்றும் வவுனியா வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து நடத்திய மாவட்ட முதியோர் தின விழாவில் 102 வயதான வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த வே.சதாசிவம் என்ற முதியவருக்கு வவுனியா அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (க-400)

### புதுமாத்தளன் வீதி புனரமைப்பு

புதுக்குடியிருப்பு,நவ.14

நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்த புதுக்குடியிருப்பு புதுமாத்தளன் வீதி இராணுவத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து இரணைப்பாலை வீதியூடாகச் செல்லும் புதுமாத்தளன் வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்பட்டது.

இந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். குறிப்பாக மின்வெளிச்சமில்லாத இந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த மக்கள் பல்வேறு இடர்களையும் எதிர்கொண்டு வந்தனர்.

இந்த வீதியில் மழை நீர் தேங்கி நிற்பதனால் பாடசாலை மாணவர்களும் சிரமங்களை எதிர் கொண்டனர். இந்த வீதி தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவந்த வண்ணம் இருந்தன. இதனை அடுத்து இராணுவத்தின் உதவியுடன் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி தற்போது புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-400)

# முல்லை மாவட்டத்தில் 2,561 இந்திய வீடுகள்

**வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர் களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.**

புதுக்குடியிருப்பு,நவ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 2 ஆயிரத்து 561 வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். இறுதிக்கட்ட போர் இடர்களினால் முற்றாகச் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ள இந்த வீட்டுத் திட்டத்தில் முதலாம் கட்டத்தில் 600 வீடுகளும், இரண்டாம் கட்டத்தில் ஆயிரத்து 961 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதில் முதல் கட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 1001 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 101 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 124 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகளும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 75 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் கரைதுறைப்பற்றில் 661 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 400 வீடுகளும், ஒட்டுசுட்டானில் 300 வீடுகளும், துணுக்காயில் 200 வீடுகளும், மாந்தை கிழக்கில் 200 வீடுகளும், வெலிஓயாவில் 200 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன என அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பகுதியாக சேதமடைந்த வீடுகளில் 441 வீடுகள் இந்திய அரசின் நிதியுதவியுடன் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இவற்றில் கரைதுறைப்பற்றில் 176 வீடுகளும், புதுக்குடியிருப்புப் பகுதியில் 265 வீடுகளும் திருத்தம் செய்யப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(க-400)

## காணிக்காரர்களின் விடாப்பிடியால் புனரமைக்கப்படாத நிலையில் வீதிகள்

முல்லைத்தீவு, நவ. 14

காணிச் சொந்தக்காரர்களின் பிடிவாதத்தினால் கற்சிலைமடுக் கிராமத்தின் உள்ளூர் வீதிகள் சில புனரமைக்கப்பட முடியாத நிலையிலுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்குள்ள உள்ளூர் வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை சில வீதிகளின் இருமருங்கிலும் உள்ள காணிச் சொந்தக்காரர்கள் காணிகளை விட்டுக் கொடுக்காமையால் இந்த வீதிகளை புனரமைப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் மக்களின் போக்குவரத்திலும் தடைகள் ஏற்பட்டுள்ளன. மழை காரணமாக சேறும் சகதியுமாகக் காணப்படும் இந்த வீதிகள் மக்களுக்கு பெரியளவில் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினர் இதில் தலையிட்டு பிணக்குகளைப் போக்கி வீதிகளின் புனரமைப்பு வேலைகள் தடையின்றி இடம்பெறுவதற்கு உதவுவதாகக் கூறிய போதிலும் இதுவரை அது சாத்தியப்படவில்லையென இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-500)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மல்லாவியில் நூல்களின் கண்காட்சி



துணுக்காய்,நவ.14

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி துணுக்காய் பிரதேச சபையின் மல்லாவி பொது நூலகத்தில் நூல்களின் கண்காட்சி மிகவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்தக் கண்காட்சி மல்லாவி பொது நூலகத்தில் கடந்த 5ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நூலகர் வே.லவேந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சியில் சர்வதேச நியம பகுப்பாக்க விதியின்படி ஒழுங்குபடுத்தப்பட்ட பல நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதன் பயனாக பாடசாலை மாணவர்களும் ஏனைய பொது வாசகர்களும் பகுப்பாக்கம் செய்யப்பட்ட ஒரு நூலகத்தில் இலகுவாகவும் நுட்பமாகவும் எவ்வாறு நூல்களைத் தெரிவு செய்யலாம் என்பது பற்றிய செயன்முறை விளக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் பாடசாலை நூலகங்களிலுள்ள நூல்களை மாணவர்கள் சுயமாகவே பகுப்பாக்கம் செய்து உரியமுறையில் பாவனைக்குட்படுத்துவதற்கான விளக்கமும், செயல்முறைப் பயிற்சிகளும் இந்தக் கண்காட்சியில் மல்லாவிப் பொது நூலகத்தின் பிரதம நூலகர் வே.லவேந்திராவினால் வழங்கப்பட்டன.

இந்தக் கண்காட்சியில் மல்லாவிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது வாசகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

(க-415)

### மீனவர் சங்கங்கள் முக்கிய தீர்மானம்

முல்லைத்தீவு, நவ.14

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்றொழில் சங்கங்கள் ஒன்று கூடி முக்கிய தீர்மானமொன்றை எடுத்துள்ளதாக முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

'முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலில் ஈடுபடக் கூடாது' என்பதே அந்தத் தீர்மானமாகும்.

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதில் கடற்றொழில் உதவிப் பணிப்பாளரான எஸ்.சுதாகரனும் கலந்து கொண்டார்.

(க-500)

## 'லிப்ற்' வசதியில்லாது அவலப்படும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி நோயாளர்

கிளிநொச்சி,நவ.14

கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் 'லிப்ற்' வசதி இல்லாததால் நோயாளர்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பொதுமருத்துவமனை இருமாடிகளைக் கொண்டதுடன் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று விடுதி உள்ளிட்ட ஏனைய சிகிச்சைப் பிரிவுகள் மேல்மாடியிலேயே இயங்கிவருகின்றன.

இந்த நிலையில் இந்த மருத்துவ மனையில் 'லிப்ற்' வசதிகள் பொருத்துவதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்ட போதிலும் இன்னமும் அது நிறைவேறாத நிலையிலேயே காணப்படுகின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மீளக்குடியமர்ந்த பின்னரான இன்று வரையும் லிப்ற் வசதிகள் இன்றியே பொது மருத்துவமனை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அவசர நோயாளிகளை மாடிக்குக் கொண்டு செல்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன. விடுதிகளில் தங்கியுள்ள நோயாளிகளும் மேல்மாடிக்கு ஏறி இறங்குவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக அங்கவீனமுற்றவர்கள் கூட தமது மருத்துவ தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.

எனவே பலதரப்பட்ட நோயாளிகளினதும் கஷ்ட நிலையைப் போக்கும் வண்ணம் இந்த மருத்துவ மனையில் லிப்ற் வசதியை ஏற்படுத்தித் தருமாறு பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-6)

### பூநகரி ம.வியின் பரிசில்தினம் நாளை

கொழும்புத்துறை,நவ.14


பூநகரி மகாவித்தியாலயத்தின் பரிசில்தினம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கனடாவில் இயங்கும் பூநகரி சமூக அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் பலதுறைகளில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பாடசாலை அதிபர் எஸ்.ஆர்.பாலச்சந்திரன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக பூநகரி சமூக அபிவிருத்திச் சங்கத்தின் கனடா உறுப்பினர் ந.சதானந்தபவன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், பங்குத்தந்தை அருட்திரு பா.பிறாயன் அடிகளார் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.நகரில் நடைபெறவுள்ள ஆளுநர் மாநாட்டை முன்னிட்டு முற்றவெளி பிரதேசத்தை சீர்செய்யும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. கனரக வாகனங்களின் உதவியுடன் இந்தப்பிரதேசம் சீர்செய்யப்பட்டு வருகின்றது. (ம-17)

# விழிப்புணர்வு நாடகம் 'புறநெகும' திட்டத்தில்

யாழ்ப்பாணம்,நவ.14

'புறநெகும' திட்டத்தின் கீழ் மக்கள் விழிப்புணர்வு தெரு நாடகங்கள் மாவட்ட மட்டத்தில் இடம்பெறுகின்றன.

பொதுசன தொடர்பு அதிகாரியின் ஊடாக எவ்வாறு மக்கள் முழுமையான சேவையை அடையலாம் என்பதை மையமாகக் கொண்டே இவை இடம் பெறுகின்றன.

காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் வண.ரி.எஸ். யோசுவாவின் அனுசரணையுடன் இந்த தெரு நாடகம் இடம்பெறுகின்றது.

கடந்த வாரம் மண்டைதீவு கிறிஸ்தவ தேவாலயத்திலும் அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்திலும், அல்லைப்பிட்டி வெண்புரவி நகரிலும் தெரு நாடகம் இடம் பெற்றது.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்தத் தெரு நாடகங்கள் வெளிமாவட்டமான மன்னார், கிளிநொச்சி, வவ்னியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# மாவிட்டபுரம்—காங்கேசன்துறை ரயில் பாதை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,நவ.14

மாவிட்டபுரத்தில் இருந்து காங்கேசன்துறை வரையான ரயில் பாதையைப் புனரமைப்பது குறித்து ஆராய்வதற்கான ரயில்வே திணைக்களத்தின் பொறியியல் பீட அதிகாரிகள் கடந்த வாரத்தில் காங்கேசன்துறைக்கு சென்றுள்ளனர்.

காங்கேசன்துறைக்கு சென்ற இந்த அதிகாரிகள் அங்கே ரயில் பாதை, மற்றும் சேதமடைந்த ரயில் நிலையத்தையும் பார்வையிட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள ரயில் பாதையில் சேதமடைந்த ரயில் பெட்டிகள், மற்றும் இன்ஜின்கள் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன.

இவற்றை அகற்றிய பின்னரே இந்தப் பகுதிக்கான ரயில் பாதையை புனரமைக்க முடியும் என்று ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பாதையில் உள்ளவற்றை அகற்றிச் சீர் செய்யும் பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

**இந்தப் பகுதியில் உள்ள ரயில் பாதையில் சேதமடைந்த ரயில் பெட்டிகள், மற்றும் இன்ஜின்கள் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன.**

அதன் பின்னரே, மாவிட்டபுரத்தில் இருந்து காங்கேசன்துறை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு ஆரம்பித்து வைக்கப்படும். குறிப்பாகக் காங்கேசன்துறை ரயில் நிலையமும் பலத்த சேதமடைந்துள்ளதால் அதற்கு பதிலாக புதிய நிலையமும் அமைக்கப்படவேண்டும்.

இந்த நிலையத்தில் ரயில்கள் தரித்து நிற்கும் பாதைகளும் பெரும் சேதப்பட்டே காணப்படுகின்றன என்றும் அந்த அதிகாரி கூறினார். (ம-17)

# விலைமதிப்பு தொடர்பாக இரு நாள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், நவ.14

உள்ளூராட்சி மன்ற செயலாளர் மற்றும் வருமானப் பரிசோதகர்களுக்கான விலைமதிப்பு சம்பந்தமான இரு நாள் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள மிலோதா நிறுவனம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் பயிற்சி இடம் பெறும். ஒவ்வாரு அலுவலருக்கும் சபை ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டும்.

இந்தச் செயலமர்வு மாகாண ரீதியாக இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# 2012 வாக்காளர் பட்டியல் 18 ஆயிரத்தால் அதிகரிக்கும்

## யாழ்.தேர்தல் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ். தேர்தல் மாவட்டத்துக்குரிய 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் கடந்த ஆண்டைவிட 18 ஆயிரத்தால் அதிகரிக்கலாம் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன.

கிராம சேவையாளர்கள் ஊடாக விநியோகிக்கப்பட்ட 'பி.சி' படிவங்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் மீளப் பெறப்பட்டன.

அதன் பின்னர் கடந்த ஒரு மாத காலம், புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைக்கப்பட்டவர்கள், நீக்கப்பட்டவர்கள் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதேவேளை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 4 லட்சத்து 82 ஆயிரத்து44 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களிலிருந்து 28 ஆயிரத்து 292 பேர் நீக்கப்பட்டுள்ளனர். புதிதாக 46 ஆயிரத்து 344 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 18 ஆயிரத்து 52 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

உரிமை கோரிக்கைப் படிவத்தினூடாக ஆயிரத்து 614 பேர் விண்ணபித்துள்ளனர்.

அத்துடன் இரட்டைப் பதிவுகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருப்பதால், வாக்காளர்ப் பெயர்ப் பட்டியலின் இறுதி எண்ணிக்கை தொடர்பில் உறுதியாக சொல்ல முடியாது என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-5)

# வலி.தென்மேற்கு பிரதேச மக்களின் பிணக்குக்குத் தீர்வுகாண நடவடிக்கை

## வாரத்தில் ஒரு நாள் விசாரணை

வலி.தென்மேற்கு, நவ.14

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் குறைபாடுகள், தேவைகள், பிணக்குகளை அறிந்து நீதிமன்றம் செல்லாத வகையில் அவற்றுக்கு இலகுவான வழிமுறையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அனுபவம் வாய்ந்த உறுப்பினர் ஒருவரை நியமித்துள்ள பிரதேசசபை நிர்வாகம் இதற்காக வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கியுள்ளது.

வலி.தென்.மேற்கு பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு நாளாந்தம் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. காணி, எல்லை, கட்டடம், பாதை, உறுதி, காணி உடைமை மாற்றல் உட்பட அதிகமான பிரச்சினைக்கு மக்கள் முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

இதனால் பிரதேச சபையின் நடவடிக்கைகளில் காலதாமதம் ஏற்படுவதுடன் நிர்வாகத்தின் மீதும் மக்களுக்குத் தப்பான அபிப்பிராயங்கள் உருவாகின்றன என்று கூறப்படுகின்றது.

மக்களின் நிலைப்பாட்டை, மனநிலையை நன்கு உணர்ந்து கொண்ட பிரதேசசபை நிர்வாகத்தினர், மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாகவும் பண விரயத்தைத் தடுக்கும் நோக்குடனும் , நீதி மன்றம் செல்லாத வகையிலும் இலகுவான முறையில் விரைவாகத் தீர்வு காண்பதற்கு உறுப்பினரான கே.கௌரிகாந்தனை நியமித்துள்ளனர்.

**சபை மண்டபத்தில் வாரத்தில் ஒருநாள் பிரதி வியாழக் கிழமை தோறும் மக்கள் பிரச்சினைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன**

இதற்கான தீர்மானமும் பிரதேசசபை மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை மண்டபத்தில் வாரத்தில் ஒருநாள் பிரதி வியாழக்கிழமை தோறும் மக்கள் பிரச்சினைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்றும் கூறப்பட்டது. (ம-115)

# வெற்றுக் காணிகளில் குவியும் போத்தல்கள்

## இவற்றை அகற்றுவது யார்?

நவாலி,நவ.14

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள வீதிகள், வாய்க்கால்கள், பற்றை வளவுகள் என்பவற்றில் தினம் தினம் பிளாஸ்ரிக் பொருள்கள், சாராயப் போத்தல்கள் என்பன போடப்படுவதால் நுளம்புகள் பெருகும் நிலை காணப்படுகின்றது.

வீடு வீடாகச் சென்று சிரட்டைகள், பழைய பேணிகளைப் பார்க்கும் சுகாதாரப் பிரிவினர் இவற்றை ஏன் கவனிக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவற்றைப் பிரதேச சபையினரே கவனிக்க வேண்டுமென்று சுகாதாரப் பிரிவினர் கூறுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

குப்பை கூழங்களை அகற்றும் போது, இவ்வாறான பொருள்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் மக்கள் கூறுகின்றனர். (ம-100)

# முதியோருக்கு உடுபுடைவை

வலி.தென்மேற்கு,நவ.14

சுதுமலை வடக்கு முதியோர் சங்கம் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இருபது முதியோர்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உடு புடைவைகளை வழங்கியுள்ளது.

சுதுமலை நாமகள் சனசமூக நிலையத்தின் மண்டபத்தில் சங்கத் தலைவர் என்.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதியோர்களுக்கு உடுபுடைவையும், சத்துணவும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியுதவியைச் சுதுமலையைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர் இணைந்து வழங்கியுள்ளனர்.

இதேவேளை சங்கத் தலைவரின் விடாமுயற்சியால் மாதாமாதம் முதியோர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

* * *

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தால் தீபாவளியை முன்னிட்டு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

வேட்டி, சாரம், புடைவை, கவுண்,போன்ற உடுபுடைவைகள் சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் வழங்கப்பட்டன. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் முதியோர்களிடம் உடுபுடைவைகளை வழங்கினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த மக்களை ஏமாற்றி பணம் அறவீடு

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

தென்மராட்சி,நவ.14

மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் உட்பட பல குடும்பங்களை ஏமாற்றி, பணம் அறவிடும் நபர் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று கூறப்பட்டது.

மீளக்குடியமர்ந்த மக்களின் வீடுகளுக்குச் செல்லும் நபர் ஒருவர் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிறுவனத்தில் தான் பணி புரிவதாகக் கூறி இழப்பீடு பெறுவதற்குரிய படிவம் விநியோகித்து வருகிறார்.

அத்துடன் தற்சமயம் படிவம் முடிவடைந்துள்ளதாகவும் தெரிவித்து அவர்களின் விவரங்களைத் தாளில் எழுதி முத்திரைக்கான கட்டணம் செலுத்துமாறு கூறி பல்வேறு வகையில் கட்டணங்களை அறவிட்டு வருகின்றார்.

10 ஆயிரம் ரூபா இழப்பீட்டுக்குரிய படிவத்துடன் அந்த நபர் வருவார் என்று ஒரு மாதத்துக்கு மேலாக காத்திருந்து மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இடம்பெற்று வருவதாக ஏமாந்த மக்கள் தெரிவித்தனர்.

இவர் சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் இளைப்பாறிய ஆசிரியரின் மகன் என்று தன்னை அடையாளப்படுத்தி நிறுவனம் ஒன்றின் புனர்வாழ்வுப் பிரிவில் கடமையாற்றுவதாகவும் கூறி மக்களை ஏமாற்றி வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்த ஏமாற்று வேலை பல கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளதால் மீளக்குடியமர்ந்த மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-9)

# ஆப்கன் அபிவிருத்திக்கு ரூபா 10 ஆயிரம் கோடி

## இந்தியா வழங்குகிறது

டில்லி, நவ.14

போரால் நிலை குலைந்துள்ள ஆப்கனின் மேம்பாட்டுக்காக ரூ. 10 ஆயிரம் கோடி நிதியை இந்தியா வழங்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார்.

அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்குச் சென்ற ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார்.

இதன்போது உரம், நிலக்கரி, தாதுப்பொருள்கள் மற்றும் சிறு திட்டங்களை மேம்படுத்துவது தொடர்பாக 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.



அதன்பின்னர் இருநாட்டுத் தலைவர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்ட போது பேசிய பிரதமர் மன்மோகன்சிங், ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும். ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தை ஒழிக்க சர்வதேச ஒத்துழைப்பு தேவை என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

அதன்பின்னர் பேசிய ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இந்தியாவின் உதவிகளை ஆப்கானிய மக்கள் அறிந்திருக்கின்றனர். அவர்களுடைய வாழ்த்துக்களை நான் எடுத்து வந்துள்ளேன்.

இந்திய தொழிலதிபர்களை ஆப்கன் பக்கம் திரும்பச் செய்யும் பணிகளை மேற்கொள்ளவே இங்கு வந்துள்ளேன்.

இவ்விடயத்தில் இரு நாடுகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன. பிரதமர் மன்மோகன் சிங் ஆப்கானிஸ்தானின் மிகச் சிறந்த நண்பர் என்றும் புகழாரம் சூட்டினார். (வ)

## காஷ்மீருக்கு எதிரி இந்தியாவே முதல்வரின் சகோதரர் கருத்து

காஷ்மீர் மாநிலத்தின் எதிரி இந்தியாவே என்று அந்தமாநில முதல்வர் உமர் அப்துல்லாவின் சகோதரர் கருத்து வெளியிட்டார். இது சர்ச்சையை ஏற்படுத்தும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான் இடையே தீராத பிரச்சினையாக இருந்து வருவது காஷ்மீர் பிரச்சினை. காஷ்மீரின் சில பகுதிகள் ஆஷாத் காஷ்மீர் என்ற பெயரில் பாகிஸ்தான் வசமிருந்தாலும் பல பகுதிகள் இந்தியா வசமே இருக்கின்றன. இருப்பினும் இந்தியாவின் மொத்த இராணுவத்தினரும் காஷ்மீரிலேயே முகாமிட்டிருக்கின்றனர்.

இது அந்தமாநில மக்களுக்குப் பிடிக்காவிட்டாலும் எல்லைப்பகுதி என்பதால் மாநிலத்தை தீவிரவாதிகள் மற்றும் அந்நிய சக்திகளிடமிருந்து காக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே இருக்கிறது.

**இந்தியா— பாகிஸ்தான் இடையே தீராத பிரச்சினையாக இருந்து வருவது காஷ்மீர் பிரச்சினை**

இந்தநிலையில் காஷ்மீர் மாநிலத்தை ஆளும் தேசிய மாநாடு கட்சியின் கூடுதல் பொதுச்செயலாளரும், அந்த மாநில முதல்வர் உமர் அப்துல்லாவின் பங்காளி யுமான (ஒன்று விட்ட சகோதரர்) முஸ்தபா கமால், கிஷ்த்வாரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், ஜம்மு, காஷ்மீர் பகுதியில் நிலவும் அமைதியை இராணுவத்தினர் சீர்குலைக்கின்றனர். இந்த மாநிலத்தின் உண்மையான எதிரி இந்தியாதான் என்று கூறியுள்ளார். இந்தப் பேச்சு, அரசியல் வட்டாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஏலத்துக்கு வந்தது 2 ஜி அலைக்கற்றை

டில்லி, நவ.14

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு குறித்த உரிமங்களுக்கான ஏலம் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. இதில், 40 ஆயிரம் கோடி இந்திய ரூபாவை எதிர்பார்த்து மத்திய அரசு காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் நேற்று முன்தினம் ஆரம்பித்த ஏலத்தின்போது ஆரம்ப சுற்றுகளில் விறுவிறுப்பு காணப் படவில்லை.

முதல் நாளில் 9 ஆயிரத்து 225 கோடி ஏலம் நடைபெற்றபோதும், மும்பை, டில்லி உட்பட்ட நகரங் களுக்கு ஏலம்பெற எவரும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'2ஜி' ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடுகளை ஏலம் விடாமல், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்பட்டதால், அரசுக்கு கோடிக்கணக்கில் நட்டம் ஏற்பட்டுள்ளளது.

இந்த முறைப்பாட்டை அடுத்து நாடு முழுவதும் இந்த ஊழல் விவகாரம் தீவிரமடைந்துள்ளது. உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டதுடன் அந்த விசாரணைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி, மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள், தொலைத்தொடர்பு நிறுவன நிர்வாக இயக்குநர்கள் என்று 15 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, ராஜா காலத்தில் வழங்கப்பட்ட, 122 ஸ்பெக்ட்ரம் உரிமங்களை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமான ஏலம் இரவு வரை இடம்பெற்றுள்ளது.

முதல் நாள் ஏலத்தில் 9 ஆயிரத்து 225 கோடி இந்திய ரூபா மட்டுமே பெறப்பட்டது. (வ)



சமூக சேவகர் அன்னா ஹசாரே குழுவின் புதிய அலுவலகம் ஒன்று டில்லியில் திறந்து வைக்கப்பட்டது. அதற்கான பூசையில் பங்கேற்ற அன்னா ஹசாரே குழுவினர்.

## 40 வருடங்களின் பின்னர் இந்தியா வந்தார் சூகி

டில்லி, நவ.14

மியன்மார் நாட்டின் எதிர் கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி, 40 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று இந்தியாவுக்குச் சென்றார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக பல ஆண்டுகளாகப் போராடி வந்த சூகியையு சுமார் 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைத்தது மியன்மார் அரசு.

மியன்மாரில் ஜனநாயகத்தை மீட்கப் போராடிய அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.



இந்தநிலையில், உலக நாடுகளின் நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் 2010 ஆம் ஆண்டு இராணுவத்தின் ஆதரவுடன் மியன்மாரில் ஆட்சி அமைந்தபோது நாட்டில் மெல்ல மெல்ல பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் ஏற்பட ஆரம்பித்தன.

சூகி வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில், இந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் மியன்மார் நாட்டில் தேர்தல் நடைபெற்றபோது சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி, தான் போட்டியிட்ட 44 இடங்களில் 43 இடங்களை வெற்றி கொண்டு முக்கிய எதிர்க் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதற்கிடையே அண்மையில் மியன்மார் சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங், சூகியைச் சந்தித்து இந்தியா வருமாறு அழைப்பு விடுத்தார்.இந்த அழைப்பை ஏற்று நேற்று அவர் இந்தியா சென்றார்.

சூசி தனது இளமைக் காலத்தை இந்தியாவில் கழித்துள்ளார். அவரது தாயார் இந்தியாவுக்கான மியன்மார் தூதராக இருந்த போது அவருடன் டில்லியில் சூகி தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## தே.மு.தி.க. சட்டத்தரணியை பதவி நீக்கினார் விஜயகாந்

சென்னை, நவ.14

மாநில சட்டத்தரணிகள் அணி செயலரை, அந்தப் பொறுப்பிலிருந்து தே.மு. தி.க. தலைவர் விஜயகாந்த் திடீரென நீக்கியுள்ளார்.

தே.மு.தி.க. மாநில சட்டத்தரணிகள் அணி செயலராக செயற்பட்டு வந்த மணிமாறன், விஜயகாந்தின் தனிப்பட்ட சட்டத்தரணியாகவும் இருந்து பல்வேறு வழக்குகளிலும் முன்னிலையாகியுள்ளார்.

ரிஷிவந்தியம் தொகுதியில் விஜயகாந்த் வெற்றிப் பெற்றது செல்லாது என்று அறிவிக்கக்கோரி தொடரப் பட்ட வழக்கிலும் விஜயகாந்தின் சட்டத்தரணியாக மணிமாறன் செயற்பட்டு வந்தார்.

இந்த நிலையில் மணிமாறனை கட்சிப் பொறுப்பில் இருந்து விஜயகாந்த் அதிரடியாக நீக்கியுள்ளார். (வ)

## பட்டாசுத் தொழிற்சாலையில் தீ 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் சாவு

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். இந்தசம்பவம் மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அருரீயா மாவட்டத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் தீபாவளிக்கான பட்டாசு தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்த வேளை யில் இந்தத் துயரச் சம்பவம் ஏற்பட்டது. மேற்படி விபத்துக் குறித்து மேலதிக தகவல் கிடைக்கப்பெறவில்லையென்றாலும் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடைபெற்ற இடத்தில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதுடன் பொலிஸாரின் விசாரணையும் ஆரம்பித்துள்ளது.

இதற்கிடையே குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 பட்டாசு கடைகள் எரிந்து சாம்பலாயின. (வ)

## கருணாநிதி - சிதம்பரம் திடீர் சந்திப்பு

-சென்னை, நவ.14

தி.மு.க. தலைவர் கருணாநிதியை மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை திடீரெனச் சந்தித்துப் பேசினார்.

சென்னையிலுள்ள கோபாலபுரம் இல்லத்தில் சுமார் 45 நிமிடங்கள் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது. அதன்பின்னர் ப.சிதம்பரம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-




கருணாநிதியை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தேன். 4 மாதங்களாக கருணாநிதியைச் சந்திக்கவில்லை. அதன் காரணமாகவே அவரைச் சந்தித்துப் பேசினேன். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக எதுவும் அவரிடம் பேசவில்லை. பொதுவான விடயங்கள் தொடர்பாகவே பேசிக் கொண்டிருந்தோம். சி.ஏ.ஜி. அறிக்கை தொடர்பாக மத்திய இணையமைச்சர் நாராயணசாமி கூறியதாகச் சொல்லப்படும் கருத்துகளை அவரே மறுத்துள்ளார்.

சி.ஏ.ஜி.க்கு மேலும் மூன்று அதிகாரிகளை நியமிக்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை. பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வருமான வரித் துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது. தனிப்பட்டவர் மீதான வழக்குகள் தொடர்பாக நான் கவனம் செலுத்துவதில்லை - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்தில் ரயில் விபத்து; 3 பேர் சாவு



எகிப்து தலைநகரான கெய்ரோவில் இரு ரயில்கள் எதிரெதிரே மோதிக் கொண்டன. இதில் 3 பேர் உயிரிழந்தனர்.

கெய்ரோவில் இருந்து 91 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாயோவம் என்ற இடத்தில் எதிரெதிரே வந்த இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர். விபத்து நடந்த இடத்தில் இன்னும் மீட்புபணிகள் நடைபெற்று வருகின்றன. விபத்து குறித்த விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.

## கவுதமாலாவில் மீண்டும் நிலநடுக்கம்



கவுதமாலாவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடச் சுவர் இடிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கவுதமாலா நாட்டில் கடந்த புதன்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 52 பேர் உயிர் இழந்தனர். 6 ஆயிரம் வீடுகள் சேதம் அடைந்தன. இந்த துயரத்தில் இருந்து அந்த நாட்டு மக்கள் மீள்வதற்குள் நேற்றுமுன்தினம் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் பசுபிக் கடலோரத்திலுள்ள ஷாம்ப்வெரிகோ என்ற இடத்தில் ஏற்பட்டது. 6.2 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடச் சுவர் இடிந்து விழுந்ததில் ஒரு பெண் படுகாயம் அடைந்தார். வேறு சேத விவரங்கள் தெரியவரவில்லை.

# கை மாறும் அதிகாரம்

## சீனாவின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விலகுகிறார் ஜனாதிபதி ஜிண்டாவோ

பீஜிங், நவ.14

சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, இராணுவம் உட்பட தன் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுகிறார்.

அவருக்கு பதில் புதிய அதிபராக ஷி ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

சீன ஜனாதிபதியாக ஹூ ஜிண்டாவோ பதவி வகித்து வருகிறார். இவர் கடந்த 2003ஆம் ஆண்டு இந்த பொறுப்பை ஏற்று 10 ஆண்டுகளாக நீடிக்கிறார். அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர், சீன இராணுவ தலைவர் எனப் பல முக்கிய பதவிகளையும் வகிக்கிறார்.

இந்த நிலையில் ஆட்சி அதிகாரங்களில் மாற்றம் செய்ய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது. அதற்காக கட்சியின் உயர்மட்ட குழு கூட்டம் பீஜிங்கில் சில நாள்களுக்கு முன்பு தொடக்கம் விவாதிக்கப்பட்டு வருகிறது. இன்றுடன் உயர்மட்டக் கூட்டம் முடிவடைகிறது.

ஹூ ஜிண்டாவோ ஜனாதிபதி பதவி, கட்சி தலைவர் பொறுப்பு ஆகியவற்றில் இருந்து விலகுவார் என்றும் இராணுவத் தலைமை பதவியில் அவரே நீடிப்பார் என்றும் கருதப்பட்டது.




ஆனால் ஜிண்டாவோ இராணுவம் உள்ளிட்ட அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் விடுபட தீர்மானித்து விட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

''எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் 70 வயதை அடைகிறார் ஹூ ஜிண்டாவோ. அவர் தன் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விலகுகிறார். ஏறத்தாழ அவர் அரசியல் மற்றும் அதிகாரம் எல்லாவற்றில் இருந்து ஓய்வு எடுக்கிறார்'' என்று சீனப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ஹூ ஜிண்டாவோ கட்சியின் உயர்மட்ட குழுவின் நிறைவு நாளான இன்று தனது பதவி விலகலை முறைப்படி அறிவிப்பார். அதன்பிறகு புதிய அதிபராக தற்போதைய துணை அதிபரான 59 வயதான ஷி ஜின் பிங் தேர்வு செய்யப்படுவார்.

அதேசமயம் பிரதமர் பதவிக்கு தற்போதைய துணை பிரதமர் லி கேகுயாங் தேர்ந்தெடுக்கப்படுகிறார். புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில்தான் ஆட்சி அதிகார மாற்றம் நடைமுறைக்குவரும்எனத் தெரிகிறது.

### 8 ஆயிரம் வீரர்கள் பங்கேற்கும்

## ஈரானின் போர் ஒத்திகை

ஈரான் மிகப்பெரிய அளவில் விமானப்படை போர் ஒத்திகை ஒன்றை நடத்தி வருகிறது. ஈரானின் பாதி நிலப்பரப்புக்கு ஒப்பான கிழக்கு பகுதியில் இந்தப் போர் ஒத்திகை நடைபெறுகிறது.


அணு ஆயுதங்களை ஈரான் தயாரித்து வருவதாக இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. கடும் தொனியிலான எச்சரிக்கையையும் வெளியிட்டுள்ளன. இதனால் ஈரான் தனது இராணுவ பலத்தை அதிகரிப்பதில் முழு வீச்சில் இறங்கியுள்ளது. நவீன ஆயுதங்கள், ஏவுகணைகளைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் ஈரான் மிகப்பெரிய அளவில் விமானப் படைப் போர் ஒத்திகையை நடத்தி வருவதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது. நாட்டின் பாதி நிலப்பரப்புக்கு ஒப்பான கிழக்கு பகுதியில் இது நடக்கிறது. இந்த ஒத்திகையில் 8 ஆயிரம் வீரர்கள் ஈடுபடுகிறார்கள். போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள், குண்டுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது. ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையே நிலவும் முறுகல் நிலையை இது மேலும் சிக்கலாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.



**ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையே நிலவும் முறுகல் நிலையை இது மேலும் சிக்கலாக்கும்.**

## வெள்ளத்தில் மிதக்கும் வெனிஸ் நகரம்



தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக வெனிஸ் நகரம் வெள்ளத்தில் மிதக்கிறது.

கடந்த 150 வருடங்களில் என்றுமில்லாத அளவுக்கு வெனிஸ் நகரில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஏற்கனவே மிதக்கும் நகரான வெனிஸ், தற்போது நீரால் சூழப்பட்டு மூழ்கும் நகராக மாறியுள்ளது. மத்திய வெனிஸ் நகரின் 70 சதவிகித பகுதிகளில் 59 அங்குலம் அளவுக்குத் தண்ணீர் சூழ்ந்துள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளனர்.

வெனிஸ் நகரின் பிரபலமான செயின்ட் மார்க்ஸ் சதுக்கம் சுற்றுலாப் பயணிகளால் எப்போதும் நிரம்பி வழியும். ஆனால் கன மழை மற்றும் வெள்ளம் காரணமாக அங்கு தற்போது வெள்ளம் மட்டுமே கரை புரண்டோடுகிறது. வீதிகள் தோறும் வெள்ளம் அபாயகரமான அளவில் ஓடுவதால் பல இடங்களில் மக்கள் வெளியில் வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 100 மில்லியன் பைபிள்கள்

### சீன நிறுவனம் சாதனை

100 மில்லியன் பைபிள் புத்தகங்களை அச்சிட்டு சீன நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

சீனாவின் நான்ஜிங் மாகாணத்தில் உள்ளது ''அமிற்றி பிரிண்ரிங்'' நிறுவனம். இந்த நிறுவனம் 1988ஆம் ஆண்டு முதல் இதுவரை 100 மில்லியன் பைபிள்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனத்துக்கு பல்வேறு நாடுகளில் கிளைகள் உள்ளன. 70 நாடுகளில், 90 மொழிகளில் 40 மில்லியன் பைபிள்களை அச்சிட்டு வழங்கியுள்ளது.

சீனாவில் மதங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. எனினும் அங்கு 1.6 கோடி கிறிஸ்துவ மக்களும், 55 ஆயிரம் தேவாலயங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கின்னஸில் இடம்பிடித்த 100 அடி சொகுசுக் கார்





உலகிலேயே மிக நீளமான சொகுசு கார் ஒன்றை கலிபோர்னியாவில் உள்ள ஜே ஓபெர்க் நிறுவனம் தயாரித்துள்ளது. இது கின்னஸில் இடம் பிடித்துள்ளது. இந்த காரின் நீளம் 100 அடி. 26 சக்கரங்களைக் கொண்டது.

குறுகிய தெருக்களிலும் சுலபமாக திரும்பும் வகையில், காரின் நடுப்பகுதி வளைந்து, மடியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வெறும் கண்காட்சிகளில் வைக்கும் நோக்கத்தில் மட்டுமே இந்த கார் முதலில் தயாரிக்கப்பட்டது.

ஆடம்பர பங்களாவுக்கு இணையாக இந்தக் காரின் உள்ளே அனைத்து சொகுசு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. நீச்சல் குளம், மதுபானசாலை, செயற்கைக் கோள் அண்ரெனா உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய மினி அரண்மனை போல் உள்ளது இந்தக் கார்.

இந்தச் சொகுசு காருக்கு வீதிகளில் ஓடுவதற்கான சட்ட அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை. எனினும் சினிமா படப்பிடிப்பு, திருமண ஊர்வலம் போன்றவற்றுக்கு இந்தக் காரை வாடகைக்கு எடுக்க உலக கோடீஸ்வரர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

## சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக உருவாகியது தேசிய கூட்டணி

### அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு

டமாஸ்கஸ், நவ. 13

சிரிய புரட்சியாளர் மற்றும் எதிர்ப்பாளர்களின் புதிய தேசியக் கூட்டணி நேற்றுமுன்தினம் கட்டார், டோகாவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கூட்டணிக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கட்டார் மற்றும் துருக்கி போன்ற நாடுகள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

புதிய கூட்டணியின் தலைவராக தலைநகர் டமாஸ்கஸ் மசூதியின் முன்னாள் இமாம் மௌசு அல் காதிப் செயல்படுவார்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் படைக்கும் புரட்சிப் படைகளுக்கும் இடையே கடுமையான உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதன் காரணமாக பெருமளவான மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். அயல் நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

இந்தநிலையிலேயே கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. தேசியக் கூட்டணியின் அனைத்து முயற்சிகளுக்கும் நமது ஆதரவு தொடரும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.



[illegible] நகரத்தில் கடும் மழை பெய்து வருகிறது. ஆறுகள் கரைபுரண்டு நகருக்குள் புகுந்துள்ளதால் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கரைபுரண்டோடும் வெள்ளத்தில் கயிற்றைப் பிடித்தவாறு வீதியைக் கடக்க முயற்சிக்கும் சிறுவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# திபெத்தியர்களின் தீக்குளிப்பு சீனாவுக்கு ஒரு பொருட்டல்ல

## தலாய்லாமா குற்றச்சாட்டு

ரோக்கியோ,நவ.14

''சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து திபெத்தியர்கள் தீக்குளிப்பது சீன அரசுக்கு ஒரு பொருட்டல்ல. அது குறித்து விசாரணை நடத்துவதிலும் அவர்களுக்கு அக்கறையில்லை'' என்று தெரிவித்துள்ளார் தலாய் லாமா.



திபெத்தில் சீன ஆட்சியை எதிர்த்து 2009 முதல் இதுவரை 69 திபெத்தியர்கள் தீக்குளித்துள்ளனர். அவர்களில் 54 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தொடர்ச்சியாக 7 பேர் தீக்குளித்துள்ளனர்.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலாய் லாமா இதுகுறித்து தெரிவிக்கையில்,

''திபெத்தில் சீன அதிகாரத்தை எதிர்த்து, திபெத்தியர்கள் தொடர்ந்து தீக்குளிக்கின்றனர். திபெத்தியர்கள் தீக்குளிப்பது சீனாவுக்கு ஒரு பொருட்டல்ல. இது குறித்து உரிய விசாரணை நடத்தக்கூட சீன அரசு முயல்வதில்லை. என் மீது குற்றம் சுமத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்கிறது. திபெத்தில் சீன ஆட்சியை விலக்கிக் கொள்வதே இந்தத் துயரங்களுக்கு முடிவாக அமையும்'' - என்று தெரிவித்தார்.

ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள தலாய் லாமா, ஜப்பான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றவுள்ளார். ஜப்பானில் தலாய்லாமாவை நுழைய அனுமதித்ததற்கு சீனா கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.



சிரிய அரச ஆதரவுப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களை அகற்றும் பொதுமக்கள்.

## போதைப் பொருள் கடத்தல் மன்னன் கைது

30,000 கிலோவுக்கு மேல் போதைப் பொருள்களை கடத்தி சட்டவிரோதமாக அமெரிக்காவில் விற்பனை செய்த கடத்தல் மன்னன் வெனிசுலாவில் கைது செய்யப்பட்டான்.

கொலம்பியாவில் போதை பொருள் கடத்தல் தொழில் கொடி கட்டி பறக்கிறது.

அங்குள்ள கடத்தல் கும்பல்களில் மிக முக்கிய நபர் ஜோர்ஜ் மில்டன் சிபியுயன்ட்ஸ் வில்லா. இவன் எப்பொழுதும் 12 அடியாள்களுடன், அதிநவீன சொகுசு காரில்தான் வலம் வருவானாம்.

இவன் 30,000 கிலோவுக்கு மேல் போதை பொருள்களை கடத்தி சட்டவிரோதமாக அமெரிக்காவில் விற்பனை செய்துள்ளான்.

வில்லா பற்றி தகவல் அளித்தால் 25 கோடி ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்றும் அமெரிக்க அரசு அறிவித்திருந்தது. இந்தநிலையில் வெனிசுலா அரசு இவனை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

## விமானப் பணிப் பெண்களும் இனி முக்காடிட வேண்டும்

### உத்தரவிட்டது எகிப்து அரசு

விமான பணிப்பெண்கள் முக்காடிட்டு பணிக்கு வர வேண்டும் என்று எகிப்து அரசு வலியுறுத்தியுள்ளது.

எகிப்தில் ஹோஸ்னி முபாரக் ஆட்சியில் இருந்த வரை முஸ்லிம்களுக்கான கட்டுப்பாடுகள் அதும் பெரிய அளவில் விதிக்கப்படவில்லை.

மக்கள் புரட்சி மூலம் கடந்தாண்டு முபாரக் ஆட்சியிலிருந்து தூக்கப்பட்டார். ஜனநாயக முறைப்படி நடத்தப்பட்ட தேர்தலில், முஸ்லிம் சகோதரத்துவ கட்சி வெற்றி பெற்று முகமது முர்சி ஜனாதிபதியாகி உள்ளார்.

இவர் ஆட்சிக்கு வந்தபின்னர் முஸ்லிம் பழமைவாத கொள்கைகள் நடைமுறைக்கு வரத் தொடங்கியுள்ளன. முன்னர் தொலைக்காட்சி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பர்தா அணிய வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

தற்போது விமானப்பணி பெண்களும் தலைமுடியை மறைக்கும் விதத்தில் முக்காடிட்டு பணிக்கு வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எகிப்து விமானத் துறையில் 900 பணிப் பெண்கள் உள்ளனர். இவர்கள் பணியில் இருக்கும் போது முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

## 1,700 கிலோ ஹெராக்கெய்ன் மீட்பு

பராகுவேயில் இருந்து பிரேஸில் மற்றும் வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் கடத்தப்பட இருந்த 1,700 கிலோ ஹெராக்கெய்ன் போதைப்பொருளை அதிகாரிகள் மீட்டுள்ளனர். பிரேஸிலின் வடகிழக்கு எல்லைப் பகுதில் வைத்து இவை கைப்பற்றப்பட்டன. பொலிஸாரால் 20 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெராக்கெய்ன்தவிர, சிறிய வகை விமானங்கள் மற்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன். இந்த ஆண்டு தென் அமெரிக்காவில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களில் இதுவே அதிகம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தென்அமெரிக்காவிலேயே அதிகம் ஹெராக்கெய்ன் உற்பத்தி செய்யும் நாடு பராகுவே என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரிய கிறிஸ்தவர்களுக்கு புகலிடம்

### ஜேர்மனி அறிவிப்பு

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் அளிக்க தயார் என்று ஜேர்மன் கிறிஸ்துவ அரசியல் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஜேர்மனியின் ஆளுங்கட்சியான சி.எஸ்.யூ மற்றும் அதன் சகோதர கட்சியான சி.டி.யூ ஆகியவற்றின் நாடாளுமன்ற தலைவர் வோல்க்கர் காதெர் தெரிவிக்கையில்,

''சிரியாவில் உள்நாட்டு போர் நடந்து வருவதால், அகதிகளாக வெளியேறும் கிறிஸ்தவர்களுக்கு புகலிடம் தருவது மனிதநேய நடவடிக்கை.

இதேபோன்று ஈராக்கில் போர் நடைபெற்ற போது ஜேர்மனிக்கு புகலிடம் தேடி வந்த பல கிறிஸ்தவர்களுக்கு புகலிடம் அளிக்கப்பட்டது''- என்று தெரிவித்தார்.

ஆளுங்கட்சியின் மனித உரிமை நடவடிக்கைகளின் தகவல் தொடர்பாளரான எரீக்கா ஸ்ட்டீன் பெக் கருத்துத் தெரிவிக்கையில்,

''கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தாங்கள் குடியிருந்த நாட்டிலேயே இருக்க விரும்புகின்றனர். நாட்டை விட்டு வெளியேறினாலும் திரும்பவும் அங்கு போய் தங்கி விடவே ஆசைப்படுகின்றனர்''- என்றார்.



## விமான விபத்தில் சிக்கியோரின் உடல்கள் கண்டுபிடிப்பு

பிரான்ஸின் தெற்குப் பகுதியில் விபத்துக்குள்ளான அல்ஜீரிய நாட்டு விமானத்தில் பயணித்தவர்களின் கருகிய உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகளின் போது விமானத்தின் கறுப்புப் பெட்டியும், இறந்தவர்களின் உடல்களும் மீட்கப் பட்டுள்ளன. இந்த விமானம் மனித நடமாட்டம் குறைந்த இடத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானம் முற்றாகத் தீப்பிடித்து எரிந்துள்ளது. இந்த விமானத்தில் ஆறுபேர் பயணித்தனர். இவர்கள் அல்ஜீரியா வங்கிக்குத் தேவையான காகிதக் கட்டுகளை விமானத்தில் கொண்டு சென்றனர்.- என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.


IELTS BRITISH COUNCIL

IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

We Provide
1. Examination Preparation Course Provider For British Council.
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. Free IELTS pack & Mock Exams

02.02.2013 IELTS இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.
அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு

CAMBRIDGE ESOL CERTIFIED TRAINER
IELTS Registration Centre For British Council

| | |
|---|---|
| Course Schedule | Sat & Sun |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

வகுப்புக்கள் ஆரம்பம் 17.11.2012

For registration and further details contact
CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887



## மீட்கப்படாத அடகு நகைகள் ஏலவிற்பனை

பின்வரும் வங்கிக் கிளைகளில் அவ்வங்கிகளின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிவரை மீட்கப்படாமலுள்ளதும், 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையிலும் மீட்கப்படாத, புதுப்பிக்கப்படாத அடகு நகைகள், இவ்வட்டவணையின் 4ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலும், இடத்திலும் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

(ஏலவிற்பனை ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு தொடங்கும்)

| கொமர்ஷல் வங்கியின் கிளை | திகதி வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் | மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி | ஏலவிற்பனையின் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| சுன்னாகம், கிளிநொச்சி, திருநெல்வேலி, ஸ்டான்லி வீதி (யாழ்ப்பாணம்), மானிப்பாய், சாவகச்சேரி, வேலணை, அச்சுவேலி, யாழ்ப்பணம், நெல்லியடி | 2011/09/26 வரையிலான 12 மாதங்களுக்கும், 2012/03/26 வரையிலான 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 30/11/2012 | திருநெல்வேலி கிளை 01/12/2012 மற்றும் 02/12/2012 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிற்பனையை இரத்துசெய்வதற்கும், காலந்தாழ்த்துவதற்கும், இணைப்பதற்கும், அல்லது ஏலவிற்பனையின் இடத்தை மாற்றுவதற்கும் கொமர்ஷல் வங்கி தத்துவம் கொண்டுள்ளது.

(சி/4840)

கொமர்ஷல் வங்கி
சி[illegible]ளர்- அடகுச்சேவை
[illegible]ல்லீ வீதி, கொழும்பு 02
தொலைபேசி. 011 2 353 806, 011 5 743 997

COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(30)

ஆனால் அந்த அறையை விட்டு வெளியில் வந்ததும் எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள். தன் எதிரியே எதிரில் வந்தாலும் சிரித்து - வரவேற்பார்கள். அன்புடன் பேசுவார்கள்.



நீங்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப சம்பளம் கிடைக்கவில்லையா? பொறுமையை இழக்காதீர்கள். உங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கவில்லையா? சினம் கொள்ளாதீர்கள். அமைதியுடன் சிந்தியுங்கள். உங்கள் முதலாளியின் நிலைமையைப்பற்றி எண்ணிப்பாருங்கள். எப்போதும் மற்றவர்கள் கோணத்திலிருந்து பார்க்கும்போது தான் உண்மை புரியும். சந்தர்ப்பம் வரும்போது உங்கள் முதலாளியே உங்களுக்குச் சம்பள உயர்வையும், உத்தியோக உயர்வையும் கொடுப்பார்.

நீங்கள் வேலை செய்யுமிடத்தில் யாராவது ஓர் அதிகாரி உங்கள் எதிர்காலத்தின் குறுக்கே நிற்கிறாரா? ஆத்திரப்படாதீர்கள். அமைதியுடன் உங்கள் பணியைச் செய்யுங்கள். கடமையைச் செய்து முடியுங்கள். உங்கள் உயர்வை எவராலும் தடுக்க முடியாது. உங்களுக்குக் குறுக்கே நிற்கும் அதிகாரி திடீரென்று மாற்றலாகிப் போய்விடலாம். அல்லது அவர் மனம் மாறி விடலாம்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, அமைதி, கடமை இவைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்குத் தோல்வியே ஏற்படாது. அனைவராலும் இவர்கள் மதிக்கப்படுவார்கள். என்றாவது ஒரு நாள் திடீரென்று இவர்கள் வாழ்க்கையில் மிகமிக உயர்ந்து விடுவார்கள்.

**கோழைகளாக வாழ வேண்டாம்**

நம்மை மற்றவர்கள் விரும்ப வேண்டும் என்றால் நாம் கோழைகளாக வாழக்கூடாது. வீரர்களாக வாழ வேண்டும். வீரம் என்பது எந்த நேரத்திலும் நம் மனத்தில் இருப்பதில்லை. ஆபத்து வரும்போது, இக்கட்டான நிலை வரும்போது வீரம் தன்னால் ஏற்படும். ஆபத்து வரும்போது வீரத்துக்கு இடம் கொடுக்காமல் பயந்து ஓடுகிறவர்கள் கோழைகள்.

பயப்படுவது வேறு, கோழைத்தனமாக இருப்பது வேறு.

ஒருவர் தன் நண்பரை அழைத்துக்கொண்டு ஒரு பெரிய ஹொட்டலுக்குப் போனார். இருவரும் சாப்பிட்டு முடித்ததும் உணவு பரிமாறுபவர் பில்லைக் கொண்டு வந்து வைத்தான். அவர்கள் சாப்பிட்டது 10 ரூபாய் 80 சதத்துக்கு. ஹொட்டலுக்கு அழைத்துச் சென்றவர் சரியாக 10 ரூபாய் 80 சதத்தைத் தட்டில் வைத்துவிட்டு எழுந்து கொண்டார்.

நண்பருக்கு மிகச் சங்கடமாக இருந்தது. அந்த ஹொட்டலில் சாப்பிட வந்தவர்கள் அனைவரும் உணவு பரிமாறுபவருக்கு டிப்ஸ் கொடுத்தார்கள். இனாம் 25 சதம். அல்லது 50 சதம் தான். ஆனால் அவர் டிப்ஸ் வைத்தால் பில் கொடுத்தவர் தப்பாக நினைத்துக் கொள்வார். ஆகையால் பேசாமல் போய் விட்டார்.

டிப்ஸ் வைக்காதது அவர் கடைப்பிடிக்கும் கொள்கையாக இருக்கலாம். அது போகட்டும். ஆனால் டிப்ஸ் வைக்காத மனிதர் மீண்டும் அந்த ஹொட்டலுக்குப் போக வெட்கப்பட்டார். இது ஏன்? அந்த உணவு பரிமாறுபவர் இவரை அடையாளம் கண்டு கொள்ளவா போகிறான்? வெட்கப்பட்டு ஹொட்டலுக்குப் போகாமல் தன் கொள்கை வழி நிற்காத கோழை என்று வேண்டுமானால் அவரை அழைக்கலாம்.

இப்படிப்பட்ட செயல் கோழைத்தனம். இந்தக் கோழைத்தனத்தால் ஏகப்பட்ட பேர்கள் நண்பர்களை இழந்து விட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் இவர்களை விரும்புவதில்லை.

மோட்டார் சைக்கிளில் ஒரு காட்டின் வழியே ஒருவன் போக விரும்பினான். அந்த வட்டாரத்தில் இருந்த சிலர் அவன் போவது ஆபத்து மிகுந்த இடம், புலி ஒன்று அந்தப் பக்கம் போகிறவர்களை அடித்துக் கொன்று விடுகிறது என்றார்கள். அவன் அஞ்சினான். ஆனால் அது கோழைத்தனமல்ல. தேவைப்படும் போது அஞ்சுவது மிகவும் புத்திசாலித்தனம். அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும் என்று திருவள்ளுவர் கூடச் சொல்லி இருக்கிறார்.

நீந்தத் தெரியாத ஒருவன் ''தான் எதற்கும் அஞ்சுபவன் இல்லை'' என்று சொல்லிக் கடலில் குதிக்கலாமா? அது முற்றிலும் மடமை. அவன் உயிர் இழப்பது நிச்சயம். அவன் செய்தது அறியாமை. வீரமல்ல.

காட்டைக் கடக்க நினைத்தவன் ஒரு திட்டம் போட்டான். கையில் ஒரு துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் காட்டைக் கடக்க முடிவு செய்தான். அதன்படி அவன் எச்சரிக்கையுடன் சென்றான். இந்த இடத்தில் அவன் செய்தது மிகவும் புத்திசாலித்தனமான வேலை.

-தமிழ்வாணன்- (தொடரும்)

# நல்லொழுக்கத்தோடு கற்றலில் தேர்ச்சி பெற்று சமூக முன்னோடிகளாக வாழ்ந்து காட்டுவோம்

## வலி. கிழக்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி,நவ.14

''மாணவர்கள் நல்லொழுக்கத்தோடு கூடிய கற்றலில் தேர்ச்சி பெற்று நற்பிரஜைகளாகவும் சமூக முன்னோடிகளாகவும் வாழ வேண்டும். இந்த விடயத்தில் பாடசாலைச் சமூகமும், பெற்றோரும் ஒருமித்த கருத்து நிலைப்பாட்டோடு ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.'' என்று வலி. கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் திருமதி முருகசோதி ஸ்ரீரதி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கற்றலுக்கு உரிய பருவம் மாணவப்பருவம். இந்தப் பருவத்தில் எமக்கு வழங்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்திக் கல்வியில் முன்னேற வேண்டும். மாணவர்கள் நல்லொழுக்கத்தோடு கூடிய கற்றலில் தேர்ச்சி பெற வேண்டும். நற்பிரஜைகளாகவும், சமூக முன்னோடிகளாகவும் வாழத் தலைப்படல் வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலையில் கற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு பெற்றோர்கள் இருந்து விடக்கூடாது. பிள்ளைகளின் கற்றலிலும், நடத்தை மாற்றத்திலும் பெற்றோர் விழிப்புணர்வோடு தமது கண்காணிப்பைச் செலுத்த வேண்டும். மாணவர்களை நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், சிறந்த கற்றல் தேர்ச்சி கொண்டவராகவும் உருவாக்குவதில் பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் ஒருமித்த கருத்து நிலைப்பாட்டோடு ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

எமது சூழலில் அமைந்துள்ள பாடசாலைகளை உரிய முறையில் அபிவிருத்தி செய்து, சுற்றாடலிலேயே கற்றல் வசதியைப் பிள்ளைகளுக்கு வழங்க முன்வர வேண்டும். பிள்ளைகளைத் தூர இடங்களில் உள்ள நகரப்புற பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற மனோபாவத்தை மாற்றி, உள்ளூரில் கற்பதற்குரிய ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளைத் தூர இடங்களுக்கு அனுப்பி வைப்பதால் நெறிபிறழ்வான நடத்தைக்கு உள்ளாகி விடுகின்றனர் என்பதைச் சமகால நிகழ்வுகள் நிதர்சனமாக வெளிப்படுத்தியுள்ளன.

மாணவர்கள் கற்றலில் முழு மனத்தோடும், ஆர்வத்தோடும் ஈடுபடும் அதேவேளையில், நல்லொழுக்கங்களையும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும். சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ முற்படுவதோடு, சமூக முன்னேற்றத்துக்கும் உழைக்க வேண்டும்.

சமகாலத்தில் இளம் சந்ததியினர் இடையே ஏற்பட்டு வரும் நெறிபிறழ்வான நடத்தைகள் வன்முறை உணர்வுகள் பெற்றோருக்கும், சமூகத்துக்கும் தலைகுனிவை ஏற்படுத்தி விடுகின்றன. இதில் இருந்து முழுமையாக விடுபட வேண்டும்.

கிராமியச் சூழலில் குறித்த காலப்பகுதியில் மேலோங்கி இருந்து சாதனை படைத்த இத்தகைய பாடசாலைகள் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும். அதற்கு சமூகம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும் - என்றார். (எ-11)



பேராசிரியர் நா.ஞானகுமாரன் எழுதிய ''சைவ சித்தாந்தத் தெளிவு'' எனும் நூல் வெளியீடு யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் நூலை வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் கா.குகபாலன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். விழாவுக்கு பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் தலை வகித்தார். நூலாசிரியரும் படத்தில் காணப்படுகிறார். (எ)

# தன்னலம் கருதாது பிறருக்காக சேவை செய்தவர் அமரர் முதலியார்

## வேலணை பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

தன்னலம் கருதாது பிறருக்காக சேவை செய்து அதில் ஆத்ம திருப்தியை இறுதிவரை கண்டு மறைந்தவர் முதலியார். முதலியாரின் இடத்தை வேறு எருவராலும் நிரப்ப முடியாது என்று வேலணை பிரதேச சபைச் செயலாளர் செ.ரமேஷ் தெரிவித்தார்.

சமூக நிபுணரான முதலியாரின் வாழ்வும் - வளமும் எனும் நூல் வெளியீட்டு விழா சுவிஸ் ஒன்றிய எழுத்தாளர் மு.செந்தூர்செல்வன் தலைமையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரமேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 50 ஆண்டுகாலமாக மக்களுக்கு பலவேறு பணிகளை ஆற்றியவர் முதலியார். முதலியார் சமாதான நீதிவானாக, மத்தியஸ்தனாக, விவசாயிகளின் தோழனாக, விவசாயிகளின் தந்தையாக, விவசாய மன்னனாக பல பதவிகளையும், பட்டங்களையும், விருதுகளையும் பெற்று பெரும் சேவைகளைச் சமூகத்துக்கு ஆற்றியவர்.

இறுதியாகச் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரும் நாடளாவிய ரீதியில் 98 ஆயிரம் விவசாயிகளுக்கு அடிப்படை ஓய்வூதியம் 3000 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார். இவ்வாறான ஒரு பெரியவரை நாம் இழந்துள்ளோம். இந்த வெற்றிடம் நிரப்பப்பட முடியாத ஒன்று - என்றார்.

இந்த நிகழ்வில் செந்தூர் செல்வன், அமரர் முதலியாரின் கடந்த 50 ஆண்டு கால வாழ்வும் - வளமும் தொடர்பான விவரணப் படத்தொகுப்பை வெளியிட்டார். (எ-50)

# கலை இலக்கிய விழா போட்டி முடிவுகள்

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டோர் விவரங்கள் வருமாறு:-

பாடசாலை மாணவர்களுக்கிடையில் கனிஷ்ட, சிரேஷ்ட என இருபிரிவுகளாகவும் திறந்த போட்டிகளாகவும் நடத்தப்பட்டன.

**கனிஷ்ட பிரிவு, கவிதை**

பி.வேதிகா (கனகராயன் குளம் மகா வித்தியாலயம்), பொ. இராசநந்தன் (மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்), தெ.சரண்யா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்).

**கட்டுரைப்போட்டி**

தெ. சரண்யா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்), நா. சசிகலா (புளியங்குளம் இந்துக்கல்லூரி), க. துளசிகா (மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்)

**கையெழுத்துப்போட்டி**

கே. திவ்யா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்), ச. பானுசா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்), ப. விஜிதா (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

**கவிதைப்பாடல்**

ந. நிதர்சினி (மாறாஇலுப்பை அ.த.க. பாடசாலை), யோ. இந்துஜன் (மாறாஇலுப்பை அ.த.க பாடசாலை), அ. அனோஜன் (மாறாஇலுப்பை அ.த. க. பாடசாலை)

**சிரேஷ்ட பிரிவு, கவிதைப்போட்டி**

த. தர்சிகா (புளியங்குளம் இந்துக் கல்லூரி), க. சஞ்ஜீவிதா (புளியங்குளம் இந்துக்கல்லூரி), க. அண்ணா (மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்)

**கட்டுரைப்போட்டி**

எஸ். நிலக்‌ஷன் (கனகராயன் குளம் மகாவித்தியாலயம்), த.கோகிலா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்), சு.பத்மரூபி (நெடுங்கேணி ம.வி.)

**சிறுகதை**

சி. தர்சிகா (மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்), சி. ரதிதேவி நெடுங்கேணி மகா வித்தியாலயம்)

**திறந்த போட்டிகள்**

**கவிதைப் போட்டி**

ஆ. தம்பையா (ஒலுமடு), ம.தவரூபன் (மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்)

**சிறுகதை**

சி. தெய்வேந்திரம்பிள்ளை (இறம்பைக்குளம், நெடுங்கேணி) (எ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பிள்ளைகள் கவனம்

கண்ணின் மணிகள் போல கருத்தோடு கவனிக்கப்பட வேண்டியவர்கள் சிறுவர்கள். ஏனெனில் உலகு பற்றிய நடைமுறைவிடயங்கள், செயல்களுக்கான விளைவுகள், நன்மை, தீமைகள் என்பன பற்றிய புரிதல்கள் அவர்களுக்கு இந்தப் பருவத்தில் முழுமையாக இருப்பதில்லை.

சிறுவர் பருவம் என்பது உலகோடு ஒத்திசைவதற்காக கற்றுக்கொள்ளும் காலம். என்னென்ன செய்தால் எவையெவை நடக்கும் என்று அவர்கள் அனுபவ ரீதியாக இந்தப் பருவத்திலேயே கற்றறிந்து பக்குவப்பட்டுக்கொள்கிறாா்கள். எனவே சிறுவர்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதனை பெற்றோர் வழிகாட்டுவதுடன், அவர்களின் செயற்பாடுகளிலும் எப்போதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால் பெரும்பாலும் அனேக பெற்றோர் தமது பிள்ளையின் கல்வியில் மட்டும் அக்கறை செலுத்துவதோடு தமது கடமை முடிந்து விட்டதாக எண்ணுகின்றனர். ஆனால் சிறுவர்களின் உலகம் தனியே கல்வியால் மட்டும் கட்டமைக்கப்பட்டதல்ல. உண்மையில் கல்விக்கு அப்பாலான வெளிகளே சிறுபராயத்துப் பிள்ளைகளை அதிகம் கவர்கின்றன. ''எப்போது பாடசாலை முடியும், எப்போது விளையாடப் போகலாம்'' என்பதே சிறுவர்களின் எண்ணமாக இருக்கிறது. இதனாலேயே பாடசாலைக்குச் செல்லும் போது 'பஞ்சியுடன்' செல்லும் சிறுவர்கள், பாடசாலை முடிவடைந்த மணி ஒலித்த உடனேயே சிட்டுக் குருவிகளாக முகங்களில் மகிழ்வோடு ஓடி வருகின்றனர்.

சிறுவர்களின் விளையாட்டு உலகு எப்போதும் பெற்றோருக்கு அந்நியப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. எனவே இதன்போது அவர்களின் தலையீடு குறைவாகவே நிகழ்கிறது. அதற்காக பிள்ளைகளை விளையாட விடாமல் தடுக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. உண்மையில் பிள்ளைகளை விளையாட அனுமதிப்பதோடு, அவர்களுக்கு குறித்த விளையாட்டில் உள்ள பாதுகாப்புத் தன்மை பற்றிய அக்கறையையும் கொள்ள வைக்கவேண்டும்.

இந்த அக்கறை குறையத் தொடங்கியதன் விளைவாக சிறுவர்கள் தாம் தேர்ந்தெடுக்கும் விளையாட்டில் உள்ள விபரீதங்களை புரிந்துகொள்ளாமல் அவற்றில் இறங்கி விடுகிறார்கள். இதனால் உயிரிழப்பு நேரக் கூடிய வகையிலான பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அண்மையில் பளையில் ஹன்டரில் சிக்கி சிறுமி ஒருத்தி உயிரிழந்தமை, ஆனந்தபுரத்தில் இனந்தெரியாத பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய போது பறிபோன சிறுமியின் உயிர், தாயாருடன் முரண்பட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்ட தென்மராட்சி சிறுவன், குளத்தில் தன் சகபாடிகளோடு நீர் விளையாட்டில் ஈடுபட்டு மூழ்கிப்போன சிறுவன், தொண்டைக்குழியில் மாபிள் சிக்கியதால் திக்கித் திணறி மாண்டுபோன பாலகன் என்று அண்மைக் காலமாக நடந்தேறிய சிறுவர் சாவுகள் பெற்றோரின் கவனவீனத்தையே துலாம்பரமாக்குகின்றன.

இவ்வாறு தமது பிள்ளைகள் மீதான அக்கறையையும் கண்காணிப்பையும் பெற்றோர் தளர்த்துவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. எப்போதும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் உலகோடு சேர்ந்தோடுவதற்காக தற்போது பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் பிள்ளைகளோடு செலவிடும் நேரம் அவர்களுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கிறது. தமது தாத்தா பாட்டிகளுடனோ அல்லது உறவினர்களிடமோ அல்லது பணியாளரிடமோ வளரும் குழந்தைகள் பெற்றோரின் கண்டிப்பை உணர்வது அரிது. எனவே தமது பாதுகாவலர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு தமக்குப் பிடித்த காரியங்களில் இந்தச் சிறுசுகள் இறங்கி விடுகின்றனர். இதுவே சில சமயங்களில் பாரதூரமான சம்பவங்களுக்கும் வித்திட்டு விடுகின்றது.

கூட்டுக்குடும்ப வாழ்வு சிதைவடைந்தமையும் பிள்ளைகள் கண்காணிப்பு இன்றி வளர்வதற்கு இன்னொரு காரணம். பெற்றோர் வேலைக்குச் சென்றுவிட்டாலும் மாமா, மாமி, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா என்று வீட்டிலேயே இருக்கும் உறவினர்கள் அந்தப் பிள்ளைகளை தமது சொந்தப் பிள்ளைகள் போல காத்துவந்தனர். ஆனால் காலவோட்டம் கூட்டுக்குடும்ப முறையை சிதைத்து இப்போது மனிதர்களை தனித்தனிக் குடும்பங்களாக உதிர்த்து விட்டுள்ளது.

அதற்காக பிள்ளைகளை கவனிக்காமல் விடுவது சரியாகி விடாது. என்னதான் வேலைகள் இருந்தாலும், நேரமின்மை தடைசெய்தாலும் தமது பிள்ளைகளை எந்தவித ஆபத்துமின்றி காப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமை. விலங்குகள், பறவைகள் கூட தமது குட்டி, குஞ்சுகளை எந்தவித ஊறும் நேராமல் காப்பதைப் பார்த்தாவது திருந்துவோமா?

# இலட்சியக் குவியத்தில் இன்னொரு கதிர்.....

■ செந்தூரி

**2009** இன் பின்னான முழு மூன்று வருடங்களைக் கடந்த பின்னால் நேற்றுத்தான் பெயர் குறிப்பிட்டு ஒரு போராளியின் வீரச்சாவு அறிவித்தல் உலகத் தமிழர்களுக்கு வந்திருந்தது. களத்துக்கு வெளியே தாய்த் தேசத்தின் எல்லைகளுக்கு அப்பால் தம்முயிரை கரைத்துக் கொண்ட, கிருஷ்ணகுமார் என்கின்ற 'கிட்டு', பாலசிங்கம் என்கின்ற 'தேசத்தின் குரல்' ஆகிய மூத்த உறுப்பினர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டான் மதீந்திரன் என்கின்ற 'பரிதி'. 'பரிதி' என்கின்ற காற்று ஓய்ந்து போனதே...'' என்ற வரிகளோடு இணையம் வழியாக சோகம் தூவுகின்ற இசை வடிவத்தில் குளிந்து கிடக்கின்றது, ஈழத் தமிழினத்தின் இன்னுமொரு ஆற்றாமை. கடந்த வருடம் இதே கார்த்திகை இருட்டுக்குள், கடுமையான கத்திக் குத்துக்கு இலக்காகி மாதக் கணக்கில் ஓய்வுக்குப் பின்னரும் வீசி நின்ற 'வேலைப் புயலை'', மீண்டுமதேயொரு ஆபத்து எதிர்நோக்கும் காலச்சுருளுக்குள் காவு கொடுத்திருக்கின்றோம் என்ற காற்றின் சோகம், எதிரியின் வியாபகத்தை எமக்குள் மீண்டுமொரு முறை இடித்துரைத்து விட்டுச் சென்றிருக்கின்றது. ஈடு செய்ய முடியாத இழப்பொன்றுடன்.

நடராஜா மதீந்திரன்- விடுதலை இயக்கத்தினுள் தன்னை இணைத்துக் கொண்டது 1983 இல். தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது பயிற்சி அணியுடன் இணைந்து தமிழகத்தில் தனது மூன்று கட்டப் பயிற்சிகளை முடித்து, தாயகம் திரும்பி செஞ்சமராடி நின்றவன் பரிதி. 1990 களில் காலில் விழுப்புண் தாங்கி சிகிச்சைக்காக இந்தியா சென்று தங்கியிருந்த காலங்களில், அவனால் தனக்குள் ஏற்படுத்தப்பட்ட தொடர்பாடல் திறன், பிறமொழியாற்றல், புதுமை விருப்பம் யாவையும் இணைந்த சேர்வை, அடுத்தடுத்த தளங்களுக்கு அவனை உயர்த்தியது. ஆரம்ப நாள்களில் அடையாளம் வெளிப்படுத்தாத ஐரோப்பிய தேசசஞ்சாரியாக அலைந்து திரிந்து, தேச விடுதலைப் போருக்கான புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை வலுப்படுத்தும் வேலைகளில் தன்னை முற்றிலும் இணைத்துக் கொண்டவனின், பெயர் சொல்லுமிடமாக 'பிரான்ஸ்' மாறிக் கொண்டது 2002 இன் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தின்போதேயாகும்.

ஐரோப்பிய அமெரிக்க தேசங்கள் 'பயங்கரவாதம்' என்கின்ற சொல்லை, 'அடக்குமுறையின் ஆயுதமாக' கையிலெடுக்கத் தொடங்கியிருந்த, இரட்டைக் கோபுர தகர்ப்பின் பின்னான காலங்கள், புலம்பெயர் தமிழர் தேசங்களில் ஈழவிடுதலைப் போருக்கான ஆதரவு திரட்டும் பணிகளில் ஏற்படுத்திய இடர்கள் கொஞ்சநஞ்சமல்ல. 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரம் விளைந்த வன்னியின் வாசல்களில் சிங்களம் முற்றுகைத் தயார்களோடு நின்று கொண்டிருந்த சம நாள்களில் இந்தியாவின் மும்பை தாஜ் விடுதி, புகையிரத நிலையம் உட்பட சனநெரிசல் மிக்க இடங்களில் அப்பாவிகளைப் பலியடுத்த தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றன. தனது வருடாந்த மாவீரர் வார இறுதிநாளின் கம்பீர அறிக்கையால் உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்து கவனிக்கப்படுபவனான ஈழத் தமிழ்த் தலைமகன், அந்த முறை கவனிக்கப்படாமலே போனதும் அதன் பின்னான மாவீரர் வார உரைகளைத் தாயகத்துக்கு வெளியே ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளானதும் கூட.

'தங்களுக்கு சற்றும் சம்பந்தமேயில்லாத மும்பைத் தாக்குதல் மற்றும் நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தகர்ப்பு என்பன காற்றினால் மாறிய உலக ஒழுங்குக்கு முன்னால், தமிழனின் விடுதலைப் போராட்டமும் பத்தோடு, பதினொன்றாகப் பயங்கரவாதக் கிடப்பில் எறியப்பட்டதன் பின்புலத்தில் 'தமிழன்' என்கின்ற இனத்தின் துரதிர்ஷ்டம் பெரும் பங்கு வகித்திருக்கின்றது. 'இயற்கை'யும், 'துரோகமுமே' எம்மினத்தின் மிகப்பெரும் எதிரிகள் என்கின்ற அனுபவக் கூற்றின் முதற் பாதியில் நாம் செம அடிவாங்கிய சந்தர்ப்பங்களுக்கு போதுமான உதாரணங்கள் இவை.

ஆயுதச் சம நிலையில் சந்திரிக்காவின் மாமனுக்கும் மருமக்களுக்கும் எத்துணை பீதி கொடுக்க முடியுமோ, அத்தனையும் கொடுத்து அடித்த 'அலைகள்' மூன்றோடு, ஆனையிறவும் வசமாகிய வரலாற்று வெற்றிகளை கொண்டாடிய களைப்பாறிட முன்னரே, சர்வதேசம் சொல்வதை சற்றும் பிசகாமல் செய்ய வேண்டிய சூழல் ஈழத் தமிழனின் முதுகில் வரிந்து கட்டப்பட்டது. வலிமையானதொரு ஆயுதக் கட்டமைப்புடன், தென்னாசியாவின் 'நான்காவது பெரிய இராணுவம்' என்கின்ற கதிரையில் எகிறிக் குதித்து ஏறி விளையாடிய எங்கள் பிள்ளைகளின் ஓட்பந்தத் திணிப்பில் தெரிந்தோ தெரியாமலோ 'அமெரிக்க - தலிபான்' தலையிடியும் சேர்ந்து கொண்டது.

உண்மையில் உலகத் தமிழினத்தின் 'சத்திய சோதனைக்காலம்' 2002 முதல் 2005 வரையான புரிந்துணர்வு உடன்படிக்கைக்குட்பட்ட 'சோடா - கண்டோஸ்- உருளைக்கிழங்கு' காலமே என்பது, சோற்றில் சொக்கிப் போய், 'சிகிரியாவுக்கும், தலதா மாளிகாவுக்கும்' முன்னால் இளித்தபடி புகைப்படமெடுத்த எம் சிற்றறிவுக்கு எட்டாமலே கழிந்துபோனது. 'பலவீனப்படுத்தல்' என்கின்ற பல்லுப்பிடுங்கும் வேலைக்கு புறப்பட்டவர்கள் கழுத்துப் பட்டிகளை இறுக்கி, சப்பாத்துக்களுக்குள் கால்களை சொருகிக் கொண்டு 'சமஷ்டிப் பெட்டி' தூக்கிய போதே, தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, போராளிகளை 'வீட்டுக்கு வீடு', 'பாடசாலைக்குப் பாடசாலை', 'ஊருக்கு ஊர்' அனுப்பிப் போராடும் பலத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை அறிவுரைத்த எம் தலைவன் எத்துணை பெரிய 'காலப்பேரவதானி', 'சமாதான காலத்தில் ஏன் படைத்திரட்ட வேண்டும் என்ற பெரிய 'மஹாதனமுக்தா' கேள்வியொன்றுடன் எம் வாசல்களில் வந்த போராளிகளை வெறுத்து, அறுத்து, கறுத்த வார்த்தைகளால் வீசியெறிந்த எம் புத்தியை வெளுத்துக் கட்டுவதற்கு ஏன் ஒற்றைச் செருப்புக் கூட கிடைக்கவில்லை எமக்கு அன்று? ''ஆயுதம் - அரசியல்' என்ற இரண்டு பக்கமும் கூர் தீட்டப்பட்ட கத்திமுனையில் நடந்து பழக்கப்பட்டு உலகுக்கே முன்னுதாரணமானப் போராட்ட இயக்கமொன்றின், எச்சரிக்கையுணர்வை சொந்த மக்களாகிய நாமே ஏற்றுக்கொள்ளத் தயங்கினோம், ஏற்றுக் கொள்ளாமல் வீசியெறிந்தோம் என்பது அவ்வளவு சுலபத்தில் அழிந்துபோகும் கறையா என்ன?

ஆனால் புலம்பெயர் காலங்களில் இந்த வகை யுக்தி புதிதல்ல என்பதால் ரணிலின் ஆட்சிக் காலத்திலேயே அமரக் கூட நேரமில்லாமல் ஆலாய்ப் பறந்து பணியாற்ற வேண்டிய தேவை தீவுக்கு வெளியேயான போராளிகளுக்கு எழுதாக்கடமையாகிப் போனது. கனவுத் தீர்வுப் பெட்டியுடன் எம் எதிர்க்கதிரையில் அமர்ந்திருப்பவன், விசுவாசப் பங்காளி இல்லை, வெறிகொண்ட முதலாளி என்பதை விளக்கியுரைத்து, இயக்கத்துக்கான 'நிதியூற்றுக்களை' வறண்டு விடாமல் பார்த்துக் கொள்வதில் தம் கடிகாரத்தைவிடவும் வேகமாக சுழன்றவர்களில் பரிதி முதன்மையானவன். உலகையை கொடுத்தனுப்பி விட்டு ஊசிக்காக ஊரையே கூட்டி வழக்காடும் அதே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே, லாச்சப்பலிலும், யாழ்ப்பாணத்திலும்.

'விரல்களில் தேனால் நனைந்தவன், புறங்கையை நக்காமல் இருப்பானா?'' என்கின்ற எல்லாத் தங்கத் தமிழ் சந்தேகங்களையும் மீறி, பரிதி வாழ்ந்து, வழிநடத்தியமைக்கு சான்று முகநூல் நண்பனான 'பிரபா - சே' எழுதியுள்ள பதிவு.

'வெறும் இரண்டு குளிராடைகளை மாற்றி மாற்றி மறுகியவனே,
இன்றைக்கு தாங்காமல் நடுங்குகின்றோம், எங்கே நீ?'

தன் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி வருமானத்தின் அரைப்பங்கு தொகையை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்கிக் கொண்டு போர்ச் செலவினங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருந்த தேசிய இராணுவம் ஒன்றுக்கு எதிரான போருக்கு எவ்வளவு செலவாகும்? பல்வேறு நேச நாடுகளிடமிருந்து ஆயுதக் கடன்கள், இறக்குமதிக்கு எதிரான வரித்தளர்வுகள், சர்வதேச வியாபார மானியங்கள், போர்த்தளபாட உதவிகள், ஆளணித் தொடர்புகள் என விரிவுபடுத்தப்பட்ட களத்துக்குப் பின்னான வழங்கலைக் கொண்டுள்ள மூர்க்க எதிரியை மூச்சிரைக்க வைத்தவர்கள் எம் பிள்ளைகள் என்கின்ற பெருமை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான வழங்கலின் மூலங்களாக உறைபனிக்குளிரில் இறுகிவிடும் வியர்வைத் துளிகளால், தம் உழைப்பை உறுதுணையாக வழங்கிய புலம்பெயர் தமிழர்களுக்கே பாதிக்கு மேல் போய்ச் சேரும்.

வெறுமனே உணர்வுகளால் மட்டுமே உந்தப்பட்டு வசனம் பேசிவிட்டுப் புறப்படுபவர்களாக இல்லாமல் முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னெழுந்த மக்கள் எழுச்சியை சரியாக இலக்குநோக்கி முன்னகர்த்தும் கடுமையான பணியை ஐரோப்பிய தேசங்களைச் சேர்ந்த கூட்டிணையாளர்கள் தம்மடையாளங்களை பெரிதும் மறைத்தபடியே புரிந்து வந்தனர். வேலையும், வீடுமாக இயந்திரங்களின் வேகத்தோடு இயங்குகின்ற புலத்தமிழர்களை வீதிகளில் திரட்டவும் முற்றுகைக்காக தயார்ப்படுத்தவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு அழைக்கவும் வழக்கத்துக்கு மேலதிகமான சக்திச் செலவு அவர்களின் அன்றாடப் பணிகளை நிச்சயம் இரட்டிப்பாக்கியே வைத்திருக்கின்றது.

வெறுமனே பணத்தால் மட்டும் அளந்துவிடமுடியாத சமர்க்களங்களுக்கு வெளியேயான ஊக்கிகளாக இருப்பவர்கள், அடைக்கலம் கோரிய தேசங்களின் ஆட்சியாளர்கள் மீதும் பாதுகாப்பு மீதும் கொண்டுள்ள எழுந்தமானமான நம்பிக்கை மட்டுமே அவர்களை அலட்சியமாக வெளித்தெரியும் தைரியத்தை கொடுத்திருந்தது. மாவீரர் தினத்தை கொண்டாடுவதில் கடந்து இரு வருடங்களில் புலந்தமிழர்களிடையே எழுந்த சில கருத்து முரண்பாடுகள், பரிதி மீதான கடந்த வருட தாக்குதலின்போதே, 'சாட்டிக் கழிப்பதற்கான' வாய்ப்பாக அமைந்திருந்தன. ஆனால் எல்லாம் முடிந்த பின்னரே, எம் ஓட்டைகளை சீந்துக்கிப் பார்த்து சினந்துவிட்டு அடங்கிப்போகும் எம்மினத்தின் எகத்தாளம், இன்னொரு உயிரைப் பறித்து விட்டுப் போனது.

'புலத்தமிழர்களுடன் பேசுவதற்கு தயார்' என்று புறத்துக்கு சிரித்தபடி, புலத்தமிழர்களின் பலவீனங்களினூடாக பலச் சிதைவுக்கான ஏவல்களினால் அகத்துக்குள் வன்மங்கக்கியபடி அகலக்கால் வைத்துவிட்ட பேரினத்தின் இழிசிந்தைக்கு நிகர்மாற்றாய் 'இன ஒற்றுமை'யை தவிர வேறேதும் பதிலாக இல்லை எம்மிடம். ''நீ புறப்பட்ட பாதை மீண்டும் முட்களாலும் இரத்தத்தாலும் தசைத் துண்டங்களாலும் நிரப்பப்படுகின்றதா? அஞ்சற்க உலகத் தமிழா! தேர்ந்த உன் பாதை, 'சரியானதே' என்ற எதிரியின் செய்தி அது. எம் இலட்சிய வீரியத்தின் இறுக்கத்தை அறிந்துகொள்ள கொடுத்த பெரும் விலை- பரிதி. குனிக அவன்நினைவில், பணிந்திடாமல் நிமிர்க பலமேற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருவ உலகின் சொந்தக்காரர்கள்



அறிவியல் ஆராய்ச்சி செய்வதற்காக அண்டார்டிக்காவை காவை 29 நாடுகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இதன் பெரும்பகுதி உலக வெப்பமயமாக்கலால் அதிக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

ஆர்க்டிக் பரப்பில் ஏராளமான கனிய வளங்கள் உண்டு. ஆர்க்டிக் பகுதியில் எஸ்கிமோக்கள் என்ற இன மக்கள் வடதுருவ வட்டத்துக்குள் வாழ்கின்றனர். இவர்கள் வடதுருவ ஆர்க்டிக் வட்ட மண்ணின் மைந்தர்கள். எஸ்கிமோ என்ற வார்த்தை அல்கோன்குயன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பச்சை மாமிசம் உண்பவர்கள் என்பதாகும். கிழக்கு சைபீரியா அலாஸ்காவின் ஓரம், கனடா மற்றும் கிரீன்லாந்தில் இவர்கள் வசிக்கின்றனர்.

எஸ்கிமோக்களில் இன்னுாட் மற்றும் யூபிக் என இருவகையினர் இருக்கின்றனர். அலூட் என்ற மூன்றாவது இனமும் உண்டு. இவர்கள் குட்டையாகவும், லேசான மஞ்சள் நிறத்துடனும், கறுத்த நீண்ட முடியும், கருமை நிறக் கண்களும், அகன்ற முகமும் உடையவர்கள். அலாஸ்காவில் இருப்பவர்கள் சைபீரியாவிலிருந்து சுமார் 5,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்திருக்கின்றனர் என்று அறியப்படுகிறது. பாரம்பரியமாக இந்த மக்கள் உணவு, வெளிச்சம், சமையல் எண்ணெய், கருவிகள் மற்றும் ஆயுதங்கள் என அனைத்துக்கும் கடல்வாழ் பாலூட்டிகளையே நம்பி இருக்கின்றனர். அவர்களின் பொருளாதாரத்துக்கு மீனையும், கலைமான்களையுமே நம்பி உள்ளனர்

எஸ்கிமோக்களுக்கு வாழ்தல் என்பது என்றைக்கும் நிரந்தரப் பிரச்சினையானதே. சீல்தான் அவர்களின் வாழ்வாதாரமான முக்கிய உணவு. இருப்பினும் கோட் என்னும் மீன், திமிங்கிலம் மற்றும் கடல்வாழ் உயிரினங்களையும் உண்பார்கள். கோடையில் கலைமான்கள், ஆடுகள் போன்றவற்றையும் உண்பார்கள். குளிர்கால உணவில் துருவக்கரடி, துருவநரி, துருவ முயல் போன்றவைகள் மேல் நாட்டம் இருப்பினும், அவர்களுக்கு இஷ்டமான உணவு சீல், கலைமான் கறி, வால்ரஸின் கல்லீரல் மற்றும் திமிங்கிலத்தின் தோல் மட்டுமே.

உணவு தேடுதல் என்பது பெரிய சிக்கலாக உள்ளதால் எஸ்கிமோக்கள் ஓர் இடத்தில் நிலையாக வாழாமல், தொடர்ந்து நாடோடிகளாகவே இருக்கவேண்டிய நிலையே இருக்கின்றது. மூன்று வகையான வீடுகளில் இவர்கள் வசிக்கின்றனர். கோடையில் சீல் என்ற பாலூட்டியின் தோலால் ஆன கூடாரம். எலும்பை ஊடுருவும் குளிர் காலத்தில் பெரும்பாலோர், பனியை வெட்டி எடுத்து, சுருள் வடிவத்தில் கவிழ்த்த கிண்ணம் போன்ற இக்ளூ என்ற பனி வீடு உருவாக்கி அதில் வசிக்கின்றனர். இது தாற்காலிகமானதே. குளிர்காலத்தில் மரம், எலும்பு போன்றவற்றால் ஆன கூடார வீடும் உண்டு.

பொதுவாக இவர்கள் குழுவாகவே வாழ்கின்றனர். இதில் பல நூறு மனிதர்கள் இருகின்றனர். எஸ்கிமோக்கள் கூட்டுக் குடும்ப வாழ்க்கையே நடத்துகின்றனர். குழந்தைகளைப் பொக்கிஷமாக கருதுகின்றனர். குழந்தைகளைத் திட்டுவதோ அடிப்பதோ எப்போதும் இல்லை. 'இக்ளூ'வைக் கட்ட அவர்களுக்கு 30நிமிடம்தான். 3-4 மீ உயரம்தான் வீட்டின் உயரம். இதில் ஐஸ் படுக்கையின் மேல், முடி உள்ள தோலை விரித்து படுத்து உறங்குவார்கள். வீட்டில் மின்விளக்கெல்லாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத விஷயம். போக்குவரத்து சாதனமே இல்லாத உலகம் இது. ஒரு சைக்கிள்கூட கிடையாது. நாய்கள் இழுத்துச் செல்லும் ஸ்லெட்ஜ் வண்டிதான் இவர்களின் அதிகபட்சமாய் வேட்டை முடித்து உணவு கொண்டு வரும் சாதனம்.

எஸ்கிமோக்கள் கடல் வாழ் விலங்குகளின்தோலையேஉடையாக அணிகின்றனர். அவர்கள் விரும்பி அணிவது கலைமான் தோலினால் ஆன உடையைத்தான். ஏனெனில் அது உடலைக் கொஞ்சம் கதகதப்பாக வைத்திருக்கும். எடை குறைவாகவும் இருக்கும். இது கிடைக்காவிட்டால்தான் சீல், துருவக் கரடி, துருவ நரி போன்றவற்றின் தோலையும் பயன்படுத்துவார்கள். அவர்கள் உடை அணியும் முறை இடத்துக்கு இடம் வேறுபடுகிறது. குளிர் காலத்தில் எலும்பு மற்றும் மரத்தாலான உடைகளை அணிகின்றனர். குளிர்காலத்தில் இரண்டு அடுக்கு உள்ள உடைகள் போடுகின்றனர். அந்த உடை, உள்ளே தோலால் ஆனதும், அதன் வெளியே முடியுடன் கூடியதாகவும் இருக்கும். இரண்டுக்கும் இடையே காற்றோட்டம் இருக்கும்.

இதனால் உடலின் வெப்பம் பாதுகாக்கப்படுகிறது. கோடையில் ஓர் அடுக்கு உள்ள உடை அணிகின்றனர். இன்று எஸ்கிமோக்களின் கலாசாரம் மாறிவிட்டது.


வெளியிலிருந்து வாங்கும் உணவு, உடைகளைப் பயன்படுத்துகின்றனர். வெளியிடங்களுக்கு பணிக்கும் வருகின்றனர். முன்பெல்லாம் ஆண்கள் உணவு தேடுவார்கள்; வேட்டைக்குச் செல்வார்கள். வீட்டில் உணவு சமைப்பதும், உடைகள் தைப்பதும், குழந்தைகளைப் பராமரிப்பதும்தான் பெண்கள் பணி. கடல் கடவுளான செட்நா தான் தங்களைக் காப்பாற்றுகிறது என்பது இவர்கள் நம்பிக்கை. மேலும் அங்குள்ள குளிர்நிலை, சூரியன் மற்றும் நீரை காப்பற்றுவதும் தேவதையே என ஆழமான நம்பிக்கை உள்ளவர்கள் எஸ்கிமோக்கள். ★

“ எஸ்கிமோக்கள் கூட்டுக் குடும்ப வாழ்க்கையே நடத்துகின்றனர். குழந்தைகளைப் பொக்கிஷமாக கருதுகின்றனர். எப்போதுமே குழந்தைகளைத் திட்டுவதோ அடிப்பதோ இல்லை



# சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்குவோமே....

■ சி.நற்குணலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,கரவெட்டி.



18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் எனக் கருதப்படும் மாணவர்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் ஆரோக்கிய, ஆளுமைமிக்க சந்ததிகளாக மிளிர, உளசமூக இடையீட்ட ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

மாணவர் தமது கல்விப் பருவத்தில் கெட்டித்தனமுள்ள சகபாடிகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டும். ஒரு மாணவன் நல்லவனாவதும், தீயவனாவதும் சகபாடிகளின் உறவிலும் தங்கியுள்ளது. சகபாடித் தெரிவானது ஒருவனது வாழ்வு முடிவுறும் காலம் வரை தொடரக்கூடியதுமாகும். எனவே அந்த விடயத்தில் கூடியகவனம்செலுத்தப்பட வேண்டும்.

மாணவர் உளம் ஆசிரியர்களாலும், பெற்றோராலும் சமூகத்தினாலும் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. மாணவர் உளப் பாதிப்புக்கு உட்படுத்தப்படக் கூடாத ஒன்று. உளம் பாதிப்படையும் போது மன உளைச்சலை ஏற்படுத்தி கல்வி மற்றும், பாடசாலைச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கான மனோநிலையை மாணவர் இழந்துவிடுவர். இது மட்டுமன்றி சோகத்துக்கு உட்படுவர், எந்த விடயமாயினும் குன்றிய ஆர்வம் காணப்படும். இது பிள்ளையின் நேர்ப்பாதையை மாற்றியமைக்கக் கூடும். பாடசாலையில் உடல், உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் தண்டனைகள் வழங்கக்கூடாது. ஏன் வீட்டிலும் கூட அவ்வாறு தண்டனைகள் வழங்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவத்தின் மூலம் தவறுகளைப் பூச்சிய மட்டத்தில் வைத்திருத்தல் சிறந்தது.

பாடசாலைகளிலும், வீட்டிலும் அன்பு, காப்பு ஆகிய தேவைகள் நிறைவேறாத போது, எழும் மன எழுச்சித் தாக்கமே மாணவர்கள் பிறழ்வான நடத்தையில் ஈடுபடக் காரணம். எனவே நல்ல ஒழுங்கு விழுமியங்கள், சுய கட்டுப்பாடுகளையும் மாணவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டும். அதற்கு பெற்றோரும் ஆதரவு அளித்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் எல்லோரும் உளவயத்துணை பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

மாணவர்கள் நேர்மை மனப்பாங்கான நடத்தைகளைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் மிக உயர் விழுமியங்களையும், சிறந்த நியமங்களையும் மாணவர்களிடம் விருத்தி செய்ய வேண்டும். இவை மாணவர் மத்தியில் மனிதப் பண்புகள் விருத்தியடைய உதவும். இல்லையேல் நடத்தைப் பிரச்சினை கொண்ட மாணவர்கள் உருவாக்கம் பெறுவர். அவ்வாறு உருவாக்கம் பெறின் அவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படும்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். மாணவர்கள் பிரசங்கம், நாடகம், வில்லுப் பாட்டு போன்ற துறைகளில் ஈடுபட வாய்ப்பளிக்க வேண்டும்.

இதன் மூலம் மேடைக் கூச்சம் நீங்கும், பேச்சுத் திறன், தேடல் என்பன வளர்ச்சியடையும், அத்துடன் ஓவியம், சித்திரம் போன்ற ஆக்க வெளிப்பாட்டுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் மாணவரது ஆக்கத்திறன் வளர்ச்சியடையும் எனவே மாணவர்களது இயலுமை, இயலாமைக்கு பின்னூட்டல் வழங்குவதன் மூலம் சிறந்த மாணவ சமுதாயத்தை, பன்முகங் கொண்ட மாணவர்களை வளர்த்தெடுக்க முடியும்.

உடல், உள ஆரோக்கியம் கற்றலுக்கான மனோநிலையைத் தேற்றுவிக்கும். இதற்கு மாணவர்கள் யோகா செய்வது சிறந்ததாகும். யோகா உடல், உள விருத்திக்கு ஏற்புடையதாகும். உள அமைதிக்கு வழிகோலும் கருவியாகும். அத்துடன் மன அமைதி, நோய்ப்பாதுகாப்பு என்பவற்றுக்கும் சிறந்ததாகும்.

எனவே மாணவர்களுக்கான மேற்குறித்த உள சமூக இடையீட்டு ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் முக்கியமானதும், வரவேற்கக் கூடியதுமாகும். இந்தத் திட்டம் சகல பாடசாலைகளிலும் தற்போது நடைபெற்று வருகின்றது. சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கி எதிர்கால சமூகத்துக்கு ஆரோக்கிய, ஆளுமையுள்ள சந்ததியை உருவாக்கிக் கொடுத்தலே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

நடுப்பகல் வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. விறகு வெட்டி ஒருவன் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு காட்டில் மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய உடல் முழுவதும் வியர்வை கொட்டியது. விறகுகளை வெட்டி அதை விற்றால்தான் அன்றைய பொழுது அவனுடைய மனைவி மக்கள் அரைவயிறுக் கஞ்சியாவது சாப்பிட முடியும். அதனால் அவன் மிகக் கடினமாக அங்கே உழைத்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் முனிவர் ஒருவர் அந்தப் பக்கமாக வந்தார். அவனுடைய வறுமை நிலையினை அறிந்து கொண்ட அவர் அவன் மீது இரக்கம் கொண்டார். ஒரு சூட்சுமமான பாதையைச் சுட்டி காட்டி, ''நீ இந்த வழியே தொடர்ந்து செல். உன் வறுமை மாறிவிடும்'' என்று சொன்னார்.

முனிவர் கூறியதைக் கேட்ட அந்த விறகு வெட்டி அவர் காட்டிய வழியில் நடந்து சென்றான். சிறிது தூரம் சென்றதும் அவன் களைப்படைந்தான். முனிவர் சொன்ன வழியே வந்தும் கூட ஒன்றும் தென்படவில்லையே என்று எண்ணினான்.

'ஒழுங்காக விறகு வெட்டினாலாவது அரைவயிறுக் கஞ்சியாவது என் குடும்பத்தாருக்கு கிடைக்கும். வெட்டியாக இப்படி நடந்து கொண்டே இருந்தால் அந்த அரை வயிற்றுக் கஞ்சியும் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும்' என்று அவன் நினைத்தான். அதனால் மீண்டும் பழைய இடத்துக்கே திரும்பி வந்தான். முன்போலவே விறகுகளை வெட்டி, சுமந்து சென்று விற்றுவிட்டு வீடு போய் சேர்ந்தான்.

அந்த முனிவர் கூறியது அவன் மனதில் இருந்ததே ஒழிய, அதை முழுமையாக அவனால் செயற்படுத்த முடியவில்லை. தன் குடும்பத்தார் பட்டினியில் வாடுவார்களே என்கிற தாக்கம், முனிவர் கூறியபடி சென்றும் கூட ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற சஞ்சலம்.... விரக்தி ஆகிய முட்டுக்கட்டைகள் அவனைக் குழப்பமடையைச் செய்தன. ஆகவே, வேறு எந்த முயற்சியுமின்றி அவன் முன்புபோலவே அந்தக்காடுகளில் விறகு வெட்டிக் கொண்டு கஷ்ட ஜீவனத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

சில நாள்கள் கழிந்தன. அந்த விறகு வெட்டி வழக்கம் போல் கடும் வெயிலில் விறகு வெட்டியபடி இருந்தான். முன்பு வந்த முனிவர் திரும்பவும் அந்த வழியே வந்தார். ''என்னப்பா... உன் வறுமை தீர்ந்ததா...? என்று கேட்டார்.

''இல்லை...சுவாமி... என் வறுமை அப்படியேதான் இருக்கிறது. நீங்கள் சொல்லியபடி நான் போய்ப் பார்த்தேன்... எதுவும் தென்படவில்லை. தொடர்ந்து போய்க்கொண்டே இருந்தால் என் குடும்பத்தாருக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் அரை வயிறுக் கஞ்சிக்கும் திண்டாட்டமாகப் போய்விடும். அதனால் சிறிது தூரம் சென்று பார்த்து விட்டு நான் திரும்பி விட்டேன்....'' என்று விறகு வெட்டி சொன்னான்.

அதைக் கேட்டு முனிவர் சிந்தித்தார். விறகு வெட்டியே... நீ கடும் உழைப்பாளி என்பது உண்மையே... இருப்பினும் மனச்சஞ்சலம் உடையவனாக நீ இருக்கிறாய். உன்னுடைய உழைப்பைத் தியாகம் செய்தால்தான் உன் குடும்பத்தாருக்கு அரை வயிறுக் கஞ்சியாவது கொடுக்க முடிகிறது என்பதை நீ தெரிந்து வைத்திருக்கிறாய். அதேபோல் அந்த வறுமை அடியோடு நீங்க வேண்டுமானால் மேலும் சில தியாகங்களைச் செய்துதான் தீர வேண்டும். தியாகமின்றி எந்த உயர்வும் ஒருவருக்குக் கிடைப்பதில்லை.

''உன் குடும்பத்தார் ஒரு நாள் பட்டினியாகவே இருக்கட்டும். நீ அதுகுறித்து கவலைப்படவேண்டாம். இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல என்பதை நீ கவனத்தில் வைத்துக் கொள். ஆயிரம் இன்னல்கள் அடுக்கடுக்காகச் சூழ்ந்தபோதும் அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தி இலட்சியத்தை நோக்கி முன்னேறுகிறவர்கள் தான் வெற்றி இலக்கினை அடைகிறார்கள். ஆகவே நீ மனத்தைச் சிதறவிடாமல் நான் கூறிய வழியே தொடர்ந்து செல்.. வெற்றியை அடைவாய். என் வாக்குப் பொய்க்காது...' என்று பல அறிவுரைகளை அவனுக்கு எடுத்துக் கூறினார்.

அவற்றைக் கேட்ட விறகு வெட்டி தெளிவடைந்தான். ''நீங்கள் சொல்லுவது போலவே செய்கிறேன் சுவாமி...'' என்று கூறிப் புறப்பட்டான்.

நடந்து சென்று கொண்டே இருந்தான். அப்போது அவன் கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை. இருப்பினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு சஞ்சலத்துக்கு இடம் கொடுக்காமல் அவன் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான். நடந்து நடந்து அவன் கால்கள் வலிக்கத் தொடங்கின.

தன்னை எதிர்பார்த்து தன் குடும்பத்தார் காத்திருப்பார்களே.. என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தது. ஆனால், எதையும் பொருட்படுத்தாமல் முனிவர் கூறியபடி அவன் சென்று கொண்டே இருந்தான். அவனுடைய அந்த உறுதிக்கு கைமேல் பலன் கிடைக்கத் தொடங்கியது. அங்கே சில சந்தன மரங்கள் இருப்பதை அவன் கண்டான். மகிழ்ச்சியடைந்த அவன் அவைகளை வெட்டிக் கொண்டு தன் ஊருக்குத் திரும்பினான். அதை விற்றதில் கணிசமான தொகை அவனுக்கு கிடைத்தது. முனிவர் சொன்னது போலவே அவன் வறுமை நீங்கிவிட்டது.

அவன் குடும்பத்தார் வயிறார சாப்பிடும்படியான நிலை உருவாகியது. விறகு வெட்டி மீண்டும் சிந்தித்தான். 'தொடர்ந்து செல்....' என்று கூறிய முனிவரின் அறிவுரை அவன் காதில் எதிரொலித்துக் கெண்டே இருந்தது. தன் குடும்பத் தாரிடம் தான் வரத்தாமதம் ஆகும் என்று சொல்லிவிட்டு மீண்டும் முனிவர் கூறிய வழியைப் பின்பற்றிச் சென்று கொண்டே இருந்தான்.



**பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்**



# 8 வருடங்களில் மிகுந்த வளர்ச்சியில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்



**கர்ணன்**

(கடந்த வாரத் தொடர்ச்சி..)

**2011** ஆம் ஆண்டில் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்காக போரூட் நிறுவனம் உலர் உணவை விநியோகித்தது. இதனை நல் லொழுக்க நிறுவனம் பொறுப்பேற்று சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுத்தியதன் மூலம் சேவைக்கான நிதியாக 25 ஆயிரத்து 431 ரூபா நிறுவனத்துக்கு கிடைக்கப்பெற்றது.

இந்த ஆண்டில் மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கணினி மூலம் கணக்குகளைப் பேணுவதற்காக கணினித் தொகுதி ஒன்றும், கொடிதின நிதியிலிருந்து துஸ்பிரயோகங்களுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடுகளுக்காக பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு நிதியாக 5 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நிறுவப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் கடந்த 8 வருடங்களில் இந்த நிறுவனம் பெரு வளர்ச்சியைக் கண்டது. குறித்த நிறுவனத்தின் சேவைகள் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப்பிரிவு, கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளிலேயே நடைபெற்று வந்தன. அடுத்த ஆண்டு முதல் மருதங்கேணி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் நிறுவனத்தின் பணிகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை முன்னெடுப்பதற்காக கள உத்தியோகத்தர்கள் குறித்த பிரிவுக்குச் சென்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி மக்களின் வாழ்வாதார எழுச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆராய்ந்துள்ளது.

> வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நிறுவப்பட்டு 14 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், கடந்த 8 வருடங்களில் இந்த நிறுவனம் பெரு வளர்ச்சியைக் கண்டது. குறித்த நிறுவனத்தின் சேவைகள் பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப்பிரிவு, கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளிலேயே நடைபெற்று வந்தன.

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுவது போல அமைப்புக்கள், குழுக்களை அங்கத்தவர்களாக இணைத்து நுண்நிதித்திட்டத்தை வாழ்வாதார மேம்பாட்டுக்காக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. மருதங்கேணி வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பசுப்பால் முக்கிய தேவையாக இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. [illegible] மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருப்பதனாலும் அங்குள்ள மக்களுக்கு பசுப்பால் கிடைக்காத நிலை இருப்பதாலும் அதைப் பெற்றுக் கொள்ள வசதியாக அங்குள்ள பொது அமைப்புகளின் பங்களிப்புடன் மாட்டுப்பண்ணை ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மாட்டுப்பண்ணை ஒன்றை நிறுவுவதன் மூலம் பிரதேசத்தின் பசுப்பால் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் பலருக்கும் வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் எதிர்பார்க்கின்றது. பசுப்பால் உற்பத்தியுடன் நின்றுவிடமால் மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கால் நடைகள் கோழிவளர்ப்பு, விவசாய, சுயதொழில் உற்பத்திகளை மேற்கொள்ளவும் ஆவன செய்யப்படவுள்ளது.

இது தவிர அம்பன் பொதுநோக்கு மண்டபத்திலும் நாகர்கோவிலில் தனியார் வீடு ஒன்றிலும் கிராமிய அமைப்புக்கள் ஊடாக தையல் பயிற்சி, மற்றும் விற்பனை நிலையங்களை அமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளினால் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை ஏனைய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஈடாக உயர்த்த முடியும் என நம்புகின்றது.

சில அங்கத்துவ கிராம நிர்வாகிகள் ஒத்துழைக்காமை நுண்நிதித் திட்டத்தில் நிதி நிறுவனங்களின் போட்டித்தன்மை, அங்கத்துவ கிராமங்களின் பயனுறுதித்தன்மை குறைந்து வருகின்றமை, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து திட்டங்கள் கிடைக்காமை ஆகிய சவால்களை நிறுவனம் எதிர்நோக்கியுள்ளது. மேற்படி சவால்களை முறியடித்து வடமராட்சிப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், மது, போதைப்பொருள் பாவனையற்ற சமூகத்தை உருவாக்கல் போன்றவற்றுக்காக இந்நிறுவனம் தொடர்ந்து கடுமையாக உழைத்து வரும் என நிறுவனத்தின் தலைவர் பா. இரகுநாதன் தெரிவித்தார்.

நிறுவனத்தின் மேல் மாடிக்கட்டடத்தைப் பூர்த்தி செய்தல், நுண்நிதித்திட்டத்தை ஏனைய பிரதேசங்களுக்குச் சமமாக வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்திலும் விரிவுபடுத்தல், வருமானம் தரக்கூடிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், நுண்நிதித்திட்டத்தில் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் போன்றவற்றை எதிர்காலத்திட்டங்களாகக் கொண்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருகோணமலை ஜூனியர் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (40)

## புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம்

எருவில்,நவ.14

மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் 'ஆரம்பத்தில் கண்டறிதல் உயிரைக் காக்கும்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலமும் கருத்தரங்கும் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கே.முருகானந்தம் தலைமை யில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. வைத்தியசாலையிலிருந்து ஆரம்பித்த விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு நகரினூடாகச் சென்று மீண்டும் வைத்திய சாலையை அடைந்தது. மட்டக்களப்பு நாடக மன்றத்தால் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இலங்கையில் அதிகரித்துவரும் புற்றுநோயை இல்லாதொழிக்கும் வகையிலேயே இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சம்பூர் பத்திரகாளி அம்பாளை வழிபடுவதற்கு அனுமதியுங்கள்

## பாதுகாப்புப் படையினரிடம் வேண்டுகோள்

திருகோணமலை, நவ.14

திருகோணமலை மாவட்டத்தில் வரலாற் றுப் பிரசித்தி பெற்ற சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்க வேண்டும் என்று திருகோண மலை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பூர் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த ஆலயம் போரால் சேதமுற்று இருப்பதுடன் அங்கு சென்று மக்கள் வழிபடவும் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வைகாசி விசாகத்துக்கு மக்கள் சென்று வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும்சென்று வர அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தற்போது அனுஷ்டிக்கப்பட்டுவரும் கேதார கௌரி விரத வழிபாட்டுக்குச் சிறப்பு வாய்ந்த இந்த ஆலயத்துக்கு விரத இறுதி நாளிலாவது சென்றுவர அனுமதிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். இந்த ஆலயத்தில் வழிபட அனுமதிக்கப்பட்ட நாள்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-40)

## மாடுகளை கடத்திய நால்வர் கைது

காத்தான்குடி,நவ.14

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடிப் பகுதியிலிருந்து மாடுகளை கடத்திய நால் வரை காத்தான்குடி பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளனர். மாடுகளைக் கடத்திச் சென்ற நாலு பேரை கல்லடியிலுள்ள பொது மக்கள் மடக்கிப்பிடித்து காத்தான்குடி பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது பொலிஸாரினால் இரண்டு மாடுகள் கைப்பற்றப்பட்டுள் ளன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடிபொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ச)

## எதிர்காலத் திட்டம் குறித்து ஆலோசனை

திருகோணமலை,நவ.14

மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை மூதூர் அல்-ஹிதாயா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் எதிர்கால வேலைத் திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது. (ச)

## களுவாஞ்சிகுடியில் கடை உடைத்துத் திருட்டு

மட்டக்களப்பு மாவட் டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் உள்ள கடையொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸ்ஸார் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் வெற்றி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள கடையே நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. கடை உரிமையாளர்கள் கடையை மூடிவிட்டு அருகில் உள்ள தமது வீட்டுக்குச் சென்ற நேரம் பார்த்து பின்புறமாகவுள்ள கதவை உடைத்துச்சென்று இந்தச் சூறையாடல் இடம்பெற்றது.

இதன்போது சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருள்கள் மற்றும் பணம் என்பன அபரிக்கப்பட்டுள்ளன- என்றனர்.

இதுதொடர்பிலான விசாரணையை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (வ)

## அமெரிக்க கோணர் விரைவில் திருமலையிலும்

அமெரிக்க கோணரின் ஊடாக அமெரிக்க வெளியீடுகள், புத்தகங்கள், இணையத்தள சேவை மற்றும் விசேட விரிவுரைகள் இடம்பெறுகின்றன

திருகோணமலை,நவ.14

திருகோணமலையில் அமெரிக்க கோணர் திறக்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக தகவல்கள் தெரிவித்தன.

2013 ஆம் ஆண்டின் முற் பகுதியில் திருகோணமலை நகரிலேயே குறித்த புதிய அமெரிக்க கோணர் திறக் கப்படவுள்ளது.

ஏற்கனவே கொழும்பில் அமெரிக்க சென்டரும் கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமெரிக்க கோணரும் அமெரிக்க தூதரகத்தால் நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிட்டத்தக்கது.

மேற்படி அமெரிக்க கோணரின் ஊடாக அமெரிக்க வெளியீடுகள், புத்தகங்கள், இணையத்தள சேவை மற்றும் விசேட விரிவுரைகள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

## கடற்படை – இளைஞர் குழு மோதல் அறுவர் காயம்

பலபிட்டிய, பண்டாரவத்தை கடற்கரைப் பிரதேசத்தில் கடற்படையினருக்கும் பிரதேச இளைஞர் குழுவொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் கடற்படையினர் மூவர் உட்பட 6 பேர் காயமடைந் தனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினரே தங்கள் மீது முதலில் தாக்கு தல் நடத்தியதாக இளைஞர் குழு தெரிவிக்கின்ற அதே வேளை, இளைஞர்களே தங்கள்மீது ஆரம்பத்தில் தாக்குதல் நடத்தியதாகப் பலப்பிட்டிய கடற்படை முகாம் படையினர் தெரிவித்தனர். (வ)

## பல்கலை மாணவர் பிரச்சினை; முறையான விசாரணை ஆரம்பம்

திருகோணமலை,நவ.14

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று திருகோணமலை வளாக முதல்வர் நா. வர்ணகுலேந்திரன் தெரிவித்தார்.

பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கிடையில் முரண்பாடுகள் வருவது இயல்பானது.அதேபோன்றே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று அவர் கூறினார்.

இந்தச் சம்பவத்தில் தாக்கப்பட்ட மாணவர்களின் நிலைமைகள் உடன் ஆராயப் பட்டு, பல்கலைக்கழக ஒழுங்கு முறைக்கு அமைவாக உள்ளக மற்றும், வெளி ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக ஒழுங்கு முறைக்கு அமைவாக உள்ளக மற்றும், வெளி ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

முறைகேடாக நடந்த மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் தகுந்த தண்டனை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை வளாக மாணவர்கள் சிலர் சக மாணவர்களால் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## திருகோணமலை வளாகம் தனிப் பல்கலையாக தரமுயரும்

### திருகோணமலை வளாக முதல்வர் நம்பிக்கை

திருகோணமலை,நவ.14

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் 2016 ஆம் ஆண்டு தனிப் பல்கலைக்கழகமாகத் தரம் உயரும் என்று அதன் முதல்வர் என். வர்ணகுலேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

திருகோணமலை விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற மாவட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை வளாக அபிவிருத்திக்கு திட்ட மென்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் படி இந்த வளாகம் 300 ஏக்கரில் அமையும். இதனைத் தனிப் பல்கலைக்கழகமாக தர முயர்த்துவதற்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர்கல்வி அமைச்சரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரும் இதனை அபிவிருத்தி செய்வதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். எமது வளாகத்துக்கென வருடாந்த நடைமுறைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார். (ச-40)

## துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வு

துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு கடந்த சனிக்கிழமை கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த செயலமர்வில் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் செயலமர்வில் 250 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஏ.சமீனா தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளர்களாக கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.சமீம், சட்டத்தரணி எம்பி.எம்.அன்பல், பொலிஸ் உத்தியோகத்தர் எச்.அன்வர்கான் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களுடைய பொருளாதார நிலையில் முன்னேற்றமான போக்குக் காணப்படும். வருமானத்தைப் அதிகரித்துக்கொள்ளவோ அல்லது இரு வழிகளில் வருமானங்கள் செய்யவோ நல்ல வாய்ப்பும், சந்தர்ப்ப சூழ்நிலையும் உண்டாகும்.

**இடபம்:** தொழில்-வியாபாரத்தில் கிடைத்து வரும் லாபம் அதிகரிக்கும். அவசியப் பொருள்கள் போன்றவற்றை வாங்கத் தாராளமாகச் செலவழிப்பீர்கள். எதிர்பாராத நல்ல தகவல்கள் வரலாம்.

**மிதுனம்:** உத்தியோகம் பார்ப்பவர்களின் நேர்மைக்கும் கடமை உணர்வுக்கும் மேலதிகாரிகளிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும். திறமைகளை வெளிப்படுத்துவதால் பரிசில்களும் பாராட்டுக்களும் கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் உற்சாகமான போக்குக் காணப்படும். உறவினர் வருகையால் வீடு கலகலப்படையும். பிள்ளைகளின் படிப்பு திருப்திகரமாக இருக்கும். பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மறந்துவிடாதீர்கள்.

**சிங்கம்:** நீங்கள் காலையில் சுறுசுறுப்பாகச் செயற்பட்டால் நண்பகல் சோம்பேறித்தனமாகச் சாய்ந்து உட்கார்ந்து விடுவீர்கள். ஒரு காரியத்தை ஆர்வத்துடன் செய்து முடித்தால், அடுத்த காரியத்தை இடையிலேயே நிறுத்திவிடுவீர்கள்.

**கன்னி:** உதவிசெய்வதாக வாக்களித்தவர்கள் கடைசியில் கையை விரித்து விடுவார்கள். அதேசமயம் எதிர்பாராத சில மனிதர்களிடமிருந்து நல்ல உதவிகள் கிட்டும். நீங்கள் நண்பராக நினைத்துக்கொண்டிருக்கும் மனிதர் உங்களுக்கு விரோதமாகச் செயற்படுவார்.

**நாளை**

ஐப்பசி -30 வியாழக்கிழமை 15.11.2012
திதி: துதியை மு.இ. 11.58 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப. 12.26 வரை
சுபநேரம்: 07.37 - 09.07 வரை
ராகுகாலம்: 01.37 - 03.07 வரை

**துலாம்:** உங்களுடைய பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும், எல்லா வகையான செலவுகளையும் எப்படியாவது சமாளிப்பீர்கள். எந்தக்காரியமும் இடை நடுவில் நின்றுவிடாமல் செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** நீங்கள் நண்பராக நினைத்துக் கொண்டிருக்கும் மனிதர் உங்களுக்கு விரோதமாகச் செயற்படுவார். அதேசமயம் நீங்கள் பகைவராக நினைத்துக்கொண்டிருக்கும் மனிதர் உங்களுக்கு ஆதரவாகச் செயற்படுவார்.

**தனுசு:** தொழில்-வியாபாரத்தில் சற்று அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் சக ஊழியர்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** கலைஞர்களுக்கு வருமானம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் எழுந்து நின்றுகொண்டேதான் இருக்கும். அவற்றுக்கெல்லாம் முக்கியத்துவம் தராமல் உங்கள் பணியைச் மட்டும் கவனியுங்கள்.

**கும்பம்:** உங்களுடைய செல்வ நிலையில் உயர்வு ஏற்படும். சிலருக்கு இருவழிகளில் வருமானம் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகும். ஆகையால் எதிலும் அவசரப்படாமல் நிதானமாகச் சிந்தித்து செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**மீனம்:** எதிலும் அவசரப்படாமல் சிந்தித்து நிதானமாகச் செயற்பட்டு சில வெற்றிகளை எளிதாகத் தேடிக்கொள்வீர்கள். மனதில் அடிக்கடி ஆன்மீக உணர்வுகள் தலைதூக்கும். ஆலய தரிசனம் செய்யுங்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 5 | | | | | | |
| 3 | 8 | | 9 | | | | | 1 |
| | | 2 | | | 8 | | 9 | |
| 7 | | | | 5 | 3 | | 4 | 2 |
| | 2 | | | | | | 7 | |
| 8 | 6 | | 7 | 2 | | | | 5 |
| | 5 | | 1 | | | 7 | | |
| 4 | | | | | 9 | | 1 | 6 |
| | | | | | | 4 | 8 | 9 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 8 | 7 | 3 | 5 | 2 | 1 | 4 |
| 5 | 2 | 4 | 6 | 9 | 1 | 8 | 7 | 3 |
| 1 | 7 | 3 | 8 | 4 | 2 | 6 | 9 | 5 |
| 4 | 9 | 1 | 3 | 7 | 8 | 5 | 2 | 6 |
| 7 | 3 | 2 | 4 | 5 | 6 | 1 | 8 | 9 |
| 6 | 8 | 5 | 1 | 2 | 9 | 3 | 4 | 7 |
| 8 | 1 | 7 | 5 | 6 | 4 | 9 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 2 | 8 | 7 | 4 | 6 | 1 |
| 2 | 4 | 6 | 9 | 1 | 3 | 7 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி சந்தியில் இருந்து 150 யார் தூரத்தில் பலாலிப் பக்கமாக நிலப்பரப்பு 3 ½ இரண்டு வீடுகளும்விற்பனைக்கு உள்ளது. இது பிரதான வீதியில் அமைந்துள்ளது. மேலும் இவ்வாதனத்தில் பிரதான வீதியில் இருந்து ஒரு பக்கமாக ஒழுங்கையும் உண்டு.
தொடர்பு கொள்ளும் முகவரி
தம்பையா குணசிங்கம், ஈவினை,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.
(25272)(2.6) தொடர்புகளுக்கு- 0777246892

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

UO - XXXX எனும்
இலக்கமுடைய Honda CBR
Gallam கறுப்பு நிற நல்ல
நிலையிலுள்ள மோட்டார்
சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(25311)(2.6) தொடர்புகளுக்கு 0770093933

உள்ளத்து உவகை பொங்க
வாழ்த்துகின்றோம்



திரு. ம.இராஜ்குமார்
(B.A.(Hons), Dip. in Ed., M.Ed, M.A., SLEAS - III)

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள ம.இராஜ்குமார் அவர்களை உள்ளத்து உவகை பொங்க வாழ்த்துவதோடு, 20.10.2012 அன்று, ஊர் மக்களோடு மாணவர்களும், ஆசிரியர்களும் புடைசூழ உமக்கு இனிதான செங்கம்பள வரவேற்பு அளித்ததை நாம் நினைவு கூர்ந்து, மேன்மேலும் நீர் பதவி உயர்வு பெற்று நீடூழிகாலம் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல அருள்மிகு மாணிக்க விநாயகரினதும், வற்றாப்பளை அம்மனினதும் அருள் வேண்டி யாசிக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:-
செம்மலை மக்கள்,
முல்லைத்தீவு.

# ஓராண்டு நினைவலைகள்



செல்லையா சபேஸ்குமார்
(இலங்கை போக்குவரத்து சபை சாரதி)

திதி: பிரதமை 14.11.2012
புதன்கிழமை

தோற்றம்
20.12.1970

மறைவு
25.11.2011

நீங்கள் மீளாத் துயில் கொண்டு
ஆண்டொன்று ஆனதோ?....
பன்னிரண்டு மாதங்கள் பறந்தோடி - போனாலும்
இன்னும் பக்குவமாய் தான் நிற்கிறது
நீர் தந்த பாசம்
குஞ்சுகள் நாம் இன்றும் உங்களை
நெஞ்சினிக்க நினைக்கின்றோம்
உங்கள் பேச்சு எங்கள் மூச்சில் கலந்து
பன்னிரு மாதங்கள் அகல விரிந்தது....
பார்த்திருக்க ஆண்டொன்று பறந்தோடிப் போனது
நேற்று போல் இருக்கின்றது உங்கள் மறைவு
இத் துயரை ஆற்றுவாரும் இல்லை தேற்றுவாரும் இல்லை நீங்கள்
மீண்டு வந்தால் மட்டுமே சத்தியமாய் இது சாத்தியமாகும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை தினமும்
வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவு அஞ்சலி இன்று (14.11.2012) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அனைவரும் இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அவரின் நினைவு அஞ்சலியிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

வல்லை வீதி,
தொண்டமானாறு தெற்கு,
தொண்டமானாறு.
077 8696 837

குடும்பத்தினர்.

(23697) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமலும் சம்பிக்கவும் பிரிவினைவாதிகள்

## கடுமையாகச் சாடுகிறார் பிரபா கணேசன்

கொழும்பு, நவ.14

மாகாணசபை முறைமையை அகற்ற வேண்டும் எனக் கூறும் சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்ஸவும் நாட்டை மீண்டும் கூறுபோடுவதற்கான ஆயத்தங்களை செய்கின்றனர் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், வட மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்கமாட்டோம் எனக் கூறுவதற்கு அமைச்சர்களான விமலுக்கும், சம்பிக்கவுக்கும் எவ்வித அருகதையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் முதன் முதலாக தமிழ் மக்களுக்குக் கிடைத்த அதிகாரப் பகிர்வு மாகாண சபை முறைமையாகும். வட கிழக்கு மக்களுக்காக உருவாக்கப்பட்ட இவ் அதிகாரப் பகிர்வான்து வடமாகாண மக்களுக்கு இதுவரை கிட்டவில்லை.

20 வருடங்களுக்கு பின்பு தான் 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண மக்களுக்கான சபை உருவாக்கப்பட்டது. இது இவ்வாறு இருக்க மாகாணசபை முறைமையை அகற்ற வேண்டும் எனக் கூறும் ஹெலஉறுமயவின் சம்பிக்க ரணவக்கவும் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவும் நாட்டை மீண்டும் கூறுபோடுவதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர்.

ஹெலஉறுமய கட்சியை சார்ந்த உதய கம்பன்பில மேல்மாகாண சபையின் அமைச்சராக இருக்கின்றார். அதே போல் விமல் வீரவன்ச கட்சியினை சேர்ந்தவர்களும் மாகாணசபை உறுப்பினர்களாக இருக்கின்றனர். மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டுமானால் இவர்கள் அனைவரும் கூண்டோடு ராஜினாமாச் செய்ய வேண்டும். அதன் பின்பு மாகாண சபை ஒழிப்பு முறைமையைப் பற்றிப் பேசவேண்டும்.

விரைவில் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாணசபை முறைமையினால் இன்று மலையகத்திற்கு இரண்டு தமிழ் மாகாண அமைச்சர்கள் கிடைத்திருப்பது மலையக இந்திய வம்சாவளி மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இவற்றை இழந்துவிட மலையக மக்களும் தலைவர்களும் ஒரு போதும் இடங்கொடுக்க மாட்டோம்.

இவ் இனவாதிகளின் அறிக்கை சம்பந்தமாக நான் நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து சிறுபான்மை கட்சியினருடனும் பேசியுள்ளேன். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சிறுபான்மை அமைச்சர்களுடனும் பேசியுள்ளேன். அது மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கமியூனிஸ்ட் அமைச்சர்களுடனும் கலந்துரையாடியுள்ளேன்.

இவர்கள் அனைவருமே 13ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றுவதற்கான இவ்வினவாதிகளின் போக்கை கடுமையாக எதிர்க்கின்றனர். ஆகவே ஒரு போதும் மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கு அரசு முன்வரப் போவதில்லை. இம்முறைமையை விட்டுக்கொடுப்பதற்கு சிறுபான்மை அரசியல் தலைவர்களும் முற்போக்கு சிங்கள தலைவர்களும் இடம் கொடுக்கப்போவதுமில்லை- என்றார்.

## வெலிக்கடை சிறைச்சாலைக் கலவரம்; மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, நவ.14

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.

இதற்கமைய, சிறைச்சாலை உயரதிகாரிகளை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜர்படுத்தி விசாரணை நடத்தவுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.

மேற்படி சிறைச்சாலையில் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தமது கடமைகளை தவறவிட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

**பாரிய குற்றச்செயல்களை மேற்கொண்ட கைதிகளை வேறு வேறாக தடுத்து வைக்கவேண்டிய காலம் கனிந்துள்ளது**

பாரிய குற்றச்செயல்களை மேற்கொண்டவர்கள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் விளக்கமறியல் கைதிகள் என இவர்களை வேறு வேறாக தடுத்து வைக்கவேண்டிய காலம் கனிந்துள்ளது என்றும் மனித உரிமை ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## குணமடைந்து வருகிறார் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.

கொழும்பு, நவ.14



மாரடைப்புக் காரணமாக சிகிச்சை பெற்று வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குணமடைந்துவருகிறார் என்று ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் சவேந்திர கமகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன மாரடைப்பு காரணமாக கடந்த வியாழக்கிழமை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன வைத்தியக் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும் எனவும் இதனால் அவர் இப்போது வைத்தியசாலையிலிருந்து வெளியேற முடியாது எனவும் வைத்தியர் ஒருவர் கூறினார். (த)

## வெலிக்கடை வீடியோவை ஒப்படைக்க உத்தரவு

கொழும்பு, நவ.14

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின்போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளின் செம்மைப்படுத்தப்படாத பிரதிகளைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறுகொழும்பு நீதிவான், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களைப் பணித்துள்ளார்.

பொரளை பொலிஸாரால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கருத்திற்கொண்டு கொழும்பு மேலதிக நீதிவான் இந்தக் கட்டளையைப் பிறப்பித்தார்.

இந்தச்சமயம், சிறையிலிருந்து தப்பியதாகக் கூறப்படும் ஆறுபேரை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த)

## '13' க்கு எதிராக நீதிமன்றில் மனு; பின்வாங்கினார் அமைச்சர் விமல்

இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மனு ஒன்றை தாக்கல் செய்யவிருந்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும் கடைசி நேரத்தில் அந்த முயற்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞர்களின் ஆலோசனைகளை அடுத்தே இவ்வாறு குறித்த மனுவை தாக்கல் செய்யும் விடயத்தில் விமல் வீரவன்ஸ பின்வாங்கி உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள குறிப்பில் -

"பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணி தலைவருமான விமல் வீரவன்ஸவும் அங்கத்தவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இந்தத் தருணத்தில் 13 ஆவது திருத்தத்தை நீக்குமாறு நீதிமன்றில் மனுவைச் சமர்ப்பிப்பது நன்னெறி சார்ந்ததாக இருக்காது என்று சட்டவரைஞர்கள் சுட்டிக் காட்டினர். இதனை அடுத்தே இவ்வாறு மனுவை தாக்கல் செய்யும் விடயத்தை ஒத்திவைக்கும்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நடைமுறையில் உள்ள 13 ஆவது திருத்தத்தை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த சில நாள்களாக நாடாளுமன்றில் குரல் எழுப்பி வந்தார். இவருக்கு ஆதரவாக ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்தவரும் மின்சக்தி அமைச்சருமான சம்பிக் ரணவக்கவும் களத்தில் குதித்திருந்தார்.

இலங்கையில் அரசமைப்புக்கு முரணான விடயங்கள் சில 13 ஆவது திருத்தத்தில் இருப்பதாலேயே அதனை எதிர்ப்பதாக விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை நீதிமன்ற தீர்ப்பு மூலம் பிரித்ததைப் போன்று, 13 ஆவது திருத்தத்தையும் நீதிமன்றத்தில் மனுச் செய்து இல்லாதொழிக்கவே அரசு விமல் வீரவன்ஸவை கருவியாகப் பயன்படுத்துகிறது என்று எதிரணியினர் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

## சிறுவர் இல்லங்களில் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

### விசேட பயிற்சி வழங்க சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானம்

நாடு முழுவதிலுமுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நடத்திச் செல்பவர்களுக்கு விசேட பயிற்சி ஒன்றை வழங்குவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்கின்றன. அவற்றைக் குறைக்கும் நோக்கத்திலேயே இப்பயிற்சியை ஒழுங்கு செய்துள்ளோம் என்று அந்த அதிகார சபையின் தலைவர் அநோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அதிகாரிகள் உட்பட சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நாடத்திச் செல்பவர்களும் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

## செலிங்கோ வழக்கிலிருந்து விலகினார் ஷிராணி

கொழும்பு, நவ. 14

செலிங்கோ நிறுவனத்துக்கு எதிரான வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகுவதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இந்த நிறுவனத்தின் சொகுசு வீடு ஒன்றை தான் முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாக அரசு தெரிவித்துள்ளமையாலேயே இந்த வழக்கு விசாரணைகளிலிருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றுத் துறைக்கும், நீதித் துறைக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக இலங்கை அரசு, நாடாளுமன்றில் குற்றப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் ஒன்றாக செலிங்கோ நிறுவனத்தின் சொகுசு வீடொன்றை பிரதம நீதியரசர் முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செலிங்கோ நிறுவனத்துக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது பிரதம நீதியரசர், செலிங்கோவுக்கு எதிரான வழக்கை நான் விசாரித்துவந்தபோது இந்த நிறுவனத்துக்குச் சொந்தமான சொகுசு வீடு ஒன்றை நான் முறைகேடாகப் பெற்றதாக அரசு தன் மீது குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ள நிலையில், இந்த நிறுவனத்துக்கு எதிரான வழக்கை இனி நான் விசாரிப்பது முறையாக இருக்காது. எனவே இந்த நிறுவனத்துக்கு எதிரான வழக்கு விசாரணைகளிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவித்தார்.

வேறு மூன்று நீதிபதிகள் தலைமையில் எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதியரசர் ஷிராணி தெரிவித்துள்ளார்.

செலிங்கோ நிறுவனம் நிதி மோசடி செய்ததாக வழக்கை தொடுத்திருந்த கோல்டன் கீ என்ற நிறுவனம் சார்பாகப் பேசவல்லவர் கருத்து தெரிவிக்கையில், ஷிராணி விலகிச் செல்வதால் இந்த வழக்கில் தங்களுக்கு நியாயம் கிடைக்காமல் போகலாம் என்று அச்சம் தெரிவித்தார். (த -5)

## கஹவத்தை கொலையை விசாரித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, நவ. 14

கஹவத்தையில் தொடர்ச்சியாகப் பெண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவருகின்ற நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் பத்மசிறி காலிக்கும், கஹவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிரஞ்சன் அபேவர்தன பொலிஸ் தலைமையகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொட்டகெத்தன பொலிஸ் முகாம் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அத்தியட்சகரும் கொட்டகெத்தன கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினால் கஹவத்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரொஹான் ஒலுகல ஆகிய இருவரும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகள் நால்வரும் கஹவத்தை கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தி வந்தவர்களாவர். (த-5)

## இந்தியர் கைது

கொழும்பு, நவ 14

இரண்டு கிலோ கிராம் நிறையுள்ள அருகிவரும் அழுங்கு செதில்களை கடத்துவதற்கு முயற்சித்த இந்தியர் ஒருவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

பயணப்பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கடத்துவதற்கு முயற்சித்த வேளையிலேயே இவரைக் கடந்த திங்கள் இரவு கைது செய்துள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவர் கடத்த முயன்ற இரண்டு கிலோகிராம் அழுங்கு செதில்களை யும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்தியரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களில் 100 தடவைகள் பயணித்துள்ளார். சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் பிரகாரம் அருகிவரும் உயிரினங்கள் மற்றும் ஆபத்தான விலங்குகளை வர்த்தகம் செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரி மலை மாலை அணியும் ஐயப்பசுவாமிகளே!

**ஸ்ரீ சடகோப ராமானுஜ ஐயப்ப பக்த சபை**

**18 ஆம் படி குருசாமி**

## அ. இந்துதாசன்

**தாவடி தெற்கு, மானிப்பாய்.**



ஐயப்ப பக்த அடியார்களே!
16.11.2012 இல் சபரிமலை
விரதமிருந்து மாலை அணியும் சுவாமிமார்கள்
பல தொகை பணத்தை செலவழிவதை!
எண்ணி ஐயனைக் காண முடியாது, திகைப்பதை எண்ணி
எமது சபையானது எவ்வித பெரும் நிதி வசூலிப்பதை
இல்லாது உங்கள் விமான டிக்கட்டையும்,
இந்தியாவில் இருமுடி செலவை மட்டும் நீங்களே!
நிதியை உங்கள் மூலம் செலுத்தி
அழைத்து செல்லும் பணியை செய்ய எண்ணி உள்ளதால் விரும்பும்
பக்தர்கள் 16.11.2012 காலை 8 மணியளவில் கீழ்க்காணும்
விலாசத்திலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்புகொள்ளலாம்

தொ. பே. 077 2601 472,
077 6282 671.

அ.இந்துதாசன்
தாவடிதெற்கு, மானிப்பாய்,
18ஆம் படி குருசாமி.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
adyt@uthayan.com
0215671111

உ



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

### பொதுக்கூட்டம் - 2012

மேற்படி கூட்டம் 16.11.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் எஸ்.என்.செல்வராசா தலைமையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அம்பாள் ஆலய உபயகாரர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவரையும் பொதுக்கூட்டத்தில் கலந்து அம்பாளின் ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம்
★ தலைமையுரை
★ செயலாளர் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை, செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
★ பொருளாளரின் ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
★ அறங்காவலர் சபை புதிய செயற்குழு தெரிவு
★ எதிர்கால திட்டங்கள் பற்றி ஆராய்தல்
★ நன்றி உரை

**த.சிவகுமார்**
செயலாளர், அறங்காவலர் சபை.

(24241)(6-7-45)

## நாற்பத்தைந்தாம் நாள் நினைவஞ்சலிகள்

### அமரர் புவனேந்திரன் ஈழநாதன்



மலர்வு: - 20.06.1981
உதிர்வு:- 30.09.2012

இதயத்துடிப்படங்குதடா
ஈழநாதா உன் பிரிவால்
நாற்பத்தைந்தாம் நாளதுவில்
நகரும் உன் – நினைவுகளில்
பள்ளிப் பருவத்து பசுமைகள் – எம்
நெஞ்சை உறுத்திடவே

பாடசாலை வாசலும்
வகுப்பறையும் மட்டுமல்ல
தனியார் கல்விக் கூடமும்
தாவி உதிக்குதடா நெஞ்சமதில்

கதிரை மேசையைக் கேள்
கன்ரீன் கதவுகளைக் கேள்
நீ அலங்கரித்த
பரிசளிப்பு விழா மேடையை கேள்
விளையாட்டு மைதானத்தைக் கேள்
நாம் ஓடித்திரிந்த
வயல் வெளிகளைக் கேள்
உலாவிய தெரு வீதிகளைக் கேள்
அத்தனையும் சொல்லுமடா ? நீ
பிரிந்த வேதனையை

எப்போதும் எம்மருகே நின்றவனே
கை கொட்டிச் சிரித்தவனே
உன் நினைவு எம்முடனிருக்க
நீ மட்டும் எங்கு சென்றாய்
ஈழு என்று நாமழைத்தால்
இன்ப முகம் கொண்டவனே – நீ
இல்லை என்று நாமழவே – எங்கு சென்றாய்
ஓ.... நீ போற்றி வணங்கிய
இறைவனடி சேர்ந்தாயா
ஈழநாதா! நாதனோடு இணைந்திருப்பாய்


உன் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.


**- நண்பர்கள்,**
உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி.

(ச/7811)(2-6)

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)





"ஆண்டவரே உமது நீதிக்கேற்ப
என்னை வழிநடத்தும்
ஏனெனில் நான் உம்மையே நம்பியுள்ளேன்"

உலகை விட்டுக் காற்றாய் நீ சென்றாய்
உருவம் தனை மண்கொண்டு நீ மறைத்தாய் எம்
உள்ளங்களில் கொடும் தீ நீ வைத்தாய்
உதிரமாகக் கண்களில் நீர் வரச் செய்தாய்

இரண்டு ஆண்டுகள் கழிந்ததடா
இறைவனின் அடியில் நீ சேர்ந்து
இன்றுவரை எம் கண்ணில் உன் உருவம்
என்றும் எம் நெஞ்சில் உன் நினைவு

வாழ்வின் வசந்தம் கொண்டு
வாழ்வாய் நீ பல்லாண்டு என்று
நம்பிக்கை மனத்துடன் நாமிருக்க – அது
அவ நம்பிக்கையாகிப் போனதடா!

உருக் கொடுத்தவர்கள் உருகுகின்றார்கள்
உன் உருவை ஒரு முறை காண்பதற்கு
பறி கொடுத்துப் பதறுகிறார்கள் உறவுகள்
பழகிய உன் முகத்தைப் பார்ப்பதற்கு

விடை கொடுத்துச் சென்ற நீ
விரைந்து ஒரு முறை வாராயோ – கண்ணீர்
கரைந்து ஓடும் கண்களை – உன்
கரம் கொண்டு துடைக்காயோ

ஆண்டுகள் இரண்டாகிப் போனதடா
ஆறாத என்றும் எம் நெஞ்சம்
எல்லோரையும் கவரும் செல்ல மகனே
எம் துயர் தீர்க்க மீண்டும் வாராயோ....
றீகா!.... றீகா!.....


மண்ணில்
22.06.1982

விண்ணில்
14.11.2010

– குடும்பத்தினர்.
புலவர் வீதி,நவாலி வடக்கு, மானிப்பாய்.

(ச/444)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 14

உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவும் இணைந்து நடத்தும் மருத்துவமுகாம் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம், கோப்பாய் நீரிழிவு நோய் விழிப்புணர்வுக் கழகம், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு, மானிப்பாய் வர்த்தக சங்கம், குருநகர் சென்.ஜோன்ஸ் தேவாலய அமைப்பு என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

வாகனத் தொடரணி மூலம் கிராமம் கிராமமாகச் சென்று நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்குவதுடன் நடமாடும் மருத்துவ சேவையையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன் இலவச குருதிப்பரிசோதனை, ஆரோக்கிய வாழ்க்கைக்கான வழிவகைகள், புதிய ஆரோக்கியமான உணவுகளின் அறிமுகம், சுகாதாரம் தொடர்பான நூல்கள், இறுவெட்டுக்களின் விநியோகம் போன்றனவும் இடம்பெறவுள்ளன.

இந்த விழிப்புணர்வு மற்றும் நடமாடும் மருத்துவ சேவையில் சகல பிரதேச மக்களும் கலந்து நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் மருத்துவத்தைப் பெற்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க ஒத்துழைக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் கேட்டுள்ளது.

(வ-17-14)

# நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் சில

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பின்படி ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் குறைந்தது 2 பேர் புதிய நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று கண்டுபிடிக்கப்படுகிறார்கள், இந்தக் கணிப்பீட்டின் படி 346 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2030 ஆம் ஆண்டளவில் இந்ததொகை இரு மடங்காகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது உலகமக்களிடையே பரவி வரும் எச்.ஐ.வி எயிட்ஸ் நோயை விடவும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் வீதம் கூடுதலாகக் காணப்படுகின்றது.

நீரிழிவு நோயால் வருடாந்தம் 3.8 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். இது எச்.ஐ.வி எயிட்ஸ் நோயினால் இறப்பவர்களைவிட அதிகமாகும். மேலும் நீரிழிவு நோயின் பாதிப்புகளான கண்குருடாகுதல், சிறுநீரக செயலிழப்பு மற்றும் அங்கங்கள் அகற்றப்படுதல் போன்ற பாதிப்பு தீவிரமாக அதிகரித்து வருகின்றது.

நீரிழிவுநோயின் அடிப்படைப் பிரச்சினை குருதியில் உள்ள வெல்லமானது உடல் கலங்களால் அகத்துறிஞ்சி பயன்படுத்தப்பட முடியாத நிலையாகும்.

பொதுவாக நீரிழிவு நோய் 3 வகையாகப் பிரித்து பார்க்கப்படுகின்றது. Type I, Type II, Type III இதில் Type I ஆனது சிறுவர்களுக்கும் வாலிப வயதினருக்கும் அதிகமாக ஏற்படுகிறது.

Type II இது 40 வயதைவிட அதிகமானவர்களுக்கு ஏற்படுகிறது. தமிழ் சமூகத்தில் இது அதிகரித்து காணப்படுகிறது.

Type III இதனை கர்ப்பகால நீரிழிவு என்பர் அநேகமானோரில் குழந்தை பிறந்த பின் இந்நோய் நிலை குணமடையலாம். சிலரில் அதன் பின்னரும் இந்நோய் தொடர்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

## இன்று உலக நீரிழிவு தினம்

இந்தநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலகில்160 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஒன்று சேர்ந்து ( International Diabetes Federation) என்ற அமைப்பை 1950 ஆம் ஆண்டு ஸ்தாபித்தன. தற்போது குறித்த அமைப்பு உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. நீரிழிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்தத் நிறுவனமானது 1991-11-14 திகதியை சர்வதேச நீரிழிவு தினமாக பிரகடனப்படுத்தியது. இந்த நாள் இன்சுலினைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான Frederich Banting வின் பிறந்த தினமாகும். இந்த தினமானது நீரிழிவு சம்பந்தமான ஒவ்வொரு கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது.

உலக நீரிழிவு தினமான இன்று அனைவரும் உறுதியெடுக்க வேண்டிய சில விடயங்கள்.

★நீரிழிவு நோயாளர்கள் உங்கள் வீட்டில் இருந்தால் அவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

★இந்தமாதத்துக்குள் ஒரு தடவையேனும் உங்கள் குருதியில் குளுக்கோசின் அளவை அறிந்து கொள்ளுங்கள்.

★இனிப்புப் பண்டங்கள், மாப்பொருள் உட்கொள்வதைக் குறையுங்கள்.

★தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள், வீட்டில் உள்ளவர்களும் செய்கிறார்களா எனக் கவனித்துக் கொள்ளுங்கள்.

★பிள்ளைகளைக் கூடிய அளவு விளையாட்டுக்களில் ஈடுபட விடுங்கள்.

★நீரிழிவு பற்றிய விழிப்புணர்வை அனைவருக்கும் அறிவுறுத்துங்கள்.

★உங்கள் உயரத்துக்கு ஏற்ற எடையை ( BMI) சரிபார்த்துக் கொள்ளுங்கள்.(சிறுவர் முதல் பெரியவர்கள் வரை)

எஸ்.சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை.

# கம்பஹாவில் கழிவுத் தேயிலை கடத்தல்

கம்பஹா பகுதியில் நீண்ட காலமாக இயங்கிவந்த பெரியளவிலான கழிவுத்தேயிலை கடத்தல் சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

கம்பஹா-பெம்முல்ல பகுதியிலேயே இந்தச் சட்ட விரோத நடவடிக்கை குறித்து தகவல்கள் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலின் போது 50 ஆயிரம் கிலோக் கிராம் கழிவுத் தேயிலையைக் கைப்பற்றியுள்ளனர்.

கொள்கலன் ஒன்றுக்குள் கழிவுத் தேயிலை மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி விடயம் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கந்தசஷ்டி திருவிழா

யாழ்ப்பாணம், நவ. 14

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் கந்தசஷ்டி திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி திருப்பெருந்திருவடிவக் காட்சியும் 19 ஆம் திகதி நண்பகல் ஒரு மணிக்கு வேல் வழங்கும் காட்சியும் மாலை 4 மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும். மறுநாள் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். (வ-17)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் நீண்ட காலமாக கடமையாற்றி காலஞ்சென்ற

## சங்கரன் தியாகராசா



அவர்களின் பிரிவுக்காக எமது அஞ்சலிகள்....

சிரித்த உன் முகமும், சிந்திடும் புன்னகையும்
கனிந்த பேச்சும், கடமை உணர்வும்
எம் நெஞ்சில் நெருட, ஆறாத் துயர் கொள்கின்றோம்
இவரின் பிரிவால் துயருறும் உறவுகள் அமைதியடையவும்,
இவரது ஆத்மா சாந்தியடையவும் உளமார இறைவனிடம்
வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரிய போதனாசிரியர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.

தாதியக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(25312)(45.6)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை (குஞ்சம்மா)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை (குஞ்சம்மா) 11.11.2012 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகன், சின்னத்துரை, துரை, சின்னப்பிள்ளை, லட்சுமி மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசம்மா, அன்னலட்சுமி, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சின்னத்தம்பி (கிஸ்ணர்) ஆகியோரின் மைத்துனியும், நந்தினி (சுவிஸ்), வதனா (சுன்னாகம்), இந்து (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சூரியகுமார் (சுவிஸ்), அனுரா (டிலக்ஸ் உரிமையாளர்), கர்ணகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிராம், அனேஜா (சுவிஸ்), டிவேந்தன், மேகதீபன், மேகதீசன் (சுன்னாகம்), துவாரகன், கீர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சம்பத் வங்கி முன்பாக
சுன்னாகம்.

(25308) (45.6)

# மரண அறிவித்தல்



## துரைராஜா தினேஷன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை 473/2, இரத்தினம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், தற்போது மொரட்டுவ, கொய்சாபுரவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா தினேஷன் 11.11.2012 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா (இலங்கை வங்கி) மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் அருமைப்புதல்வரும், சுகந்தி யின் அருமைச் சகோதரரும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகரட்ணம் தம்பதியர், இரத்தினம் -பரமரத்தினம் தம்பதியர் ஆகியோரின் பேரனும், Dr. ஜெயரட்ணம், பவகரட்ணம், கோபாலரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் பரமேஸ்வரி (நயினாதீவு) ஆகியோரின் மருமகனும், தியாகராசா, இரத்தினாம்பிகை, இரத்தினாவதி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (14.11.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்சிசை பொதுமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. துரைராஜா (தாய்)

(சி/4841) (45.6)

# சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............

ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்

இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4839)(3.8.7) தொ.பே 0212219686

# மரண அறிவித்தல்

## மோகனசெல்வம் விஜயகுமாரன்



பெரிய விளானைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட மோகனசெல்வம் விஜயகுமார் 10.11.2012 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மோகனசெல்வம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வசந்தாவின் பாசமிகு கணவரும், மோகனேஸ்வரி (பிரான்ஸ்), மோகனேஸ்வரன் (லண்டன்), இராஜேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
லண்டன் - 0044 2085 540277,
பிரான்ஸ் - 0033 1482 99063.

ஆவரங்கால்
புத்தூர்.

(25309) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம் 21.06.1937

மறைவு 15.10.2012

## அமரர் கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்

எங்கள் குல விளக்கு அணைந்து திங்களொன்று கடந்து விட்டது
நினைவுகள் நெஞ்சை விட்டகலாத நிலை
மனம் நொந்து தினம் வாடும் நாம்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வை
இன்று (14.11.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில்
நாவலர் வீதியில் "தியாகி அறக்கொடை" நிறுவனத்தில் (T.C.T)
உள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.
தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(25316)(2.6)



# வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலய ஸ்கந்த ஷஷ்டி பெருவிழா

நந்தன வருடம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள் இன்று (14.11.2012) புதன்கிழமை தொடக்கம் வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்த ஷஷ்டி பெருவிழா சிறப்பாக நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து உற்சவம் நடைபெறும். விஷேட நிகழ்வாக தொடர்ந்து ஆறு நாள்களும் சைவப் புலவர் **செ.ஸ்கந்த சத்தியதாசன்** அவர்களால் முருகன் பெருமை என்னும் விடயம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா
சிவபாதசுந்தரம் சிவராசன்,
லண்டன்.

ஆலயப்பணியில்
பிரதமகுருவும்,
உபயகாரர்களும்.

(ஓ:23700) (2.6)



# முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



பூமி சிரிக்க 02.12.1970

ஆண்டவன் ஏற்க 25.11.2011

அமரர் **செல்லையா சபேஸ்குமார்**
(சாரதி இ.போ. ச. பருத்தித்துறை)

தெல்லிப்பழையோ பிறந்த இடம்
வாழ்வகமோ தொண்டமானாறு
தொட்ட தொழில் சாரதி
தூய மனத் தொண்டு மனம்
பட்டதெல்லாம் நல்லதற்காய்ப் பாடுபட்டு
இவ்வுலகை விட்டு ஓராண்டு
விண் சேர்ந்து போயாச்சு!

கிறேசரி வீதி,
தெல்லிப்பழை.

(25310)(49.6)

அம்மா, மனைவி,
பிள்ளைகள்,
சகோதரங்கள்.


# 24 ஆயிரத்து 917 குடும்பங்களுக்கு வடக்கில் மலசல கூடவசதி இல்லை

யாழ்ப்பாணம், நவ. 14

வடமாகாணத்தில் 24 ஆயிரத்து 917 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லை. அத்துடன் 3 ஆயிரத்து 377 குடும்பங்கள் பொது மலசல கூடத்தை பயன்படுத்துகின்றன என்று புள்ளி விவரத்திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நாடளாவியரீதியில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இந்தத் தகவல்கள் புள்ளி விவரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமாகாணத்தில் மலசல கூடங்களைத் தனித்து அந்தக் குடும்பங்களே பயன்படுத்தும் வகையில் 48 ஆயிரத்து 811 குடும்பங்கள் இருக்கின்றன.

வீட்டினுள் காணப்படும் மலசல கூடத்தை குடும்பங்களுடன் சேர்த்து 5 ஆயிரத்து 50 குடும்பங்கள் பாவிக்கின்றன.

வீட்டுக்கு வெளியே ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 276 குடும்பங்கள் மலசல கூடங்களைப் பாவிக்கின்றன. வேறு குடும்பங்களுடன் இணைந்த பாவனையாக 18 ஆயிரத்து 370 குடும்பங்கள் உள்ளன.

மலசல கூடம் இல்லாத நிலையிலும் வேறு குடும்பங்களுடன் சேர்ந்து 10 ஆயிரத்து 337 குடும்பங்கள் மலசலகூடங்களை பயன்படுத்துகின்றன.

பொது மலசலகூடத்தை 3 ஆயிரத்து 377 குடும்பங்கள் வடமாகாணத்தில் பாவிக்கின்றன. மலசலகூட வசதியில்லாமல் 24 ஆயிரத்து 917 குடும்பங்கள் வடமாகாணத்தில் உள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## விலைமதிப்பு தொடர்பாக இரு நாள் பயிற்சிப் பட்டறை

உள்ளூராட்சி மன்ற செயலாளர் மற்றும் வருமானப் பரிசோதகர்களுக்கான விலை மதிப்பு சம்பந்தமான இரு நாள் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின்கீழ் உள்ள மிலோதா நிறுவனம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் பயிற்சி இடம் பெறும். ஒவ்வாரு அலுவலருக்கும் சபை ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டும்.

இந்தச் செயலமர்வு மாகாண ரீதியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-50)


## வரையறுக்கப்பட்ட பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பூநகரி
## கிளைக் குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங் களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம்திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதான "வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இற்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 08.04. 2009 ஆம் திகதியில் 1596/17 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் எனக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி கூட்டுறவு சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணை யின்படி நடத்துவதற்காக இந்தக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமை யாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

இதற்கமைய இந்தக் கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் (தவிசாளர்களினால்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

* கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு(1/4) பங்கினர் அல்லது 25பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும். எனினும் ஆகக்குறைந்தது ஐந்து (05) உறுப்பினர்கள் சமுகமளித்தல் வேண்டும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது (02பேர்) 18வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
* இரண்டு அங்கத்தவர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச்செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
* கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் (தவிசாளர்களினால்) வடக்கு, கிழக்கு, மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளுக்கு அமைவாக கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்துக்கு சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையை பயன் படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயல் படுத்து மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம் கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 24.11.2012 சனிக்கிழமை**

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | மட்டுவில்நாடு | க.செந்தூரன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | பூநகரி மகாவித்தியாலயம் |
| 02 | வில்லடி | இ.விஜயகுமார் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | பரமன்கிராய் அ.த.க. பாடசாலை |
| 03 | ஞானிமடம் | வி.சிவபாலன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | ஞானிமடம் அ.த.க. பாடசாலை |
| 04 | செட்டியகுறிச்சி | சோ.கிருஸ்ணகுமார் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | ஞானிமடம் அ.த.க. பாடசாலை |
| 05 | கறுக்காய்த்தீவு | செ.நிமலரூபன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் |
| 06 | தம்பிராய் | இ.ஜெகதீபன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | செல்லையாதீவு அ.த.க. பாடசாலை |
| 07 | செல்விபுரம் | சி.பிரதீபன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | செல்லையாதீவு அ.த.க. பாடசாலை |
| 08 | நல்லூர் | செ.பகீரதன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | நல்லூர் மகாவித்தியாலயம் |
| 09 | கௌதாரிமுனை | க.செல்வகுமார் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை |
| 10 | கிராஞ்சி | இ.சுரேஸ் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | கிராஞ்சி அ.த.க. பாடசாலை |
| 11 | வேரவில் | ஜெ.ஜெயராசா | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | வேரவில் இந்து மகாவித்தியாலயம் |
| 12 | வலைப்பாடு | அ.பரமேஸ்வரன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | வலைப்பாடு றோ.க. பாடசாலை |
| 13 | முழங்காவில் | வே.சிறீஸ்கந்தராசா | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 14 | இரணைதீவு | ச.முகுந்தவேள் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | இரணைதீவு றோ.க. பாடசாலை |
| 15 | பல்லவராஜன்கட்டு சோலை | ந.நாவேந்தன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | கரியாலைநாகபடுவான் இல 3அ.த.க. பாடசாலை |
| 16 | நாச்சிக்குடா | இ.உதயகுமார் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | நாச்சிக்குடா முஸ்லிம் பாடசாலை |
| 17 | ஜெயபுரம் | க.சசிகரன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | ஜெயபுரம் வடக்கு பொதுநோக்கு மண்டபம் |
| 18 | குமுளமுனை | சி.சிவாகரன் | 24.11.2012 சனிக்கிழமை மு.ப10.00 மணி | குமுளமுனை அ.த.க. பாடசாலை |

**சிற்றம்பலம் தவராசா,**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.

(பி/1811) (2.6)



# ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கிளிநொச்சிக்கிளையின்

## மாபெரும் வேலை வாய்ப்பு



துடிப்புமிக்க இளைஞர் யுவதிகளே உங்களிற்கு
ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தரும் ஓர் அரிய சந்தர்ப்பம்

## காப்புறுதி ஆலோசகர் பதவி

18 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்களிற்கு மேல் (கணிதம், தமிழ் உட்பட) சித்தி பெற்ற அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

அரச, தனியார் துறைகளிலிருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

விண்ணப்பமுகவரி– முகாமையாளர், ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஏ9 வீதி, கிளிநொச்சி.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 30.11.2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட வின்ஸன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையின் ஒளிவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வின் ஒரு காட்சி. (31)

## ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஓட்டமாவடியில் மரக் கன்றுகள் விநியோகம்

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டும் இரண்டாவது பதவிக் காலத்தின் இரண்டாவது ஆண்டை முன்னிட்டும் 'தயட்ட செவண' தேசத்துக்கு நிழல் எனும் திட்டத்தில் மரக்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் எம்.சி. அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, ஓட்டாவடி பிரதேச சபை தலைவர் கே.பி.எஸ்.ஹமீட் ஆகியோர் கலந்துகொண்டு மரக் கன்றுகளை வழங்கினர்.



ஓட்டமாவடிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், அரச திணைக்களங்கள், பொது நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் என்பவற்றுக்கென 825 கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ. நியாஸ் தெரிவித்தார்.

இதேவேளை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் கமநெகும வேலைத் திட்டத்தில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அலுவலகப் பிரிவில் மாவடிச் சேனைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட தாய் சேய் நிலையம் திறந்துவைக்கப்பட்டது. (வ)

# நாவிதன்வெளி பிரதேச சபையின் தலைவர் நியமனத்துக்கு எதிர்ப்பு

## பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

அம்பாறை, நவ.14

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள நாவிதன்வெளிப் பிரதேச சபையின் புதிய தலைவரின் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நியமனத்தை எதிர்த்து உப தலைவர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாவிதன்வெளிப் பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

நாவிதன்வெளி பிரதேச சபையின் தலைவராகச் செயற்பட்ட கலையரசன் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, ஏற்பட்ட தலைவர் வெற்றிடத்துக்கு பிரதேச சபை உறுப்பினரான சிவலிங்கம் குணரட்ணத்தின் பெயரை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்திருந்தது.

அதனால், நாவிதன் வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளராக சிவலிங்கம் குணரட்ணத்தின் பெயர் கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதனையடுத்து, நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தலைவராக சிவலிங்கம் குணரட்ணம் நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்தநிலையில் புதிய தலைவரின் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து உப தலைவரான அமரதாச ஆனந்தன் தலைமையிலான குழுவினர் பிரதேச சபைக்கு முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



தமிழ்த்தேசியகூட்டமைப்பு ஒழிக, கலையரசனின் கபட நாடகத்தில் குணரட்ணம், போன்ற சுலோகங்களும் கோஷங் களும் எழுப்பியவாறு சுமார் 50 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இதுதொடர்பாக புதிய தலைவர் சிவலிங்கம் குணரட்ணம் தெரிவித்ததாவது:-

''எனக்கான இந்த நியமனம் கட்சியால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக கட்சியின் தலைமை பீடத்துக்குத் தெரிவித்துள்ளேன். நான் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழரசுக் கட்சியில் இருந்து செயற்பட்டு வருகின்றேன் - என்றார். (வ)

## மாகாண மட்டத்தில் தங்கம் வென்றார் சம்மாந்துறை மாணவி



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில்நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் சம்மாந்துறை மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 9 இல் கல்வி பயிலும் எம்.ஆர்.ஹன்ஸா தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இந்த மாணவி கடந்த காலங்களிலும் மாகாண, மாவட்ட, வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் முதலாம் தரத்தில் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேற்படி போட்டியில் வெற்றி பெற்ற மைக்கான பாராட்டு விழா பாடசாலை மட்டத்தில் நேற்று முன்தினம் பாடசாலையில் நடைபெற்றது. (வ-31)

## வர்த்தக நிலையத்தில் திருட்டு: சந்தேகநபர்கள் 4 பேர் கைது

கண்டி,நவ.14

கட்டுகஸ்தோட்டை - குருநாகல் வீதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து 400 கிராமுடைய 158 பால்மா பைக்கற்றுக்களையும் 25 கிலோ மைசூர் பருப்பையும் திருடிச்சென்று பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் 4 சந்தேக நபர்களை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

மேற்படி வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரும் மற்றும் அவரது 3 நண்பர்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத்தின் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பால்மா பைக்கற்றுக்களும் மைசூர் பருப்புமே திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## திருமலை பத்திரகாளி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற காப்புப் பூசை

சக்தி விரதங்களில் முதன்மையானதும், உமை சிவனின் இடப்பாகத்தை தனதாக்கிக் கொள்ள வகை செய்ததுமான மகிமைமிகு கேதாரகௌரி விரதத்தின் இறுதித்தினமான நேற்று திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்தில் விரத நூலாகிய காப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நேற்று அதிகாலை கேதார கௌரி அம்மனுக்கு இடம்பெற்ற சிறப்புப் பூசையை அடுத்து ஆலய ஆதீனகர்த்தா வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்களால் விரதமிருந்த பக்தர்களுக்கு காப்பு வழங்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இக்காப்பைப் பெற்றனர். நேற்று மாலை வரை தொடர்ந்து காப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.



## காணாமற்போன மீனவர் வீடு திரும்பினார்

காத்தான்குடி, நவ.14

மட்டு. பாலமுனை கடலில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமற்போன மீனவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வீடு திரும்பியுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமுனை 10ஆம் குறிச்சியைச் சேர்ந்த 62 வயதான எம்.ஆதம்லெவ்வை என்பவரே மீன் பிடிப்பதற்காக படகில் சென்றபோது காணாமற் போயிருந்தார்.

கடலில் வீசிய கடும் காற்றால் மீன் பிடிப் படகு வழி தெரியாத ஒரு பகுதிக்கு சென்றுவிட்டது. இதனால் அவர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, பெரிய மீன்பிடிப் படகில் வந்த திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர். இதனையடுத்தே அவர் வீடு திரும்பியுள்ளார். (வ)

## மட்டு. மாவட்டத்தில் 30 இடங்களில் நாளையதினம் மின்வெட்டு

*மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 இடங்களில் நாளை வியாழக்கிழமை ஐந்து மணி நேர மின்வெட்டு இடம்பெறும் என்று இலங்கை மின்சார சபையின் மட்டக்களப்பு மின்பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. மின்சார சபையின் பராமரிப்புப் பணிகள் நடைபெற இருப்பதால் நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சித்தாண்டி, மாவடி வேம்பு, வந்தாறுமூலை, உன்னிச்சை, ஆயித்தியமலை, பங்குடாவெளி, இலுப்படிச்சேனை, மரப்பாலம், கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, பெரிய புல்லுமலை, தும்பாலஞ்சோலை, ஐயங்கேணி, மிச்சி நகர், தளவாய், மீரா கேணி, சதாம் ஹுசைன் கிராமம், ஹிஸ்புல்லா கிராமம், கொம்மாதுறை, செங்கலடி, களுவங்கேணி, ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை, [illegible] மயிலம்பாவெளி, திருப்பெருந்துறை மற்றும் ஊறணி ஆகிய பிரதேசங்களிலேயே மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.* (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவையின் ஏற்பாட்டில், முன்னாள் இடை நிலை மேற்பார்வையாளர் மேரி ஏலயன்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுப் பிரிவு பெண்களுக்கிடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியினர் பொறுப்பாசிரியருடன். (ங-23)

## ஒலிம்பிக்ஸை வென்றது வேல்ஸ்

திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் கழகத்துக்கும் வேல்ஸ் கழகத்துக்கும் இடையே 6 ஆவது வருடமாக இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் வேல்ஸ் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யங் ஒலிம்பிக்ஸ் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

146 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய வேல்ஸ் கழகம் 149 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மூன்று சிக்ஸர்கள், ஆறுபவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 75 ஓட்டங்கள் பெற்ற சதீஸ்குமார் தெரிவுசெய்யப்பட்டார். (ங-23)

## தேசிய மரதன் ஓட்டத்தில் யாழ்.வீராங்கனை சாதனை

யாழ்ப்பாணம், நவ.14

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் நாகேஸ்வரன் சுமதி 13 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார்.

இந்த மரதன் ஓட்டப் போட்டி மாத்தறை சனத் ஜெயசூரிய விளையாட்டுக் கழக மைதான முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.

மேற்படி மரதன் ஓட்டப் போட்டியில் 75 இற்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-23)

### பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக நீச்சல் பயிற்சி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச நீச்சல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் செயற்குழுவும், குறித்த கல்லூரியின் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பழைய மாணவர்களும் இணைந்து எதிர்வரும் 22ஆம் திகதியிலிருந்து ஒரு வாரகாலம் இலவச நீச்சல் பயிற்சி முகாமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் நடத்தவுள்ளனர். இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர். எஸ்.கே.எழில்வேந்தன் வெளியிட்டுள்ளார்.

நீச்சலில் நிபுணத்துவம் வாய்ந்த ஐந்து பேர் கொண்ட குழுவினரால் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி முகாமில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 36 பாடசாலைகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் பயிற்சி முகாம் மூலம் தற்காப்புப் பயிற்சிகளை வழங்குதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் நடத்தப்படவுள்ள நீச்சல் போட்டியில் பங்குபற்றுவதற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன என்றும் மத்திய கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ங-23)

## ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான பெரு விளையாட்டு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,நவ.14

வடமாகாணத்துக்கு உட்பட்ட அமைச்சுகளுக்கு இடையிலான ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

இதன்போது ஆண்கள் பிரிவில் உதைபந்து, கரப்பந்து, கிரிக்கெட், பெண்கள் பிரிவில் வலைப்பந்து ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அத்துடன் இருபாலாருக்குமாக பூப்பந்தாட்டம், கரம், சதுரங்கம் போன்ற போட்டிகள்இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை கல்வியங்காடு வி.ரி.எஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கரம் போட்டிகள் 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை விளையாட்டுத் திணைக்கள கேட்போர் கூடத்திலும், உதைபந்தாட்டப் போட்டி 27 ஆம் திகதி யாழ்.துரையப்பா மைதானத்திலும், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் பூப்பந்தாட்டப் போட்டிகள், டிசெம்பர் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக பூப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ங-23)

## ஜனாதிபதி வெற்றிக் கிண்ண கரப்பந்து இரு பிரிவுகளிலும் றன்சமநல வெற்றி

ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்கான கந்தளாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலும் கந்தளாய் றன் சமநல விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த வாரம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் கந்தளாய் றன் சமநல விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முள்ளிப்பொத்தானை மகேசன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் றன் நமநல விளையாட்டுக் கழக அணி, 25:18, 25:18, 25:22 என்ற செற் கணக்கில் முள்ளிப் பொத்தானை மகேசன் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் றன் சமநல விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரஜஅல விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் றன் சமநல விளையாட்டுக் கழக அணி 27:25, 25:09, 25:03 என்ற ரீதியில் முதல் மூன்று செற்களையும் தன்வசமாக்கி மகளிர் பிரிவிலும் றன் சமநல அணி சம்பியனானது. (ங-23)

### விளையாட்டு உபகரணங்கள்

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கென விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 விளையாட்டுக் கழகங்களுக்கு, இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தினூடாக இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத் தலைவர் ம.சந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வழங்கினார். (ங-23)

## யாழ்.கூடைப்பந்து அணி இன்று கொழும்பு பயணம்

ஹால்டன் விளையாட்டுக் கழகம் தேசிய ரீதியாக நடத்தும் ஹால்டன் வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் விளையாடுவதற்காக யாழ்.மாவட்ட அணி இன்று புதன்கிழமை கொழும்பு புறப்பட்டு செல்கின்றது.

யாழ்.மாவட்ட அணி வஸ்தியன்ஸ் விளையாட்டுக் கழக அணி, மருண்ஸ் விளையாட்டுக் கழக அணிகளுடனான ஆட்டங்களில் பெற்ற வெற்றிகள் மூலமே காலிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ங-23)

## திருகோணமலை உதைபந்து லீக் சனி,ஞாயிறு மோதும் அணிகள்

யாழ்ப்பாணம்,நவ.14

திருகோணமலை உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபெற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**சனிக்கிழமை**

**காலை 8 மணி**

கிறீன்லைட் விளையாட்டுக் கழகம் எதிர் பற்றிமா விளையாட்டுக் கழகம்.

**ஞாயிற்றுக்கிழமை**

**காலை 8 மணி**

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஜமாலியா விளையாட்டுக் கழகம்

**மாலை 3 மணி**

ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பிக்வுட் விளையாட்டுக் கழகம். (ங-23)

# தென்மராட்சி வலய உதைபந்து சம்பியன் சாவகச்சேரி இந்து

தென்மராட்சி,நவ.14

தென்மராட்சி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சம்பியனானது.

இந்தப் போட்டிகள் நேற்று மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றன.

இதன் போது முதலில் நடைபெற்ற அரையிறுதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியினை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலயம் களமிறங்கியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மோதிக் கொண்டது. இதில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெற்றது.

அரையிறுதியில் பெற்ற வெற்றிகளின் அடிப்படையில் நேற்று மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் ஒன்றையொன்று எதிர்த்தாடின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை இரு அணியினதும் பின்கள வீரர்கள் தடுத்து நிறுத்தினர். எனினும் இத்தகைய தடுப்பரண்களை தவிடு பொடியாக்கிவிட்டு கோல் ஒன்றை அடித்தது சாவகச்சேரி இந்து. இதன் மூலம் தென்மராட்சி வலய 16 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 1:0 என்ற ரீதியில் சம்பியனானது.

குறித்த பிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் நாவாற்குழி மகா வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை வென்றது. (ங-23)



வடமாகாணத்தின் 21 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியைத் தெரிவு செய்வதற்காக வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட தெரிவு உதைபந்தாட்ட அணியின் தலைவரும் பயிற்றுநரும் வட மாகாண [illegible] இருந்து இரண்டாமிடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர். (ங-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

நான்காவது நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 487 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாளைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 565 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி 115 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்பட்டு தென்னாபிரிக்க அணிக்குத் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை வழங்கியது. துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 259 ஓட்டங்களையும் எட் கோவன் 136 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 100 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல் 3 இலக்குகளையும், ஸ்ரெய்ன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இந்த இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 23 முறையற்ற பந்துகளை வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

115 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 5 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்ட போது ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொள்ள ஆஸ்திரேலிய அணி சம்மதித்ததையடுத்து ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைவதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ் 49 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 38 ஓட்டங்களையும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பற்றின்சன், நதன் லயன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் பீற்றர் சிடில் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 450 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்ததோடு, இந்த ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாக இடம் பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவானார். (5)

# தீர்மானிக்கப்பட்ட முடிவா?

எழுகிறது சர்ச்சை



விருது பெற்ற விளையாட்டு ஊடகவியலாளரான எட் ஹோக்கிங் எழுதியுள்ள புதிய நூல் ஒன்றில், இங்கிலாந்தில் பரபரப்பாக கடந்த மே 2011 இல் காட்டிப் மைதானத்தில் இடம் பெற்ற இலங்கைக்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டத்தின் முடிவு முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தது என்று அம்பலமாகியுள்ளார்.


நான் விளையாடிய அதி சிறந்த போட்டியில் இதுவும் ஒன்று என்று இங்கிலாந்து அணியின் தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸ் தெரிவித்திருந்தார். 4 ஆம் நாள் முடிவில் 400 ஓட்டங்களை பெற்று சகல இலக்குகளையும் முதல் இன்னிங்ஸில் இழந்த இலங்கைக்கு பதிலளித்த இங்கிலாந்து 491 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

5 ஆம் நாள் காலை மழை காரணமாக ஆட்டம் குழம்பியிருந்த நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடையும் என்று யாவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், 495 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் என்ற நிலையில் இங்கிலாந்து ஆட்டத்தை நிறுத்தி இலங்கையை விளையாட அழைத்தது.

பின்னர் 24.4 பந்துப் பரிமாற்றங்களில் 82 ஓட்டங்களுக்கு இலங்கையை ஆட்டமிழக்க செய்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் 14 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது. இதே சமயம் இலங்கை வீரர்கள் தமது சம்பளம் எட்டு வாரங்களாக கிடைக்காத நிலையில் பெரும் நிதி நெருக்கடியில் இருந்தாகக ஹோக்கிங் கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலக கிண்ண தொடரின் மொஹாலியில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானின் இன்னிங்ஸ் எவ்வாறு அமையும் என்று ஒரு சூதாட்ட முகவர் சரியாக எதிர்வு கூறினார் என்ற பாணியிலும் இந்த புத்தகத்தில் ஹோக்கிங் எழுதியுள்ளார். (5)

# டுமினிக்கு பெரிய மனம்



ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் போது காயமடைந்துள்ள தென்னாபிரிக்க அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜே.பி.டுமினி, தனக்குப் பதிலாகத் தெரிவாகியுள்ள வீரருக்குத் தனது வாழ்த்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த ஆட்டத்தில் முதலில் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது. முதல்நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்திருந்த நிலையில் ஜே.பி.டுமினிக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்புக் கிடைத்திருக்கவில்லை.

ஆனால் முதல் நாள் முடிவில் இடம்பெற்ற பயிற்சிகளின் போது அவரது கணுக்கால் தசையில் உபாதை ஏற்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

கிட்டத்தட்ட 6 மாதங்களுக்குக் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ஜே.பி.டுமினி இற்குப் பதிலாக டீன் எல்கர் தென்னாபிரிக்க அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்தோடு டு பிளெஸிஸ் ஏற்கனவே தென்னாபிரிக்கக் குழாமில் காணப்படுகிறார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஜே.பி.டுமினி, எனக்குப் பதிலாக அடுத்த போட்டியில் பங்குபற்றவுள்ள வீரருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

கிடைக்கும் வாய்ப்பைத் தெரிவாகும் வீரர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறான வாய்ப்புக்கள் அடிக்கடி கிடைக்கப்பெறுவதில்லை .

எனக்குப் பதிலாக அடுத்த போட்டியில் பங்குபற்ற வாய்ப்புள்ள வீரர்களான டீல் எல்கர், டு பிளெஸிஸ் அல்லது இலக்குக் காப்பாளர் தமி சொலக்கிலே ஆகியோர் மிகத் திறமையான வீரர்கள். அவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பது மிகவும் பொருத்தமானது' எனவும் தெரிவித்துள்ளார். (5)

# டோனியை நீக்க வேண்டாம் - டிராவிட்



கடந்த ஆண்டு தொடர்ச்சியாக எட்டு டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததன் மூலம், டோனியின் தலைமைப் பொறுப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவரை உடனடியாக அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறவில்லை. ஏனெனில் அடுத்தடுத்து போட்டி இருப்பதால் இதற்கான நேரம் இதுவல்ல. இருப்பினும் விரைவில் இவரது தலைமைத்துவச் சுமையை ஏதாவது ஒரு போட்டியில் இருந்து குறைக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வெற்றித் தலைவராக ஜொலிப்பவர் டோனி. இவரது தலைமையில் கடந்த ஆண்டு இந்திய அணி இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய மண்ணில் தொடர்ச்சியாக எட்டு டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்தது. இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் முதலிடத்தை இழந்தது. இதனால் டெஸ்ட் அணிக்கான தலைமைப் பொறுப்பில் இருந்து டோனியை நீக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் எதிர்ப்புகள் கிளம்பின.

இது குறித்து முன்னாள் இந்திய வீரர் ராகுல் டிராவிட் கூறியதாவது:

டோனி சிறந்த வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. துடுப்பாட்ட வீரராகவும், இலக்குக் காப்பாளராகவும் இவரது செயல்பாடு இந்திய அணியின் வெற்றிக்கு நிறைய போட்டியில் கைகொடுத்துள்ளது. இவரை தொடர்ந்து சிறந்த வீரராகவே காண விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு தொடர்ச்சியாக எட்டு டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததன் மூலம், இவரது தலைமைப் பொறுப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவரை உடனடியாக அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறவில்லை. ஏனெனில் அடுத்தடுத்து போட்டி இருப்பதால் இதற்கான நேரம் இதுவல்ல. இருப்பினும் விரைவில் இவரது அணித் தலைமைச் சுமையை ஏதாவது ஒரு போட்டியில் இருந்து குறைக்க வேண்டும். இதன்மூலம் இவர் போட்டியில் நெருக்கடியின்றி விளையாடலாம். தவிர இவர், மீண்டும் சிறந்த வீரராக அசத்தலாம்.

அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவது குறித்து டோனி மட்டுமே முடிவு செய்ய முடியும். ஏனெனில் இவரது தலைமையில் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது. டெஸ்ட் அரங்கில் முதலிடத்தை அடைந்தது. இருப்பினும் கடந்த ஆண்டு மோசமான தோல்வி கண்டது இவருக்கு ஏமாற்றம் அளித்திருக்கும்.

அடுத்த அணித் தலைமைப் பொறுப்புக்கு விராத் ஹோக்லி தகுதியானவர் என்று நினைக்கிறேன். இவர், அடுத்த 12 மாத காலத்தில் மூன்று விதமான கிரிக்கெட் போட்டியிலும் முழுத்திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில், இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்படலாம். ஏனெனில் ரசிகர்கள் இவர் மீது அதிக எதிர்பார்ப்பு வைத்துள்ளனர் - என்றார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீலேவின் சாதனையை தகர்த்த மெஸ்ஸி

ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் ஆர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்சி. இதன் மூலம் பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே சாதனையை முறியடித்தார்.

மாட்ரிட் நகரில் நடந்த 'ஸ்பானிஷ் லா லிகா' உள்ளூர் உதைபந்து லீக் போட்டியில் பார்சிலோனா, மாலோர்கா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பார்சிலோனா சார்பில் லியோனல் மெஸ்சி 2 (44, 70 ஆவது நிமிடம்), சேவியர் ஹெர்னாண்டஸ் (28 ஆவது), கிறிஸ்டியன் டெல்லோ (45 ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். மாலோர்கா அணிக்கு பெரைரா (55 ஆவது நிமிடம்), விக்டர் (58 ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி இதுவரை விளையாடிய 11 லீக் போட்டியில் 10 வெற்றி, ஒரு சமநிலை உட்பட 31 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. அட்லடிக்கோ மாட்ரிட் (28 புள்ளி), ரியல் மாட்ரிட் (23) அணிகள்முதல் மூன்று இடங்களில் உள்ளன.

**இரண்டாவது இடம்**

இந்தப் போட்டியில் இரண்டு கோல் அடித்த பார்சிலோனா அணியின் ஆர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி, இந்த ஆண்டு இதுவரை விளையாடிய உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் மொத்தம் 76 கோல் அடித்துள்ளார். இதன்மூலம் ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் பிரேசில் வீரர் பீலேவை பின்தள்ளி இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். கடந்த 1958 இல் சான்டோஸ் மற்றும் பிரேசில் அணிக்காக விளையாடிய பீலே 75 கோல் அடித்தார்.

**கிடைக்குமா முதலிடம்**

மெஸ்சி இன்னும் கூடுதலாக 10 கோல் அடிக்கும் பட்சத்தில், ஜேர்மனி வீரர் ஜெர்டு முல்லரை பின்தள்ளி முதலிடம் பிடிக்கலாம். பேயர்ன் முனிக் மற்றும் வெஸ்ட் ஜேர்மனி அணிக்காக விளையாடிய முல்லர், கடந்த 1972 ஆம் ஆண்டு 85 கோல் அடித்து முதலிடத்தில் உள்ளார்.

(5)

# கொஞ்சம் பயமாக இருக்கிறது

இங்கிலாந்து அணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் பலம் வாய்ந்தவர்கள் என்ற போதும், சுழற்பந்து வீச்சை சமாளிக்க தடுமாறுவர். இங்கிலாந்து அணி இந்த முறை இந்தியாவில் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள உள்ளது.

இந்த போட்டி குறித்து இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் கூறுகையில், நான் தன்னம்பிக்கையுடன் இருக்கிறேன், ஆனால் அதே சமயத்தில் கொஞ்சம் பயப்படவும் செய்கிறேன்.

நிறைய வேலைகள் செய்யவேண்டியுள்ளது. ஆனால் தற்போதைக்கு தயாரிப்பு திருப்தி அளிக்கிறது.

இங்கிலாந்து அணி அபாரமான துடுப்பாட்ட திறனைக் கொண்டுள்ளது. அவர்கள் கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பாக விளையாடி வருகின்றனர். அதற்கு நாம் மரியாதையளிப்பதே நல்லது. அவர்களை வீழ்த்த நல்ல தயாரிப்பு அவசியம்.

மணிக்கட்டைப் பயன்பத்தி வீசும் ஒரு புதிய புதிர்ப்பந்தை தான் பயிற்சி செய்துள்ளேன் என்றும் அதனை இந்தத் தொடரில் பயன்படுத்த உள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (5)


**முன்னர் புதன்**
**தற்போது வெள்ளிக்கிழமை விடுமுறை**

திசைகாட்டியின் யாழ்ப்பாணத்தலைமையகம், கொழும்புக்கிளை, ஆஸ்திரேலியா சர்வதேசக்கிளை என்பன இது வரைகாலமும் புதன் கிழமை விடுமுறை நாளாக நடைமுறையிலிருந்தது.
ஆனால் இனி வெள்ளிக்கிழமைகளில் திசைகாட்டி பிறைவேற் லிமிட் இன் அனைத்துக்கிளைகளும் திறக்கப்படமாட்டா என்பதை அனைவருக்கும் பணிவன்போடு அறியத்தருகின்றோம்.
வெள்ளி தவிர்ந்த ஏனைய ( சனி ஞாயிறு உட்பட) அனைத்து நாள்களும் காலை 8.30 முதல் பி.ப. 5.30 வரை வழமைபோல் திறந்திருக்கும்.

(25294)(8.14)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்**
**37, சிவகுருநாதர் ஒழுங்கை பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம். 021 2219016**



அனைத்து கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**17.11.2012**
**19.11.2012**
காலை 10.00 மணி

**IIS** INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை மகேஸ்வரி



3 ஆம் வட்டாரம் அல்லைப் பிட்டியைப் பிறப்பிடமாகவும், 72 சீனிவாசகம் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரி நேற்று (13.11.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புமனைவியும், வடிவாம்பிகை, சாம்பவதாஸ் (மருந்தாளர் - சிலாபம், பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், சிவகிருபா (வைத்தியர் - தம்பகல்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், செம்பொற்சோதி (கனடா), பரமகுரு (ஆஸ்திரேலியா), சற்குணசிங்கம் (கனடா), காலஞ்சென்ற மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருமைநாயகம், ஞானம் மற்றும் செல்வநாயகம் (இந்தியா), தவமலர் (கனடா), சாந்தாதேவி (ஆஸ்திரேலியா), சந்திரா (கொழும்பு) ஆகியோரின் அன்புமைத்துனியும், தவநிதி - காந்தரூபன் (கனடா), சுதர்சன், கபிலன், ஜனகன், தாட்சாயினி, தாரணி, துவாரகன், சத்தியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2012) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

72, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (சி/1558)(8-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## காசியர் சபாபதி

( சவாரிக்கார சபாபதி)



விளங்காவத்தை மயிலட்டியைப் பிறப்பிடமாகவும், கோணப்புலம் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசியர் சபாபதி நேற்று (13.11.2012) செவ்வாய்க்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசியர் - சிதம்பரம் தம்பதியரின் புத்திரனும், காலஞ் சென்றவர்களான கந்தப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், லட்சுமிப்பிள்ளை, இளையபிள்ளை, எள்ளுப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் திருமால் (கொலண்ட), திருக்குமார், திருமகள் (கொலண்ட்), திருஞானம்(கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, சிறிதரன், ஜெயா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், அபர்ணா, அபிராம், சஞ்சீவ், சிந்துஜா, தேவசாயினி, விதுராம், பவிதரன், மிதுன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2012) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/1558)(8-14)

கோணப்புலம், மல்லாகம்

தகவல்:
குடும்பத்தினர்.

## முருகேசு இராமலிங்கம்



தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராமலிங்கம் நேற்று 13.11.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2012) புதன்கிழமை மீசாலை வடக்கு மீசாலையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோயிலாமனை சோனகம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(சி/1558)(8-14)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணினிப் பிரிவுப் பணியாளரான ப.அகழ்யன் அவர்களின் அன்புத் தந்தை

## சின்னத்துரை பத்மநாதன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல, 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நிர்வாகப் பணிப்பாளரும்,
ஊழியர்களும்.
உதயன் பத்திரிகை நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திட்டமிடுவோர்
இன்னொருவராக
இருந்தால் காரியம்
நடக்காது.
- வினோபாஜி -

# புதன் பொய்கை A

உதயன் 14 நவம்பர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# முள்ளிவாய்க்காலும் ருவாண்டாவும்

துன்னாலைச் செல்வம்



சென்றவாரத் தொடர்ச்சி

அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ருவாண்டாவிலும் புரூண்டியிலும் பெரிய அளவு கலவரங்கள் எதுவுமில்லை. கிட்டத்தட்ட அமைதிப் பூங்காவாகத்தான் இரு நாடுகளும் இருந்தன. இருந்தாலும் ஒரு பக்கம், ருவாண்டாவில் ஹூட்டு பெரும்பான்மை அரசை வீழ்த்துவதற்கு, சில டூட்சி போராளிக் குழுக்கள் ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருந்தன. உகண்டா, செயர் போன்ற அண்டை நாடுகள், ருவாண்டா மீது தாக்குதல் நடத்திய படி இருந்தன. 1990 களில் இந்த மோதல்கள் எல்லாம் சேர்ந்து, உள்நாட்டுப் போராக உருமாறியது. உள்நாட்டு போர் மூண்டவுடன் பிற நாடுகள் தலையிட்டன. இரு தரப்பினரையும் அழைத்து சமாதானம் பேசின. ஆட்சி அதிகாரத்தில் டூட்சிப் போராளிகளுக்குப் பங்கு கொடுக்கும்படி ஹூட்டு அரசை வற்புறுத்தின.

ஏப்ரல் 1994 இல், ருவாண்டா மற்றும் புரூண்டி நாடுகளின் குடியரசுத் தலைவர்கள் பயணம் செய்த விமானம், ருவாண்டா நாட்டு தலைநகர் கிகாலியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இருவரும் இதில் மரணமடைந்தார்கள். இனவொழிப்பைத் தொடங்க ஹூட்டுக்கள் தேடிக் கொண்டிருந்த காரணம் ஒரு வழியாகக் கிடைத்தது. எப்படியும் டூட்சிகள் தம்மை ஆளவிடமாட்டார்கள் என்று அவர்கள் பிரசாரம் செய்ய இது வசதியாகிப் போனது. யார் அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தினார்கள் என்பது இன்று வரை சர்ச்சையாகவே உள்ளது. இதேபோல்தான் இலங்கை இராணுவத்தின் ஊடறுப்புத் தாக்குதல்கள் சமாதான காலத்தில் நடந்ததால் புலிகளைப் போருக்கு வலிந்து இழுத்து சிங்கள அரசு போரை மேற்கொண்டது. வன்னிப் பிரதேசம் எங்கும் ஆழ ஊடுருவும் படைகள் அகலக்கால் பதித்தன. விடுதலைப்புலிகளின் முக்கிய பிரதானமான இடங்களான ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி போன்ற பகுதிகளில் ஆழ ஊடுருவும் படைகள் ஊடுருவி கிளைமோர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளைக் குறி வைத்து ஆழ ஊடுருவும் படைகள் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டாலும் மாங்குளம் ஐயன்குளப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் சென்ற வாகனமும் கிளைமோரில் சிக்கி 9 மாணவர் கள் உயிரிழந்த னர். நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் பயணம் செய்த வாகனமும் கிளை மோர் தாக்குதலில் சிக்கி சின்னா பின்னமானது. அந்த இடத்திலே சிவநேசன் எம்.பி மரண மானார். மேலும் பொது மக்களின் பயணிகள் பஸ்ஸூம் கிளைமோர் தாக்குதலில் சிக்கியது. இப்படியாக ஆழ ஊடுருவும் படை யணிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் பொது மக்களும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியான கேணல் சங்கர், ஒட்டுசுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தார். விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையின் மூத்த தளபதியான கேணல் சார்ள்ஸ் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தார். இவர் தென்பகுதியில் இடம்பெறும் தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் ஆழ ஊடுருவும் படையணிகளின் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தமை விடுதலைப்புலிகளுக்கு பேரிழப்பாக அமைந்தது. ஆழ ஊடுருவும் படையணிகளின் கிளைமோர் தாக்குதல்களில் இருந்து தப்பிப்பதற்காக புலிகளின் தளபதிகள் தமது நடமாட்டத்தைக் குறைத்தனர். இதனால் தான் இராணுவம் வன்னி மீது பெரும் போரினை மேற்கொள்ள இலகுவாக இருந்தது. ஆனால் ஆழ ஊடுருவும் படையணிகளுக்கு ஒட்டுப் படைகளே உதவியமை ஒரு கேவலமான செயற்பாடாகும்.

விடுதலைப்புலிகள் தோற்றமைக்கு ஒட்டுப் படைகளின் செயற்பாடு மிக முக்கியமாக அமைந்தது எனலாம். எமது இனத்திலே காட்டிக் கொடுப்பவர்கள் இருந்துள்ளனர். இதனால் தான் சிங்கள இராணுவத்தால் இலகுவாக போரினை வெற்றி கொள்ள முடிந்தது. டூட்சிப் போராளிக் குழுக்கள் தான் விமானத்தைச் சுட்டனர் என்று ஹூட்டுக்களும், ஹூட்டு தீவிரவாதிகள், இனவொழிப்பைத் தொடங்குவதற்காக இதைச் செய்தார்கள் என்று டூட்சிக்களும் இன்றுவரை மாறிமாறிக் குற்றம் சாட்டி வருகிறார்கள்.

யார் ஆரம்பித்தார்களோ...! அடுத்து நிகழ்ந்த பயங்கரம் இதுவரை உலக வரலாற்றில் யாரும் எதிர்பார்த்திராதது. ருவாண்டா ஊடகங்கள், டூட்சி இனத்தவர்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தன. ஹூட்டு மக்களின் இரத்தத்தைக் கொதிப்படையச் செய்யும் அளவுக்கு, டூட்சிகள் சதிகளும் துரோகங்களும் செய்வதாக அவதூறுகளைப் பரப்பின.

1994 இல், டூட்சி இனப்படுகொலை தொடங்கியது. குழந் தைகள், வயதானோர், ஊனமடைந்தவர்கள் என எவரையும் விட்டு வைக்கவில்லை. வெகுகாலமாக, ஒரே ஊரில் வாழ்ந்த டூட்சிகளை, அவர்களது பகுதியில் வாழ்ந்த ஹூட்டுகளே விரட்டி விரட்டிக் கொன்றார்கள். படுகொலையில் பங்கேற்க மறுத்த ஹூட்டுகளும் கொல்லப்பட்டார்கள். தப்பி, ஓடி ஒளிந்த டூட்சி களைக் கொல்ல கொலைப்படைகள் நாடெங்கும் அலைந்தன. தேவாலயங்கள், பள்ளிகள் என எங்கு ஒளிந்திருந்தாலும் டூட்சிகளைத் தேடிப்பிடித்துக் கொலை செய்தனர்.

ஜூலை மாத இறுதிவரை இந்த வெறியாட்டம் தொடர்ந்தது. ஐந்து லட்சத்திலிருந்து பதினொரு லட்சம் வரை டூட்சிகள் இந்த இனப்படுகொலையில் கொல்லப்பட்டார்கள் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதேபோல்தான் விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போர் ஆரம்பமான போது போர் நடந்த பகுதிகளில் மட்டுமல்ல அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். யாழ்ப்பாணப் பகுதியில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். வன்னி மீது சிங்களப் படைகள் இராணுவத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த அதேவேளை, பிற மாவட்டங்களில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே தமிழ் இளைஞர்கள் காணமல் போனார்கள். வெள்ளை வானில் ஆயுதங்களுடன் வருபவர்கள் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து தமிழ் இளைஞர்களைக் கதறக் கதற அடித்து இழுத்துச் சென்றனர். பலரை வீதிகளிலே சுட்டுப் போட்டனர். பலர் காணாமல் போய் இன்றும் வெளிவராத செய்திகளாக உள்ளன. ருவாண்டாவில் படுகொலை நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, ஐக்கிய நாடுகளும், பன்னாட்டுச் சமுதாயமும் ஏதோ உள் நாட்டுத் தகராறு நடக்கிறது என்று சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.


முள்ளிவாய்க்காலில் சிங்களப் படைகள் மேற்கொண்ட இன அழிப்பையும் ஐக்கிய நாடுகள் சபை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது தான் வேதனைதரும் விடயமாகும்.

மூன்றுதசாப்த கால போரின் பின்னரும் தமிழர்களுக்கு நிரந்தர நிம்மதி கிடைக்கவில்லை. விடுதலைப்புலிகளின் போராட்டத்தை நசுக்குவதற்கு இலங்கை அரசுக்கு உதவிய சர்வதேசம், இன்று தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் மௌனித்துப் போய் இருக்கிறது. இலங்கை அரசு மீது எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாமல் சர்வதேசம் தமிழர்களை அழிப்பதற்கான முயற்சியில் முன்னின்றது என்பது வெளிப்படையான விடயம். இந்த விடயம் வரலாற்றில் சர்வதேசத்தின் மீது ஒரு அவப்பெயரினை ஏற்படுத்தும் என்பது உண்மை.

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய வயலின்



76 வயது நிரம்பிய டேவிட் எட்வார்ட் என்ற பிரபலமான இசைக்கலைஞர் உலகிலேயே மிகச் சிறிய வயலின்களை வடிவமைத்துள்ளார். இவற்றின் நீளம் 1.5 அங்குலமே ஆகும்.

# கையால் சமச்சீராக அப்பிளை பிரித்து சாதனை



போலந்து நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் ஆயுதங்களின் உதவி எதுவுமின்றி தனது கையினாலே அப்பிளை சமச்சீராகப் பிரித்து அசத்தியுள்ளார். அத்துடன் நின்றுவிடாமல் அக்காட்சியை காணொளியாகப் பதிவுசெய்து யூரியூப் இணையத்தளத்தில் பதிவேற்றியுமுள்ளார். இதனால் இவரது அபாரத் திறமையை 7.3 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பார்த்து வியந்துள்ளனர்.

# நீண்டநாள் கனவில் உருவான கோட்டை




ஸ்பெயின் நாட்டில் வசித்துவரும் ஷெரபின் வில்லாரன் என்பருடைய நீண்ட நாட் கனவின் பயனாக உருவானதே இந்தக் கோட்டையாகும். 1935 ஆம் ஆண்டு பிறந்த இவர், தனது 42 ஆவது வயதிலே சொந்தமாக ஒரு கோட்டை யைக் கட்டவேண்டும் என்று கனவு காண ஆரம்பித்ததன் வெளிப்பாடே இந்தக் கோட்டை.


# முதலையும் செல்லப்பிராணி

ஆபிரிக்கா மக்கள் முதலைகளுடன் நெருங்கிய உறவைப் பேணிக்காத்து வருகின்றார்களாம். இவர்களின் வழிகாட்டலில் வளர்ந்த 12 அடிகள் நீளமான முதலை ஒன்று தனது இரண்டு கால்களில் மனிதர்களைப் போலவே எழுந்து நின்று வேடிக்கை காட்டுகின்றது.



# காராக மாறிய மரம்





# ஆசான்



பள்ளிப் பருவத்தில்
துள்ளித் திரிந்த-எமை
அள்ளி அணைத்து
தெள்ளு தமிழ் தந்த ஆசானே...!

குறும்புகள் நாம் செய்தபோதும்
கண்டிப்புடன் கல்வியையும்
கனிவுடன் கற்றுத் தந்து-எம்
வாழ்வில் புது ஒளி தந்தீரே...!

ஈரமான இதயம் கொண்டு
பூமிக்கு வந்த
மெய்யான தெய்வம்-உமை
போற்றுவேன் பிறவி உள்ளவரை...

கிரிசனா குணசிங்கம்
கெற்பேலி மத்தி, மிருசுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வலையவன்

# கிளிமஞ்சாரோ

## பின்னணி பற்றிய சில பதிவுகள்

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

இது தான், இது தான் நான் தேடிய இடம் எனக் குதித்தார். அங்கே அற்புதமாய் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு நகரே இருந்தது. இதுவே இன்றைய மச்சு பிச்சு ! இன்கா மக்களின் தொலைந்த நகரம் என அதை அவர் அழைத்தார்.

அந்த நகரின் மீது முளைத்திருந்த மரங்களுக்கு வயதாகியிருந்தது. மரங்கள் இடிபாடுகளுக்குமிடையே சத்தமில்லாமல் கிடந்தன.

இன்னோர் வியப்பு, அங்கும் ஒரு சில மனிதர்கள் உலகை விட்டு தனியே ஒழிந்து வாழ்ந்து கொண்டிருந்தனர்.

பங்காம் தனது யேல் பல்கலைக் கழகத்தை உதவிக்காக அணுகினார். பல்கலைக்கழகம் தேசிய சுற்றுச் சூழல் அமைப்புடன் கைகோர்த்து பங்காமுக்கு உதவியது.

அடுத்த ஆண்டே பங்காம் தேவையான உதவிகளுடன் இந்த இடத்திற்கு மீண்டும் வந்து அந்த நகரை, அதன் தன்மை கெடாமல் சுத்தம் செய்யத் தொடங்கினார். அந்த இடத்தைச் சுத்தம் செய்ய அவருடைய குழுவினருக்கு மூன்று ஆண்டு காலம் ஆனது !

அங்கிருந்து 173 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 150 பேர் பெண்கள்!. பெண்களைச் சூரியக் கடவுளுக்கு இவர்கள் பலியிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சுமார் ஆயிரம் பேர் தங்கியிருக்கக் கூடிய இடத்திலிருந்து வெறும் 173 எலும்புக் கூடுகள் மட்டுமே கிடைத்திருப்பது மேலும் பல கற்பனைகளுக்கு வழி வகுக்கிறது.

மற்றவர்கள் இந்தக் கோட்டைப் பணியாளர்களாக இருக்கலாம், அவர்கள் பள்ளத்தாக்குகளில் எறியப்பட்டிருக்கலாம், அல்லது வேறு எங்கேனும் புதைக்கப்பட்டிருக்கலாம், அல்லது வெளியேறியிருக்கலாம் என்பது அவற்றில் ஒன்று.

இந்தக் கால கட்டத்தில் ஆராய்ச்சிக்கென பல பொருள்களை பங்காம் அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார்.



அங்கிருந்து தங்கம் வெள்ளி எதுவும் கிடைக்கவில்லை எனவும், வெண்கலம், மரம் மற்றும் வேறு சில உலோகங்களாலான 521 பொருள்களைத் தான் கண்டெடுத்ததாகவும் பங்காம் தெரிவிக்கிறார்.

பங்காம் மறுத்தாலும், இந்த இடத்திலிருந்து ஏராளம் பொன், வெள்ளி போன்றவை கிடைத்திருக்க வேண்டும் என்றே பலர் கருதுகின்றனர்.

எவரும் அணுகாத, ஒரு பெரும் சாம்ராஜ்யம் நடந்திருக்கக் கூடிய வாய்ப்புடைய இந்த இடத்தில், மிக விலையுயர்ந்த பொருள்கள் ஏராளம் கிடைத்திருக்கக் கூடும் எனவும் அவை பங்காம் மூலம் பெரு நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என்பதே பலரின் நம்பிக்கை.

தற்போது யேல் பல்கலைக்கழக கண்காட்சியகத்தில் இருக்கின்ற மச்சு பிச்சுவின் மிச்சங்களையும், கலைப் பொருள்களையும் திரும்பவும் மச்சு பிச்சுவுக்கே கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அது இருக்கட்டும். நாம் வரலாற்றுக்கு வருவோம்.

மச்சு டிச்சு தான் வில்காபாம்பா என்று நினைத்து அனைத்தையும் செய்து கொண்டிருந்தார் பங்காம். ஆனால் உண்மையில் அது வில்காபாம்பா இல்லை! வில்காபாம்பா 1964ம் ஆண்டு ஜீன் சாவோய் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இந்த இடத்தை பங்காம் 1909ம் ஆண்டே கண்டார். ஆனால் இது ஏதோ முக்கியமற்ற ஒரு இடம் என நினைத்து அசட்டையாய் விட்டு விட்டார் !

1913ம் ஆண்டு மச்சுபிச்சுவுக்கு ஒரு ரயில் பாதை அமைக்கும் பணி ஆரம்பமானது. அது படிப்படியாக நடந்து 35 ஆண்டுகளுக்குப் பின் மச்சுபிச்சுவைச் சென்றடைந்தது.

1981ம் ஆண்டு மச்சுபிச்சு இருக்கும் இடத்தையும் சேர்த்து சுமார் 325 சதுர கிலோமீட்டர்களை பெரு அரசு வரலாற்று இடமாக அறிவித்தது. யுனெஸ்கோவின் அங்கீகாரம் இரண்டு ஆண்டுகளில் கிடைத்தது.

வில்காபாம்பாவைத் தேடிப்போன பங்காம் மச்சுபிச்சுவைக் கண்டுபிடித்தார். மச்சு பிச்சு என்ன ? அது ஏன் கட்டப்பட்டது ? போன்ற விவரங்கள் ஏதும் இல்லாமல் ஓர் மர்மத்தின் குழந்தையாய் கிடக்கிறது நகர்.

1450 களில் இந்த மச்சு பிச்சு கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு நூறு ஆண்டுகள் கூட நிறைவேறும் முன்பாகவே இந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டனர் இன்கா மக்கள்.

ஸ்பானியர்களின் படையெடுப்புக்கு முன்பே இந்த மச்சு பிச்சுவை விட்டு அவர்கள் வெளியேறியிருக்க வேண்டும். வறட்சியோ, நோயோ, அமானுஷ்ய பயமோ ஏதோ ஓர் பாதிப்பு இந்த நகரை விட்டுப் போக மக்களை நிர்ப்பந்தித்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர் ஆய்வாளர்கள்.

சில ஆய்வாளர்கள் மன்னன் மரணமடைந்ததை அடுத்த ஒருவேளைமக்கள் அந்த இடத்தை விரும்பாமல் இடம் பெயர்ந்திருக்கலாம் என்று கருதுகின்றனர்.

எத்தனையோ ஆண்டுகால கடின உழைப்பினால் கட்டப்பட்ட நகர், சில பத்து ஆண்டுகளிலேயே காலி செய்யப்பட்டதெனில் ஏதோ ஓர் மிக மிக வலுவான காரணம் இருந்தே ஆக வேண்டும் என்பதில் ஐயமில்லை.


இங்கிருந்து சுற்றும் முற்றும் பார்க்கும் போது இயற்கையே ஓர் அசையும் சொர்க்கமாக விழிகளுக்குள் நாட்டிய லயம் நடத்து கிறது. புதிய உலக அதிசயங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள மச்சுபிச்சு ஆனது உண்மையிலேயே உறையும் உண்மைகளையும், நிறையும் எழிலையும் கொண்டு ஒரு அதிசயமாகக் நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. ★

# தன்மானம் விற்று....

தீபாவளி பண்டிகைக் கொண்டாட்டங்கள் யாழ். நகரில் இந்த வருடம் சுமாராகக் களைகட்டியிருந்தது. யாழ். நகரில் மக்கள் வெள்ளம் போல் நிரம்பி வழிந்தது. புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதிலும், தமக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும் மக்கள் முண்டியடித்தனர்.

வீதிக்கு வீதி பொருள்களையும், ஆடைகளையும் கொட்டிக் குவித்து நடைபாதை வியாபாரம் யாழ். நகரில் அமோகமாக முளைத்திருந்தது. இதனால் சில வீதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை கூட ஏற்பட்டிருந்தது.

இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் தென்னிலங்கை சிங்கள, முஸ்லிம் வர்த்தகர்களே. எங்களது உள்ளூர் வியாபாரிகள் ஓரங்கட்டப்பட்டிருந்தனர். உள்ளூர் வியாபாரிகள் நடைபாதை வியாபாரம் செய்வதற்கும், கடைகள் நடத்துவதற்கும் வரியை அறவிடும், ஆளும் தரப்பின் ஆதரவுக் கட்சியின் வால் பிடிக்கும் சபை தென்னிலங்கை வியாபாரிகளிடம் ஒரு சதமும் வாங்கவில்லை.




மேலும் எங்களது உள்ளூர் வியா பாரிகள் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட் டால், அவர்களைக் கலைத்துப் பிடிக்கும் பொலிஸார் கூட தென்னி லங்கையிலிருந்து வந்த தங்களது சகோதரங்களுக்கு சலூட் அடித்தனர் நடைபாதை வியாபாரத்துக்கு ஏற்ப போக்குவரத்து ஒழுங்குகளை மாற்றியமைக்கவும் செய்தனர்.

இதே வேளை, யாழ்.நகரின் முக்கிய நகரங்களில் ஒன்றான தென்மராட்சியில், பிரதேச சபையினால் உள்ளூர் வியாபாரிகளின் நன்மை கருதி நடைபாதை வியாபாரத்துக்கு ஏற்ப வசதிகள் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட்டன. அதனால் உள்ளூர் வியாபாரிகள் ஓரளவுக்காவது நன்மை அடைந்தனர்.

யாழ். நகரில் பெருமளவான வியாபாரம் இடம்பெறுகின்ற இடத்தில் தென்னிலங்கையினருக்கு வாரிக் கொடுத்து தமது விசுவாசத்தை காட்டினர் தியேட்டர்காரரின் கட்சிக்காரர்கள். தன்மானத்தை விற்றுப் [illegible] இதுதானோ ?

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

உதயன் தினம் தினம் புதுமையுடன் வருவது கண்டு என் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. என்போன்ற வாசக உள்ளங்களைக் குதூகலப்படுத்துகின்றது. தொடர்ந்தும் உதயன் இதேபோல் வெளிவர வேண்டும். அப்பொழுது தான் உதயனைப் பார்க்க எமக்குத் தூண்டு கோலாக அமையும்.

உதயனே முச்சந்தி முரளியைக் காண ஆவலாகஉள்ளது. மேலும் கருத்துப்படங்கள், கேள்வி பதில், சினிமாப்பகுதி சண் அங்கிளின் நினைக்க, சிரிக்க, சிந்திக்க போன்ற நகைச் சுவைப் பந்திகளையும் தருவீர்களா?

முன்னைய காலங்களில் உதயனில் இந்த விடயங்கள் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. எனவே மீண்டும் இந்த விடயங்களை உள்ளடக்கி உதயன் வெளிவருவானா?

ந.மரியநாயகம்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ ★ ★

உதயன் வாசகனாகிய நான் நினைப்பதற்கேற்ப பல சுவாரஸ்யமான விடயங்களை வெளியிடுகிறாய். அந்த வகையில் இலக்கியத்தில் உதயனின் தரம் குறைவாகவே இருப்பதாக உணர்கிறேன். இலக்கியத்தில் சிறுகதை, கவிதை, கட்டுரைகள் நிறைய இன்றைய காலத்தை ஒட்டியதாக வெளிவரவேண்டும். வளர்ந்து வரும் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாக உதயன் வெளிவருவானா?

அந்தவகையில் இளம் கவிஞர்களின் கவிதைகளையும் பிரசுரிப்பானா? வளர்ந்து வரும் கவிஞர்களின் கவிதைகள் உதயனில் வெளிவரும் போது அவர்களை மீண்டும் எழுதத் தூண்டும் என்பது உண்மை.

இதன்மூலம் வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்குவித்து, அவர்களை வளர்க்க முடியும். இலக்கிய உலகில் அவர்களும் பங்கு கொள்வதற்கு உதயன் ஒரு ஏணிப்படியாக இருப்பான்.

எனவே எதிர்வரும் காலங்களில் உதயன் இலக்கிய பக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்ந்து வரும் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறோம்.


யாழினி, கரவெட்டி

★ ★ ★

அதிகாலை வரும் உதயனே
மாலையாகியும் ஒளிர்கின்றாய்
நாலா திசைகளிலும் இருந்து
வரும் செய்திகளை
வழங்குவதில்
தனியான ஒரு இடத்தினை
ஒதுக்கிக் கொள்வதில்
உன்னை நீயே
உயர்த்திக் கொள்கிறாய்.

விமலன், வதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ களஞ்சியன்

# சிரிக்கத் தெரிந்தவருக்கு வாழ்வில் நோய் வராது

சிரிக்கத் தெரிந்தால்தான் நகைச்சுவை உணர்வுவரும். ஆனால், நம்மில் பல பேருக்கு சிரிப்பின் நன்மை, ஆற்றல் பற்றி எதுவும் தெரியாது. கடனே என்று சிரிப்பவர்கள்தான் நம்மில் அதிகம்.

கழுதை அறியுமா கற்பூர வாசனை? அது மாதிரித்தான். நாம் சிரிப்பைப் பற்றி நன்றாக அறிந்தால்தான் வாழ்க்கையை நோய் நொடிகள் இல்லாத ஆரோக்கியமானதாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்டுசெல்ல முடியும். நான் சொல்வதைக் காதைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு கேளுங்கள்...!

நன்றாகச் சிரிப்பவர்கள், நோயின்றி வாழ்வார்கள். பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்து விடுவார்கள். சிரிப்பில் பலவிதம் இருக்கிறது.... மனதொன்றி வாய் விட்டுச் சிரிக்க. வயிறு குலுங்கச் சிரிக்கிறவர்கள் மனநோயை அண்டவிடமாட்டார்கள். வாழ்க்கையைப் புதிய கண்ணோட்டத்தில் அணுகி எதையும் இயல்பாக எடுத்துக் கொள்வார்கள்.

நாம் அதிகம் சிரிக்கும்போது என்டோர்பின் (Endorphin) என்ற ஹார்மோன் உடலில் சுரக்கும். இது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும். சுவாசிக்கும் முறையும் சீரடைந்து நுரையீரல் பலப்படும்.

புன்சிரிப்பு சிரிக்கும்போது, முகத்திலுள்ள தசைகளின் விறைப்புத் தளருகிறது. அதனால் பத்து வயது குறைந்தது போன்ற தோற்றம் ஏற்படும். கடுகடுவென்று சினம் கொள்ளும்போது முகத்துத் தசைகளில் 34 தசைகள் இயங்குகின்றன. ஆனால், புன்னகையின் போதோ, 13



தசைகள் மட்டுமே இயங்குகின்றன. புன்சிரிப்பு நல்லதுதான். ஆனால், வாய் விட்டு வயிறு குலுங்கச் சிரித்தல் அதனினும் நல்லது. அடிக்கடி வாய்விட்டுச் சிரிப்பவர்களுக்குத் தலையில் வழுக்கை விழுவதில்லை.

உளவியலார் சிரிப்பை நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கின்றனர். ''சீருடன் வாழச் சிரியுங்கள்'' என்னும் முதுமொழியை இன்றைய உளவியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

இன்றைய விஞ்ஞான மருத்துவத்தில் சிரிப்புக்கு முதலிடம் உண்டு. உடம்பில் குருதியைச் செலுத்துவது போன்ற நன்மை சிரிப்பால் ஏற்படுகிறது என்று சொல்லலாம். உடல், உள்ளம் இரண்டிற்கும் ஒருங்கே நலம் அளிக்கும் தன்மை கொண்டது சிரிப்பு.

உண்மையான சிரிப்பு, உள்வடிவச் சுரப்பிகளை மென்மையாக வருடிவிட்டு, அவற்றின் சுரப்பிகளைப் பெருக்குகிறது. குறிப்பாக இரைப்பை, குடல், கணையம் முதலிய உறுப்புகளில் உள்ள சுரப்பிகள் சிரிப்பால் ஊக்குவிக்கப்படுகின்றன. மூளையின் அடிபாகத்தில் பட்டாணிக்கடலை அளவில் இருக்கும் பட்யூட்டரி சுரப்பி, சிரிப்பினால் தூண்டப் பெறுகிறது. அதில் வளர்ச்சி உயிரணுக்கள் சரியான நுட்பமான இரத்தக் குழாய்களில் இரத்த ஓட்டத்தை விரைவுபடுத்தி மூளையைத் தெளிவு பெறச் செய்கின்றன.

மனதில் நிலைகொள்ளும் மகிழ்ச்சி, உடல் நோய்கள் அணுகாதவாறு காத்துக்கொள்ள உதவுகிறது. இவ்வுண்மையை மருத்துவ உலகம் பல நூற்றாண்டுகளாக அறிந்து வைத்துள்ளது. நோயாளிகள் சிரிப்பது, அவர்களுக்கு நன்மையை உண்டாக்குகிறது.

சிரிப்பு, குருதியிலுள்ள கொழுப்புச்சத்தின் அளவைக் குறைத்து நெஞ்சு நோய்க்கு மருந்தாக விளங்குகிறது என்பதை அண்மையில் சோவியத் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் அவர்கள் குருதி அழுத்த நோய்க்கும் இது நல்ல மருந்து எனத் தெரிவித்துள்ளனர்.

நகைச்சுவை நாடகங்களுக்குச் சென்று மகிழுங்கள் அல்லது நகைச்சுவை நூல்களைப் படித்து வாய்விட்டுச் சிரியுங்கள் என்று கூறுகின்றனர். உலகிலுள்ள மக்கள் அனைவரும் நகைச்சுவை உடையவர்களாகவும், மிகுதியாகச் சிரிப்பவர்களாகவும் இருப்பார்களானால் பல மருத்துவமனைகள், நலத்துறை நிலையங்கள் மூடப்படவும் நேரலாம்.

ஏன் வன்முறை, போர்களும் கூட ஒழிந்துவிடும் என்று புகழ்பெற்ற மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார் என்றால் சிரிப்பின் மாபெரும் ஆற்றலை என்னென்பது!...

நகைச்சுவை உணர்ச்சியில்லாமல் இயல்பான வாழ்வு கூட வாழ முடியாது. நகைச்சுவை உணர்ச்சியற்ற மனிதர்கள், எந்தத் தொழிலையும் வெற்றியுடன் செய்யமுடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இவ்வுண்மையை ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

பெரிய சிக்கல்களுக்குச் சிறந்த முடிவு காண சிரிப்பு உதவுகிறது என்று ரோமானியக் கவிஞர் ஹொரேஸ் கூறியுள்ளார்.

சிரிப்பில்லாத மனிதர்களுக்கு தன்னம்பிக்கை குறையும். நண்பர்கள் வட்டம் இருக்காது.

(தொடரும்)

# சோகம் சுமையல்ல!



■ இணையவன்


வாழ்க்கையில் நாம் அனைவரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதை மட்டுமே விரும்புகிறோம். ஆனால் முழுமையான வாழ்க்கை என்பது கடினமான பொழுதுகளையும் கூட அரவணைத்துச் செல்வதுதானே.. நம்மால் தவிர்க்க முடியாத ஒன்றைக் கண்டு ஏன் அஞ்சி ஒதுங்கவேண்டும். நாம் எப்பொழுதுமே, மகிழ்ச்சி, ஆக்கபூர்வமான எண்ணங்கள், சுயமரியாதை போன்றவைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, நம்முடைய வாழ்க்கையின் கடினமான பொழுதுகளைக் கையாள்வதில் சரியான பயிற்சியின்றி, கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை முழுமையடையச் செய்வதைக் கோட்டைவிட்டு விடுகிறோம்..

உண்மையாகவே, ஆக்கபூர்வமான உணர்வுகளே, உயர்வானவை என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனாலும் அவ்வப்போது வீசுகிற துன்பப் புயலையும், சோகச் சுமையையும், ஏமாற்றங்களையும் எவராலும் தடுக்கவே முடியாது என்பதுதான் நிதர்சனம். ஆனால் இது போன்ற தருணங்களே, மகிழ்ச்சி என்றால் என்ன, மன நிம்மதியில் எத்தனை சுகம் இருக்கிறது என்பதை உணரச் செய்யக்கூடியவை. வெய்யிலில் இருந்தால்தானே நிழலின் அருமை புரியும்?

ஆனால் இவையனைத்தும் நிலையான மகிழ்ச்சி எதில் இருக்கிறது என்பதை நாம் உணரும் வகையில்தான் இருக்கிறது! அர்த்தமுள்ள வாழ்க்கை மட்டுமே மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கை என்பதே அறிஞர்களின் தீர்க்கமான முடிவாக இருக்கிறது. தத்துவ அறிஞர் அரிஸ்ரோட்டிலின் கூற்றுப்படி, வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக்கொள்வதும், ஒரு நல்ல குடிமகனுக்குரிய கடமையில் தவறாதிருப்பதும், நற்குணங்களிலிருந்து தவறாமையும், உலகத்துடன் ஒன்றி வாழ்வதும், குறிப்பாக அன்பு மற்றும் நட்பின் உன்னதத்தை உணர்ந்தவராக இருப்பவர்களே மகிழ்ச்சியாக இருப்பவர்களாம்..

எல்லாம் சரிதான்.. உன்னதமானதுதான் மனித அன்பும், நட்பும் இல்லையா? ஆனால் சுகமான மலர் படுக்கையல்ல அது. மனித உறவுகள் என்றுமே நம் வாழ்க்கையை முழுமையடையச் செய்யக்கூடிய ஒன்றுதான் என்றாலும், இந்த உறவுகள் அடிப்படையில் குளறுபடியான ஒன்றாகவும், பல நேரங்களில் எதிர்பாராத ஏமாற்றங்களையும், தாங்கொணாத் துயரங்களையும் கொடுக்கவல்லதும், அந்த மனித உறவுகள் தான். அதிலிருந்து நாம் பெறுகிற பாடங்களும் அதிகம்தான்.

எங்காவது நாம் மறுதலிக்கப்பட்டாலோ, கொடூரமாக நடத்தப்பட்டாலோ, உடனே ஏதோ வாழ்க்கை நம்மை பரிவற்று, மோசமாக நடத்துவதாக எண்ணி வருந்த ஆரம்பித்து விடுகிறோம். இதுபோன்ற நேரங்களில்தான் நாம் ஏன் மகிழ்ச்சியையே நம் வாழ்க்கை இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பதை நினைக்கத் தோன்றும்.



மேலும்வருவதை ஏற்றுக்கொண்டு இயற்கையாக இருந்து விட்டுப் போகக் கூடாதா என்றும் தோன்றும். ஆனால் துன்பத்தைப் புறக் கணிப்பதும் மனித வாழ்க்கையின் ஒரு முக்கியமான அனுபவத்தை இழப்பது போலாகும். ஆம், மகிழ்ச்சியைப் போலவே துன்பமும் ஒரு ஆக்கப்பூர்வமான உணர்வு அல்லவா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org